விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 16 சனிக்கிழமை (01.09.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 257

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## பாதுகாப்பு வலயங்கள் மீது தாக்குதல் நடத்தப்படவில்லை!

### மகிந்த தெரிவித்ததாக விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

இறுதி யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் பாதுகாப்பு வலயங்களின் மீது ஷெல் வீச்சுக்கள் நடத்தப்படவில்லை என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

எனினும் அவரது சகோதரரான பசில் ராஜபக்ஷ, பாதுகாப்பு வலயங்களின் மீது சிலவேளைகளில் ஷெல் வீச்சுக்கள் நடத்தப்பட்டிருக்கலாம் என்று குறிப்பிட்டதாக அமெரிக்கத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

இறுதி யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் யுத்தப் பிரதேசத்தில் இருந்து மக்களுக்கான மருந்துப் பொருட்கள் விநியோகம் தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கூற்றுக்கு அமெரிக்கத் தூதரகம் கவலை வெளியிட்டிருந்தமை குறித்த தகவல் கசிந்துள்ளது.

விக்கிலீக்ஸ் இணையத் தளத்தில் இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்கும் இடையிலான (19ஆம் பக்கம் பார்க்க)

### சட்டவிரோத அவுஸ்திரேலிய பயணம்

## படகு கடலில் மூழ்கியது; தத்தளித்த 54 பேர் மீட்பு

### 100 பேரைக் காணவில்லை!

அவுஸ்திரேலியா நோக்கி சென்றுகொண்டிருந்தபோது படகு கவிழ்ந்த நிலையில் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த 54 பேர் காப்பாற்றப்பட்டு இந்தோனேசியாவின் மேற்கு ஜாவா தீவிலுள்ள மேராக் நகருக்கு நேற்று வெள்ளிக்கிழமை அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த ஹாசாரா இனத்தவர்கள் என நம்பப்படுகிறது. இப்படகு கடந்த புதன்கிழமை காலை கவிழ்ந்தது. இதில் பயணம் செய்த மேலும் சுமார் 100 பேர் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. இவர்கள் நீரில் மூழ்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இப்படகில் கசிவு ஏற்படத் தொடங்கியபோது அது இந்தோனேசியாவின் ஜாவாத் தீவில் இருந்து 8 கடல் (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையர்கள் காப்பாற்றப்பட்டனர்

(ஜகர்த்தா)

உணவு மற்றும் நீரின்றி கடந்த 9 நாட்களாக கடலில் தத்தளித்த படகு ஒன்றில் இருந்த 43 இலங்கையர்களை இந்தோனேசிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவர்கள் அவுஸ்திரேலியாவுக்கு பயணம் செய்யும் நோக்கில் சென்றபோது அவர்களின் படகின் (20ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேசத்தின் தலையீடு தவிர்க்கப்பட வேண்டும்

## அணிசேரா மாநாட்டில் ஜனாதிபதி தெரிவிப்பு

(தெஹரான்), ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் ஏனைய சர்வதேச நாடுகளின் தலையீடுகள் தவிர்க்கப்பட வேண்டும். இல்லையேல் அது குறித்த நாட்டின் இறைமையைப் பாதிக்கும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஈரானின் தலைநகர் தெஹரானில் நேற்று முன்தினம் ஆரம்பமான 10ஆவது அணிசேரா நாடுகளின் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார். (19ஆம் பக்கம் பார்க்க)

## பிலிப்பைன்ஸ் அருகே பாரிய பூகம்பம்

பிலிப்பைன்ஸுக்கு அருகில் நேற்றிரவு 7.9 ரிச்டர் அளவிலான பூகம்பம் ஏற்பட்டதால் பசுபிக் சமுத்திர கரையோர நாடுகளில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

பிலிப்பைன்ஸின் சமார் மாகாணத்தின் கியூவான் நகரில் இருந்து 91 மைல் கிழக்கே இப் பூகம்பம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்காவின் பூகோள அளவையியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த பிரதமர் ஜி.எல்.பீரிஸ்?

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸை அடுத்த பிரதமராக்குவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுவதாக மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேனவும், நிமல் சிறிபால டி சில்வாவும் தம்மையே பிரதமராக்க வேண்டும் என்ற பிடிவாதத்துடன் இருக்கும் நிலையில், இவர்கள் இருவரையும் தவிர்த்து ஜி.எல்.பீரிஸையே பிரதமராக்கும் நிலைப்பாட்டை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளார் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஈரான் – இலங்கை ஜனாதிபதிகள் சந்திப்பு

ஈரானுக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அந்நாட்டு அதிபர் முகமட் அகமட் நிஜாத்தினை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

அண்மையில் ஈரானில் இடம்பெற்ற பூமி அதிர்வில் கொல்லப்பட்டவர்களுக்காக ஜனாதிபதி மகிந்த ஈரான் அதிபரிடம் இரங்கலை வெளியிட்டுள்ளார்.

அணிசேரா நாடுகளின் தலைமைப் பதவி ஈரானுக்கு கிடைக்கப்பெற்றமை தொடர்பில் ஈரான் அதிபருக்கு வாழ்த்துக்களையும் ஜனாதிபதி மகிந்த தெரிவித்துள்ளார்.

ஈரானின் அனுசரணையுடன் இலங்கையில் முன்னெடுக்கப்படும் நீர்விநியோகத் திட்டம் தொடர்பிலும் சந்திப்பில் (20ஆம் பக்கம் பார்க்க)



## ரணில் இருக்கும்வரை மகிந்தவும் இருப்பார்!

(மட்டக்களப்பு)

ஐக்கிய தேசியக் கட்சியானது சஜித் பிரேமதாச, சரத் பொன்சேகா, கரு ஜயசூரிய, ரணில் என துண்டு துண்டாக பிளவுபட்டுள்ளது. இக்கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்க இருக்கும் வரை மகிந்த ராஜபக்ஷவே இந்நாட்டின் ஜனாதிபதியாக இருப்பார் என்று விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

புதிய காத்தான்குடி பதுறியா நகரில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அமைச்சர் (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவிற்கு ஏற்ற வகையில் இலங்கை நடந்து கொள்கிறது

### விக்கிலீக்ஸ் தகவல்

இந்தியாவை திருப்திப்படுத்தும் வகையில் இலங்கை நடந்து கொள்வதாக இந்திய வெளிவிவகார செயலாளர் சிவ்சங்கர் மேனன் குறிப்பிட்டதாக விக்கிலீக்ஸ் இணையம் தெரிவித்துள்ளது.

புதுடில்லிக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இடம்பெயர் மக்களைப் பார்வையிடுவதற்கு அனுமதி அளிக்குமாறு சர்வதேச சமூகம் விடுத்துவரும் கோரிக்கையை இலங்கை ஏற்றுக் கொண்டதா என இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதுவர், சிவ்சங்கர் மேனனிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

இடம்பெயர் மக்கள் விவகாரத்தில் தற்போதைக்கு இந்தியாவை திருப்திப்படுத்தும் வகையில் இலங்கை அரசாங்கம் செயற்பட்டு வருவதாக சிவ்சங்கர் மேனன் தெரிவித்திருந்தார்.

எனினும் இடம்பெயர் மக்களின் நலன்புரி மற்றும் நீண்டகால (20ஆம் பக்கம் பார்க்க)

## சூடானுடனான உறவுகளை பலப்படுத்துகிறது இலங்கை

### கோத்தபாயவின் பயணத்தில் இணக்கம்

சூடானுடன் பாதுகாப்பு விவகாரங்களில் நெருங்கிய ஒத்துழைப்பை ஏற்படுத்திக் கொள்ள இலங்கை முடிவு செய்துள்ளது.

இலங்கைப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, சூடானுக்கு மேற்கொண்டிருந்த பயணத்தின்போதே இதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

கடந்த 26ஆம் திகதி சூடானுக்கு அதிகார பூர்வ பயணத்தை மேற்கொண்ட இலங்கைப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, நேற்று முன்தினம் பயணத்தை முடித்துக் கொண்டு இலங்கை திரும்பியுள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷவுடன் இலங்கை இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் தயா ரட்ணாயக்க, யாழ்.படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க, அரச புலனாய்வுச் சேவையின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரண உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள் சூடான் சென்றிருந்தனர்.

இந்தக் குழுவினர் சூடானின் முக்கிய இராணுவப் பயிற்சி (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்






பொற்பதி சனசமூக நிலயத்தின் புதிய கட்டிடத்திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இந் நிகழ்விற்கு விருந் தினர்கள் அழைத்து வரப்படுவதையும் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் கட்டிடத்தை நாடா வெட்டி திறந்து வைப்பதையும் புதுப் பொலிவுடன் காணப்படும் சனசமூக நிலையத்தையும் படத்தில் காணலாம்.

# சந்நிதியான் பக்தர்கள் மீது இராணுவம் சோதனை!

(கரவெட்டி)

வடமராட்சி செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு சென்று விட்டு வீடுதிரும்பிய பக்தர்களை தொண்டைமானாறு பகுதியிலுள்ள இராணுவச் சோதனைச் சாவடிகளில் வாகனங்களை வழிமறித்து பதிவுகளை மேற்கொண்டு சோதனையிட்டதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சியில் பிரசித்தி பெற்ற வரலாற்று சிறப்பு மிக்க செல்வச்சந்நிதி முருகன் ஆலய தேர்த்திருவிழா நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது.

இங்கு நாட்டில் பல பகுதியிலுமிருந்து வந்த பக்த அடியார்கள் முருகப்பெருமானை தரிசித்து விட்டு வீடுதிரும்பிய வேளையே இச் சம்பவம் இடம்பெற்றதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இரவு வேளையே இச் சோதனை நடவடிக்கை இடம்பெற்றதாகவும் இதனால் தூர இடங்களுக்குச் சென்ற மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் கொண்டதாகவும் தெரிய வருகிறது. (ந-3,24)

# டிப்பர்-மோ.சைக்கிள் விபத்தில் பரிதாபகரமாக இளைஞன் பலி

(சாவகச்சேரி)

டிப்பர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதிய விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 8 மணியளவில் சாவகச்சேரி நகருக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து தெரிய வருவதாவது, யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கி சென்ற மோட்டார் சைக்கிளும், யாழ்ப்பாணத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த டிப்பர் வாகனமும் ஒன்றுடன் ஒன்று மோதியதிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் யாழ்ப்பாணம் கொட்டடி சோழபுரத்தைச் சேர்ந்த தில்லைப்பதி தயாகரன் (வயது 23) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைக்காக சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வரு கின்றனர். (ந-3,29)

**காணி விற்பனைக்கு**

பருத்தித்துறை கிராமக் கோட்டில் ஒன்றேகால் பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர்

தொடர்புகளுக்கு:-

**0779834845**

(306)

# பிரபாவின் வீட்டில் விழுந்த பெண் சிகிச்சை பலனின்றி மரணம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வீட்டைச் சுற்றிப்பார்த்துக் கொண்டிருந்த கொழும்பைச் சேர்ந்த வயோதிபப் பெண் ஒருவர் அவ் வீட்டுக்குள் தவறி விழுந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதையடுத்து உயிரிழந்துள்ளார்.

கொழும்பைச் சேர்ந்த ஸ்ரீயலதா (வயது 56) என்ற வயோதிபப் பெண்ணே யாழ்.வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தவராவார்.

கடந்த 25ஆம் திகதி முல்லைத்தீவு, புதுகுடியிருப்பில் இருக்கும் பிரபாகரனின் வீட்டை சுற்றி பார்க்க தனது குடும்பத்தினருடன் சென்றிருந்த மேற்படி பெண், அவ் வீட்டிற்குள் தவறி விழுந்த நிலையில் அவரது தலையில் பலமாக அடிபட்டுள்ளது.

இந் நிலையில், அவர் மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதையடுத்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

இந் நிலையிலேயே அவர் நேற்று வெள்ளிக்கிழமை காலை சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளார். இதேவேளை, அண்மைக் காலமாக தென்னிலங்கையிலிருந்து ஏராளமான மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தங்கியிருந்ததாக கூறப்படும் புதுக்குடியிருப்பில் உள்ள வீட்டை பார்வையிடுதற்காக சுற்றுலா செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-11)

**தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்**
**அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு பிற்போடல் தொடர்பானது**

முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் கழக மாவட்ட சம்மேளன வளர்ச்சி நிதி சேகரிப்பதற்காக.01.09.2012 (சனிக்கிழமை) நடைபெறவிருந்த மாபெரும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 10.10.2012 (புதன்கிழமை) மாங்குளத்தில் உள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட காரியாலயத்தில் நடைபெறும்.

தலைவர் : எஸ்.தவசீலன், இளைஞர் கழக மாவட்ட சம்மேளனம்.

# முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களின் வாகனங்கள் மீது தாக்குதல்!

(அக்கரைபற்று)

அக்கரைப்பற்றில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹஸன் அலி, எச்.எம்.எம்.ஹரிஸ் ஆகியோரின் வாகனங்கள் மீது நேற்று மாலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாகாண சபை தேர்தல் வேட்பாளர்களும் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்திற்கு அருகில் சத்தியாக் கிரகத்தில் ஈடுபட்டனர்.

மாகாண சபைத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாகனத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்திலிருந்து சுமார் 100 மீற்றர் தூரத்தில் இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இத் தாக்குதலில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு காயம் எதுவும் ஏற்படாத போதிலும் அவர்களின் வாகனங்கள் சேதமடைந்ததாக அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (ந-11)

**விற்பனைக்கு**

Viedo Camera Sony 2100C
D90 Nikon
D80 Nikon
D200 Nikon
Sony DVC Camera சிறியது வீடியோ கமரா, ஸ்ரான், புரோலைட் பைக்கிறேன் கேட்டின் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :
Tel :- 0757932877, 0773450036

(325)

**'EASY ENGLISH'**
(Levels : One / Two / Three)
வகுப்பு : 31.08.2012 / Phone : 773 212 711

**திருவருள்மிகு**
**வெற்றிலைக்கேணி முள்ளியான் மண்டலாய்ப் பிள்ளையார் தேவஸ்தான**
**வருடாந்த மணவாளக்கோல (108) சங்காபிஷேக விஞ்ஞாபனம் (02.09.2012) ஞாயிற்றுக்கிழமை**



நாட்டு நிலைமை காரணமாக புலோலி மேற்கு வத்தனைப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் வழிபட்டு வரப்படும் மண்டலாய்ப்பிள்ளையாருக்கு மேற்படி ஆலயத்தில் ஆவணித்திங்கள் 17ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (02.09.2012) பகல் 11 மணியளவில் 108 சங்காபிஷேக கிரியைகள் ஆரம்பமாகித் தொடர்ந்து விஷேட பூசை வழிபாடுகளும் மகேஸ்வர பூஜையும் இடம்பெறும். எம்பெருமான் மெய்யடியார் அனைவரும் இவ் நிகழ்வுகளில் கலந்து எம்பெருமான் அனுக் கிரகம் பெற்றிடுமாறு அன்புடன் வேண்டுகிறோம். இந்த அபிஷேக, பூஜையில் பங்கு கொள்ள விரும்பும் அடியார்கள் மூன்று நாட்களுக்குமுன் ஆலய குருக்களுடன் தொடர்பு கொள்ளவும்.

*விஷேட மங்களவாத்திய இசை*

பருத்தி நகர் - முருகதாஸ் குழுவினர்
நெல்லியடி - ஜீவரட்ணம் குழுவினர்

முக்கிய குறிப்பு :-

மண்டலாய்ப் பிள்ளையார் ஆலயத்தின் நித்திய பூசை ஆரம்பித்தலும் திருப்பணிச் சபை ஒன்றை உருவாக்குதலும். ஆலயத்தைப் புனர்நிர்மாணம் செய்வது தொடர்பில் ஆலய முன்றலில் விஷேட பொதுக்கூட்டம் (07.09.2012) வெள்ளிக்கிழமை பகல் 10 மணியளவில் இடம்பெறும். எம்பெருமான் மெய்யடியார்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
சிவஸ்ரீ இ.மண்டலேஸ்வரகுருக்கள்
மண்டலாய்ப் பிள்ளையார் தேவஸ்தானம்.
T.P. :- 0779791044

இலங்கை வங்கி
கணக்கு இலக்கம் : 53592

(C-894)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## எதிரிகளுக்கு எச்சரிக்கை

"இருள் கௌவிக் கொண்டது. ஒரு இளம் பெண் தனியாக வெளியிலே போக வேண்டியிருந்தது!

"ஜாக்கிரதையாக போய் வா" என்று வீட்டிலே இருக்கும் பெரியவர்கள் எச்சரிப்பது வழமையான காரியமாகும்.

"கவலைப்படாதீர்கள்... வாடகைக்கு ஒரு நாயை வாங்கி துணைக்கு அழைத்துக் கொண்டு போகிறேன்" என்று அந்தப் பெண் சொன்னாள்.

இப்படியாகச் சொல்வது நமக்கு வேடிக்கையாக இருக்கலாம். ஆனால், அமெரிக்காவிலே இது சர்வ சாதாரணம்.

ஆமாம்! அமெரிக்காவிலே... பாதுகாப்பிற்காக இராட்சத நாய்களை வளர்த்து வாடகைக்கு விடுகிறார்கள்.

தமக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று நினைப்பவர்கள் இந்த நாய்களை வாடகைக்கு எடுத்துக் கொண்டு போகலாம்... அதன்பின் திரும்பிக் கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும்.

நூற்றுக்கணக்கில் நாய்கள் இருக்கிறது. எல்லாம் நன்றாகப் பழக்கப்பட்ட நாய்கள். யார் அழைத்துச் செல்கிறார்களோ அவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும். எதிரிகள் வந்தால் ஒரே பாய்ச்சல்தான்... கழுத்தைப் பிடித்து குதறிவிடும். இதுவரைக்கும் பதினோராயிரம் தடவைகள் "பாடிகார்டு" வேலைக்குப் போய் வந்திருக்கிறது இந்த நாய்கள்.

இதேபோல் அமெரிக்காவில் இன்னொரு கடிகாரம் கூட விற்பனைக்கு வந்துள்ளது. இதை வாங்கி வாசலிலே பொருத்தி விட்டால் போதும். திருடன் வாசல் கதவிலே வந்து கையை வைத்தால் போதும்... அவ்வளவுதான். இது உடனே நாய் மாதிரியே "வள்... வள்... வள்..." என்று குரைக்க ஆரம்பித்துவிடும்.

நிஜமாக நாய்தான் சத்தம் போடுகிறது என்று நினைத்து திருடன் பயந்து ஓடி விடுவான்.

மனிதனிடம் இருந்து மனிதன் தப்பிக்கொள்ள சில சாதனங்கள் வந்துள்ளன.

"ஷாக் கன்" (Shock Gun) என்ற அதிர்ச்சித் துப்பாக்கி உள்ளது. யாராவது எதிரி வந்து விட்டால்... உடனே இந்தத் துப்பாக்கியை எடுக்க வேண்டியதுதான்.

பல அடுக்குமாடி வீடுகளில் அவசரத்திற்கு உதவி தேடி வெளியே ஓட முடியாது. எதிரிகளிடம் இருந்து தப்பிக் கொள்ள முடியாது. இப்படியான சமயத்திலே எப்படி தப்பிக் கொள்வது?

இதற்காக கம்பனியொன்று கடிகாரம் மாதிரி ஒரு கருவியைத் தயாரித்துள்ளார்கள். அதனை வீட்டு உரிமையாளர்கள் வாங்கி வீட்டினுள் பொருத்த வேண்டியதுதான். எதிரி வந்து விட்டான் என நமக்குத் தெரிந்து விட்டால் இந்த மணிக்கூட்டின் பட்டினை அழுத்த வேண்டியதுதான். ஒருவிதமான சத்தம் அதிலிருந்து வெளிவரும். காது சவ்வு கிழிந்து போகும் அளவிற்கு அதன் ஒலி இருக்கும். ஒரு ஜெட் விமானம் எமது அருகில் வந்து காதை உரசிக்கொண்டு போகும்போது எழும் ஒலி மாதிரி அமையும்.

இன்னொரு வகை "ஸ்பிரே" சந்தைக்கு வந்துள்ளது. அதிலிருந்து ஒரு கொடுமையான துர்நாற்றம் உண்டாகும். திருடன் வரும் வேளை யில் இதை ஸ்பிரே செய்துவிட்டால், துர்நாற்றம் தாங்க முடியாமல் திருடன் மயங்கி விடுவான். அப்படியான ஒரு கொடுமையான நாற்றம்.

என்ன செய்வது... காலத்தின் தேவையாகவும் கட்டாயமாகவும் உள்ளது. காலம் போகும் போக்கில் இப்படியெல்லாம் கருவிகளை வைத்திருந்தால்தான் மனிதர்கள் மத்தியிலே காலம் தள்ள முடியும்.

ஒரு வீட்டிலே இப்படித்தான் ஒரு "பதிலடி ஸ்பிரே" துர்நாற்றம் தாங்க முடியாமல் ஒரு நபர் மயங்கி விட்டார்.

உடனே பொலிஸார் ஓடி வந்து அவரைப் பிடித்து தூக்கி நிறுத்தி, "நட ஸ்டேஷனுக்கு" என்று கூறியுள்ளார்கள்.

"சேர்!... ஸ்பிரேயரில் எது முன்பின் என்று தெரியாமல் அடித்து விட்டேன். நான் திருடன் இல்லை... வீட்டு உரிமையாளர்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சிங்கள மீனவர்களின் குடியேற்றத்தை தடுத்து நிறுத்த எவரும் முன்வரவில்லை

## முல்லை.மீனவர்கள் குமுறல்

(முல்லைத்தீவு)

இலங்கை அரசாங்கத்தினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுவரும் சிங்கள மீனவக் குடும்பங்களின் குடியேற்றங்களினால் தாம் வாழமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளதோடு சிங்கள மீனவக் குடும்பங்களின் குடியேற்றத்தை தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கையில்,

யுத்தத்தினால் பாரியளவில் அழிவுகளை எதிர்கொண்டு சொந்த இடங்களை விட்டு அகதிகளாக வெளியேறி முகாம்களிலும் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் நீண்ட காலமாக எந்தவித அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படாத நிலையில் பல இன்னல்களை நாளாந்தம் எதிர்கொண்டு வாழ்ந்து வந்த எம்மை மீள்குடியேற்றம் செய்தனர்.

ஆனால், இடம்பெயர்ந்து சென்ற போது எவ்வாறு இன்னல்களை எதிர்கொண்டமோ அதேபோன்று மீள்குடியேற்றப்பட்ட பின்னரும் எமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த பரிதவித்து வருகின்றோம்.

இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகள் ஒருபுறம் எமது தொழில் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தி எமது வயிற்றிலடிக்க மறுபுறம் தென்பகுதி மீனவர்கள் வந்து எமது கடற்தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதோடு குடியேறியும் வருகின்றனர்.

சிங்கள மீனவக்குடும்பங்களை மீள்குடியேற்றுவார்கள். இங்கு எப்போது அவர்கள் குடியிருந்தார்கள், எப்போது இடம்பெயர்ந்து சென்றார்கள் என்பதை தெரியப்படுத்துங்கள்.

எமக்கு சொந்தமான பிரதேசத்தில் தொழில் செய்து எம்மை வாழ விடாது பலர் இடர்பாடுகளைக் கொடுத்துவிட்டு சிங்கள மீனவக் குடும்பங்களை குடியேற்றுகின்றனர். இதனைத் தடுக்க எவரும் முன்வரவில்லை.

யுத்தத்தால் எல்லாவற்றையும் இழந்து உயிர்களுடன் மட்டும் திரும்பி வந்த எமக்கு அடிப்படைத் தேவைகள் கூட இன்னும் செய்து கொடுக்கப்படவில்லை. அரசாங்கமும் எந்தவித உதவியும் வழங்கவில்லை. சர்வதேச சமூகமும் வழங்கவில்லை.

இது இவ்வாறு இருக்கையில் தொழில் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் மீண்டும் பாஸ் நடைமுறையை ஆரம்பிக்கப்போவதாக படைத்தரப்பினர் கூறுகின்றனர்.

ஆனால், சிங்கள மீனவர்கள் தென்பகுதியில் தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்தோடு நின்று விடாது சிங்கள மீனவக் குடும்பங்கள் குடியேறுவதற்கு ஏற்ற வசதிகளை செய்து கொடுக்கின்றனர்.

குறிப்பாக கொக்கிளாய், நாயாறு கடற்கரை பிரதேசங்களில் மீனவக்குடும்பங்களை குடியேற்றி அவர்களுக்கான வீடுகள், மலசல கூட வசதிகள், பாடசாலைகள் என்பன அமைத்துக் கொடுக்கும் பணியிலும் படைத்தரப்பினர் ஈடுபட்டுள்ளனர்.

அத்தோடு இந்தப் பிரதேசத்தில் அவர்கள் முன்பு வாழ்ந்தனர் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் நிரந்தர குடும்பப் பதிவுகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

பருவ காலத்திற்கு மட்டும் வந்து மீன்பிடியில் ஈடுபட்டவர்கள் தற்போது அத்துமீறி குடியேறி நிரந்தரப் பதிவுகளையும் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் அந்தப்பகுதி மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (அ-6)

## இராசி பலன்

01.09.2012
(ஆவணி 16, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
பிரதமை முன்னிரவு 8.06 மணிவரை
சதயம் காலை 6.54 மணிவரை
இராகுகாலம் 9.05-10.35 மணிவரை
சுபநேரம் 3.05-4.35 மணிவரை

**மேடம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், முக்கிய பிரமுகர் ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், புகழ் கூடும்.

**இடபம்** கூட்டுத் தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், நண்பர்கள் உதவி செய்ய முன்வருவர், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுவீர்கள்.

**மிதுனம்** மாற்றுக்கருத்துடையோர் மனம் மாறுவர், தந்தை வழியில் தனவரவுகள் ஏற்படலாம், உங்களின் கடின உழைப்பை சூற்றவர்கள் வியப்பாக பார்ப்பார்கள், புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**கடகம்** உதவுவதாகச் சொன்ன உறவினர்கள் உங்களை விட்டு விலகலாம், குடும்பத்தில் சில கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது.

**சிங்கம்** மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், இனசனத் தொடர்புகள் அதிகரிக்கும், கனவு பலிதமுண்டு, புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**கன்னி** கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், புதிய சிந்தனைகள் தோன்றும், சுவாரஸ்யமான நாள், முயற்சி கைகூடும்.

**துலாம்** புதிய தொழில் தொடங்க எடுத்த முயற்சி வெற்றி தரும், பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் ஆர்வம் காட்டுவீர்கள், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள்.

**விருச்சிகம்** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தோன்றும், தாய்வழி ஆதரவு பெருகும், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**தனுசு** உடன்பிறப்புக்களின் ஒத்துழைப்பால் உற்சாகம் அடையும் நாள், சுவாரஸ்யமான நாள், பயணங்களால் பலனுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி காண்பீர்கள்.

**மகரம்** காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கலாம், புத்திசாதுரியமாக செயற்பட்டு காரியம் சாதிப்பீர்கள், தாராளமாகச் செலவு செய்து மகிழும் நாள், போசன சுகமுண்டு.

**கும்பம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், மறக்க முடியாத இனிய சம்பவமொன்று இடம்பெறலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**மீனம்** உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம், புதிய பொறுப்புக்களால் வேலைச்சுமை அதிகரிக்கும், சயன சுகக்குறைவான நாள்.

வளவன்

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 110 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 40 | 70 | 80 | 80 |
| தக்காளி | 30 | 60 | 50 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 | 40 |
| கோவா | 80 | 70 | 65 | 65 |
| கரட் | 110 | 110 | 100 | 130 |
| பூசணி | 30 | 30 | 30 | 40 |
| புடோல் | 30 | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 45 | 60 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 80 | 80 |
| பெரிய வெங்காயம் | 70 | 70 | 70 | 70 |
| பாகற்காய் | 70 | 70 | 80 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 | 50 |
| கருணைக் கிழங்கு | -- | 80 | 90 | -- |
| பயற்றங்காய் | 80 | 60 | 60 | 40 |
| லீக்ஸ் | 100 | 140 | 100 | 100 |
| பீற்றூட் | 40 | 60 | 40 | 60 |
| கறிமிளகாய் | 100 | 50 | 70 | 80 |
| முருங்கைக்காய் | 30 | 40 | 100 | 40 |
| போஞ்சி | 120 | 110 | 110 | 100 |
| கத்தரிதம்புள்ள | 40 | 70 | 60 | -- |
| கீரை - 1 பிடி | 10 | 10 | 15 | 20 |
| தேசிக்காய் | 200 | 160 | 100 | 180 |
| தேங்காய (ஒன்று) | 20-25 | 30 | 20 | 20-25 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்கிறது வரட்சி; குடிநீருக்காக நெருஞ்சிமுனை பகுதி மக்கள் அலைச்சல்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை நெருஞ்சிமுனை பகுதி வாழ் மக்கள் குடிதண்ணீர் தட்டுப்பாட்டினால் பெரும் அவலத்தினை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த கிராமத்தில் 500 குடும்பங்களுக்கும் அதிகமானவர்கள் வாழ்கின்றனர். அவற்றில் 58 குடும்பங்களுக்கு ஒரு தண்ணீர் தாங்கி என்ற ரீதியில் ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் குடிநீர் விநியோகம் செய்யப்படுகின்றது.

இந்நீர் விநியோகம் இரு நாட்களுக்கு ஒரு தடவை சுழற்சி முறையில் இடம்பெற்று வருவதாகவும் அதில் ஒரு குடும்பத்திற்கு இரு நாட்களிற்கு 30 லீற்றர் வரையான குடிதண்ணீரே வழங்கப்படுகின்றது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பகுதிகளில் வைக்கப்பட்டுள்ள தண்ணீர் தாங்கிகளின் கொள்ளளவு 3 ஆயிரம் லீற்றராக காணப்படுகின்ற போதும் அதில் அரைவாசிக்கே (1500 லீற்றர்) குடிதண்ணீர் நிரப்பப்படுகின்றது எனவும் அம் மக்கள் கூறுகின்றனர்.

இதனால் குடிப்பதற்கே தண்ணீர் போதியதாக காணப்படாத நிலையில் சமையல் தேவைகளுக்கு நாம் பெரும் அவலப்பட வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். ஒரு நாளைக்கு மனிதன் சராசரியாக 6 லீற்றர் தண்ணீர் குடிக்க வேண்டும் என மருத்துவம் கூறுகின்றது. எனினும் நாம் நீரையும் மருந்தாக பாவிக்க வேண்டிய அவல நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

மேலும் நீண்டகாலமாக குறித்த பகுதிக்கு மின்சாரம் இல்லாத நிலையில் தற்போது மந்த கதியில் மின்சார இணைப்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

தற்போதைய வரட்சிக் காலத்திலும் குடிநீர் விநியோகத்தின் அளவு அதிகரிக்கப்படாததனால் மிகநீண்ட தூரத்திலுள்ள ஊர்காவற்றுறை சிவன் கோவில் கிணற்றுக்கே செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. தற்போது உப்பு நீர் கிணறுகளும் வற்றியுள்ளது. தண்ணீருக்காக போராடும் எம்மை உரியவர்கள் கண்டு கொள்வார்களா? என அப்பகுதி மக்கள் கேள்வியெழுப்புகின்றனர். (அ-4)

## கட்டடங்கள் திறந்து வைப்பு

(தனங்கிளப்பு)

மீள்எழுச்சித் திட்டத்தின் கீழ் மறவன்புலோ கிராம சேவகர் பிரிவில் கிராமத்தின் வடக்குப் பகுதியில் முன்பள்ளி கட்டடமும் கிழக்குப் பகுதியில் பொதுநோக்கு மண்டபமும் நிர்மாணிக்கப்பட்டு கடந்த 29 ஆம் திகதி புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இக்கட்டடத்தினை ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர்களும் ஈழமக்கள் ஜனநாயக கட்சி தென்மராட்சி பகுதியின் பொறுப்பாளர் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (அ-3-37)

## சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 28 பேருக்கு 21 இலட்சம் ரூபா அபராதம்

(கரவெட்டி)

வடமராட்சிப் பிரதேசத்தில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 28 நபர்களிடம் 21 இலட்சம் ரூபா அபராதம் விதித்து பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தீர்ப்பளித்துள்ளது.

கொழும்பு மின்சாரசபையின் தலைமைக் காரியாலய மின்சார விசேட விசாரணைப் பிரிவினர் 6பேர் கொண்ட குழுவினர் கடந்த 22 ஆம் திகதி முதல் வடமராட்சி பிரதேசத்தில் தங்கியிருந்து சட்டவிரோத மின்சாரம் பெற்றவர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்தனர்.

இதில் வடமராட்சி பிரதேசத்தில் பல பகுதிகளிலும் மேற்கொண்ட தேடுதல் வேட்டையில் மின்சார சபைக்கு நட்டஈடாக 16 இலட்சத்து 4ஆயிரத்து 585 ரூபா, நீதிமன்றிற்கு நட்டஈடாக 5 இலட்சத்து 17 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர்களை பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

குறித்த நபர்களை விசாரணை மேற்கொண்ட நீதவான் வல்வெட்டித்துறைப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு அதிகூடிய தொகையாக 2 இலட்சத்து 29 ஆயிரத்து 640 ரூபாவும் நட்டஈடாக 50 ஆயிரம் ரூபாவும் அபராதம் செலுத்த உத்தரவிட்டார்.

விசேட விசாரணைப் பிரிவில் எதிர் வீரசிங்கா தலைமையிலான குழுவினர்களான சில்வா, சத்தியசீலன், திசாநாயக்கா, கல்லங்கா, ஜெயபா போன்றோரே விசாரணைகளை மேற்கொண்டு வழக்கைத் தாக்கல் செய்தனர். (அ-3-24)




## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்வதற்காகவும் காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து சுன்னாகம் மின்நிலையத்திற்கு பாரிய வாகனங்கள் மூலம் பொருட்களை கொண்டு வருவதற்காகவும் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் இடையிடையே பின்வரும் பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று சனிக்கிழமை சுன்னாகம், பலாலி வீதியில் புன்னாலைக்கட்டுவன் முதல் பலாலி வரையான பிரதேசம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதி, திருநெல்வேலிப் பிரதேசம், பரமேஸ்வரா பிரதேசம், கந்தர்மடப்பிரதேசம், ஆரியகுளம் பிரதேசம், ஸ்ரான்லி வீதி, கொன்வென்ட் பிரதேசம், யாழ்.பிரதான வீதி, குருநகர், பாசையூர், மந்திகை, சாரையடி, பருத்தித்துறை நரகப் பிரதேசம், தென்மராட்சிப் பிரதேசம் முழுவதும் ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

## நாடகத்தை ஆற்றுகை செய்யவிரும்புவோர் தொடர்பு கொள்ளலாம்

பாரம்பரிய கலைகளை வளர்க்கும் நோக்குடன் புராண நாடகங்களாகிய வள்ளி திருமணம், நந்தனார், பவளக்கொடி, சத்தியவான் சாவித்திரி ஆகிய இசை நாடகங்களும் காத்தவராஜன் என்னும் சிந்து நடைக் கூத்தும் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது.

இவற்றினை ஆற்றுகை செய்ய விரும்புகின்ற ஆலயங்கள், சனசமூக நிலையங்கள், மன்றங்கள், நிறுவனங்கள் இல 84, செயலாளர், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம், பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு அதன் செயலாளர் அறிவித்துள்ளார். (அ)

## கண்காணிப்புக் குழுக்கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

சுகாதார திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான செப்டெம்பர் மாதத்திற்குரிய மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பணிமனை பிராந்திய பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இம்மாதாந்த கூட்டமானது எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. இக்கூட்டத்திற்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும். (அ-9)

## யாழ்.மாநகர சபையில் அரசியல் கைதிகள் விடுதலை குறித்த பிரேரணை நிறைவேறியது

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ்.மாநகர சபையில் நேற்று கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஆளும்-எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேறியது.

யாழ்.மாநகரசபையின் இந்த மாதத்திற்கான மாதாந்தப் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின்போது யாழ்.மாநகர சபையின் ஆளும் கட்சி உறுப்பினரும் தமிழ் அரசியல் கைதியுமான மு.கோமகன் மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி பிரேரணையொன்று கொண்டு வரப்பட்டது.


அந்தப் பிரேரணையில் நீண்டகாலமாக உறவுகளைப் பிரிந்து சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விரைவுபடுத்தப்பட வேண்டும்.

இலங்கையில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இடம்பெற்ற யுத்தம் நிறைவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்த நிலையில் யுத்தத்தின் எச்சங்களாக தமிழ் அரசியல் கைதிகள் சிறைகளில் உள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிப்பதற்காக கொண்டு வரப்பட்ட யோசனைக்கிணங்க சகல தமிழ் அரசியல் கைதிகளும் தமது விருப்பத்தினை தெரிவித்து காத்திருக்கின்றனர்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக இலங்கையிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் எமது மாநகர சபை ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியது.

இதற்கு சகல உறுப்பினர்களும் ஒத்துழைத்துள்ளனர். இதனைப் போல் வேறு உள்ளூராட்சி மன்றங்களிலும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அந்தப் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (எ-6)







வடமாகாண ஆளுநரின் ஏற்பாட்டில் வடமாகாண கல்வியமைச்சு நடத்திய க.பொ.த. (உ/த) வகுப்பு மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி நெறியின் இறுதிநாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் யாழ்.தேசிய கல்வியியற்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மாணவி ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நாட்டின் உள்ளக விவகாரத்தில் பிறநாடுகள் தலையீடு செய்யக் கூடாது

## அணிசேரா நாடுகளின் மாநாட்டில் ஜனாதிபதி உரை

(கொழும்பு)

அரசாங்கம் அனைத்து விதமான பயங்கரவாதத்திற்கு எதிரான பல்முனை பிரயத்தனங்களுக்கும் ஆதரவளிக்கும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

16 ஆவது அணிசேரா நாடுகளின் மாநாட்டில் நேற்றுமுன்தினம் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமாதானம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை மேம்படுத்தும் நடவடிக்கைகளுக்கும் தாம் தொடர்ந்தும் முழுமையான ஆதரவை வழங்கவுள்ளது.

இதேவேளை பூகோள ரீதியாக அனைத்து நாடுகளும் பயங்கரவாதத்தினால் அச்சுறுத்தப்பட்டுள்ளன.

சவால்களுக்கு மத்தியில் ஒன்றிணைந்த நிர்வாகத்தின் ஊடான நிலையான சமா தானம் என்ற தொனிப்பொருளில் இந்தமுறை அணிசேரா நாடுகளின் மாநாடு இடம் பெறுகிறது.

பயங்கரவாதத்தை முறியடிப்பதற்கும் அதன்பின்னரான சவால்களை வெற்றி கொள்வதற்கும் தமது அரசாங்கத்தாலும் மக்களை அடிப்படையாகவும் கொண்ட செயற்பாடு ஒன்று அவசியமாக உள்ளது.

பயங்கரவாத அச்சுறுத்தல்களுக்கு உட்பட்டிருக்கும் நாடுகளுக்கு ஏனைய சர்வதேச நாடுகள் ஆதரவளிக்க வேண்டும்

அதேவேளை இரட்டைக் கொள்ளை மற்றும் ஒரு தரப்பினருக்கு மாத்திரம் பலனைத் தரக்கூடிய விடயங்கள் இதன்போது உள்ளடங்கியிருக்கக்கூடாது.

இதுதவிர ஐக்கிய நாடுகள் சபையின் கொள்கைகள், அணிசேரா நாடுகளின் கொள்கை என்பவற்றில் உள்ளவாறு ஒரு நாட்டின் உள்ளக விவகாரங்களில் பிறநாடுகள் தலையீடு செய்யக்கூடாது என்ற வாசகத்தை அவதானமாக கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் இதன்போது வலியுறுத்தியிருந்தார். (அ-2)

YARL Taxi
யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்
021 222 1919
MOB:-0759751919
1st Km-60/-
2nd Km-40/-
இங்கு முச்சக்கரம் மற்றும் கார்களிற்கு Win Win Lanka வினால் கட்டண மீற்றர் பொருத்திக் கொடுக்கப்படும்
36,கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:-021 222 1919 , 075 975 1919
E.mail:-yarltaxi@gmail.com

# தாக்கிய கும்பலில் ஒருவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

வீட்டுக்குள் புகுந்து இரு முதியவர்களை தாக்கி அடாவடித்தனம் புரிந்த இளைஞர் குழுவைச்சேர்ந்த நபரை யாழ்.பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ் அடிதடிச் சம்பவம் கடந்த 28 ஆம் திகதி கொக்குவில் பிரம்படி வீதியில் இடம்பெற்றுள்ளது.

எனினும் இந்த சம்பவத்தோடு தொடர்புடைய இளைஞர் குழுவின் அங்கத்தவர் நேற்றைய தினமே கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த தினமன்று இரு பாடசாலை மாணவர்களுக்கிடையில் சிறு தகராறு ஏற்பட்டுள்ளது.இதில் ஒரு மாணவர் பிரம்படியிலுள்ள மற்றொரு மாணவரின் வீட்டிற்கு 10 இற்கு மேற்பட்ட இளைஞர்களை அழைத்து சென்று அவ்வீட்டில் காட்டுமிரண்டித்தனமான செயலில் ஈடுபட்டுள்ளனர்.

அங்குள்ள இரு முதியவர்களினை கடுமையாக தாக்கியதில் இருவரும் படுகாயமடைந்தனர்.

அத்தோடு அங்கிருந்த பெண்களை தாக்கியதோடு வீட்டு உடைமைகளுக்கும் சேதம் விளைவித்தனர்.

இவ் வீட்டில் தாக்குதல் நடத்திய இளைஞர் கும்பல் ஒரு இளைஞரை தலைமையாகக் கொண்டு இயங்குகின்றது எனவும் இவர்கள் பணத்திற்காகவே இவ்வாறான சம்பவங்களில் ஈடுபட்டுவருகின்றனர் எனவும் தெரியவருகின்றது.

இளைஞர்குழுவின் தலைவர் வன்முறை சம்பவம் ஒன்றின் கீழ் யாழ். நீதிமன்றில் சரணடைந்து அண்மையிலேயே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையிலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது எனவும் தெரிவிக்கப்படு கின்றது.இவ்வாறானவர்களின் அடாவடித்தனம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் இவ்வாறான இளைஞர் கும்பல்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் விசேட குழுக்களை நியமிக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் தரப்பில் கேட்கப்படுகிறது. (அ-4)

## கலை, கலாசார விழா

(பூநகரி)

நித்திலம் சிறுவர் கழகம் நடாத்தும் வருடாந்த கலை,கலாசார விழா இன்று சனிக்கிழமை பி.ப. 3. மணிக்கு கோண்டாவில் வேதபாராயண சனசமூக நிலைய மண்டபத்தில் நித்திலம் சிறுவர் கழகத்தலைவர் அ.மோகணப்பிரியன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தன் சிறப்பு விருந்தினராக யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சண்முககுமார், பக்தி வேதாந்த சிறுவர் இல்ல (கோகுலம்) அதிபர் ஸ்ரீமதி நந்தராணிதேவி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-3-84)

# யாழ்ப்பாணத்தின் பொருளாதாரம் பாரியளவில் வளர்ச்சி கண்டுள்ளது

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு

யுத்தம் முடிவுக்கு வந்தபின்னர் யாழ்ப்பாணம் அனைத்து துறைகளிலும் படிப்படியாக முன்னேற்றம் கண்டு வருகிறது என ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ்.அரச செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இலங்கை ஊடகவியல் கல்லூரி மாணவர்களுக்கான பயிற்சி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது தோற்றுவிக்கப்பட்டுள்ள காணாமல் போதல்,கடத்தல், அச்சுறுத்தல் ,கப்பம் வாங்குதல் போன்ற நிலைகளை சீர்குலைக்கும் எவ்விதமான துர்ப்பாக்கிய சம்பவங்களும் தற்போது நடப்பதில்லை. மக்கள் நிம்மதியான வாழ்வை அனுபவிக்கின்றனர்.

அதுமட்டுமன்றி கடற்றொழில், விவசாயம், வியாபாரம், சிறுகைத்தொழில்கள், உல்லாசத் துறை போன்ற துறைகளிலும் பல முன்னேற்றகரமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தின் பொருளாதாரம் யுத்த காலத்தோடு ஒப்பிடுகையில் பாரியளவில் வளர்ச்சி கண்டுள்ளது. உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அச்சமின்றி முதலீடுகளை மேற்கொண்டுள்ளனர். மேலும் மேற்கொள்ளவும் தயாராகவுள்ளனர்.

எனவே கடந்த காலங்களோடு ஒப்பிடுகையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களையும் அபிவிருத்திகளையும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது. இருப்பினும் மக்களுக்கான எல்லாத் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டது என்று கூறமுடியாது. மக்களுக்கு இன்றும் ஏராளமான தேவைகள் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. அவையும் எதிர்வரும் காலங்களில் படிப்படியாக நிச்சயம் பூர்த்தி செய்யப்படும் என்றார். (அ-2)

## வாழ்வெழுச்சித்திட்டத்தின் கீழ் கோழிக்குஞ்சுகள் விநியோகம்

(வேலணை)

வேலணை பிரதேச செயலர் பிரிவில் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் பொருட்டு வாழ்வெழுச்சி (திவிநெகும) திட்டத்தின்கீழ் 13 குடும்பத்தினருக்கு கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டன.

வேலணை பிரதேச செயலக அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வேலணை பிரதேச செயலர்திருமதி.மஞ்சுளா சதீஸன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஈ.பி.டி.பியின் வேலணை பிரதேச அமைப்பாளரும் வேலணை பிரதேச சபைத் தவிசாளருமான சி. சிவராசா முதலில் கோழிக்குஞ்சை வழங்கி ஆரம் பித்து வைத்தார். (அ-9)




ரொயோட்டா, மஸ்டா, சுசுக்கி, மிற்சுபிஷி, மற்றும் அதிகுளிரூட்டி வாகனங்கள் (FREEZER TRUCKS) போன்ற சகலவிதமான வாகனங்களுக்கும் மிகச்சிறந்த முறையில் குளிரூட்டிகள் திருத்தம் செய்து தரப்படும்.

எமது ஏனைய சேவைகள்.
1) காஸ் நிரப்புதல்
2) திருத்த வேலைகள்
3) குளிரூட்டிகள் மீள் திருத்தம் செய்தல்.

அரசாங்க, திணைக்கள, தனியார், நிறுவன வாகனங்கள் ஒப்பந்த அடிப்படையில் திருத்தித் தரப்படும்.
(ஞாயிற்றுக் கிழமைகளிலும் திறந்திருக்கும்)

தொடர்புகளுக்கு
510 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
(யாழ். இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக)
தொலைபேசி: 0777738888

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்
வருடாந்த மஹோற்சவம்-2012

தற்காலிக கடை இட ஒதுக்கீடு

★ ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் 14.09.2012 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தலத்தில் மஹோற்சவ காலத்தில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளன. கடைகள் தொகுதிவாரியாகப் பின்வரும் வகையில் அமையும்

1. ஐஸ்கிறீம் 2. இனிப்பு வகை
3. தேநீர் கடை 4. மணிக்கடை
5. கச்சான் கடை

முக்கிய குறிப்பு

★ முதல் மூன்று கடைத் தொகுதிகளுக்கான இடம் பகிரங்க ஏலத்தில் கூடிய கூறுவிலைக்கு வழங்கப்படும். ஏனைய தொகுதிக்கான அறவீடு அடிக்கணக்கில் அறவிடப்படும்.

★ அக்கறையுடைய வர்த்தகர்கள் முன்கூட்டியே இட ஒதுக்கத்தை பெற்று தொடர்பான வாடகைப் பணத்தையும் முழுமையாகச் செலுத்தி உங்கள் இடங்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

★ விபரங்கள் வழங்கப்படவேண்டிய படிவங்களை கோயில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் 04.09.2012 வரையில் ஏற்றுக் கொள்ளப்படும்.

★ ஏலம்போடும் நாள் 04.09.2012 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணி

தொலைபேசி:-0213210983
துன்னாலை வடக்கு, அறங்காவற் சபை
புலோலி.
29.08.2012 (சி-888)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடங்குளம் விவகாரம் தொடர்பில் உடன் பேச்சுக்கள் அவசியம்

## வெளிவிவகார அமைச்சின் செயலாளர் வலியுறுத்து

**கூடங்குளம் அணுமின்நிலையம் தொடர்பான பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி இந்தியாவிடம் விசனம் தெரிவித்த இலங்கை இரு தரப்புக்குமிடையில் உடனடி பேச்சுவார்த்தை நடைபெற வேண்டுமென கேட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**

இது தொடர்பாக புதுடில்லியிலுள்ள இலங்கை தூதரகத்தின் ஊடாக இந்தியாவுக்கு அறிவித்ததாகவும் இரு நாட்டு அணுசக்தி ஆணைக்குழுக்களின் பிரதிநிதிகளும் விரைவில் சந்தித்து இப்பிரச்சினை பற்றி பேசவுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாரட்ன அமுனுகம தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மேற்கு கரையிலிருந்து 240 கிலோமீற்றர் தூரத்திலுள்ள இந்த அணு நிலையத்தில் கதிர்வீச்சு ஒழுக்கு அல்லது வேறு விபத்து ஏற்படும் போது இலங்கைக்கு பெரும் ஆபத்து விளையும் என இலங்கை சூழலியலாளர்கள் முன்னர் கூறியிருந்தனர்.

இது விடயத்தில் சர்வதேச அணுசக்தி அதிகாரசபையின் உதவியை பெற்றுக்கொள்ளும் உரிமை இலங்கைக்கு உள்ளது என சூழலியலாளர் ஜகத் குணவர்த்தன கூறியுள்ளார்.

திட்டமிடப்பட்டுள்ள இந்த அணு மின் நிலையம் கற்பிட்டியிலிருந்து 200 கிலோ மீற்றர் மேற்கில் உள்ளது. எனவே ஒரு விபத்து ஏற்படும் போது உயர் ஆபத்து ஏற்படும் வீச்சுக்கள் இலங்கை வரமாட்டாது என இலங்கை அணுசக்தி அதிகார சபையின் தலைவர் டாக்டர் ரஞ்சித் விஜயவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

ஆயினும் இரண்டாம் மட்ட விளைவாக எமது வளிமண்டல, மழைநீர் என்பவற்றில் கதிர்வீச்சு கலக்கம் ஆபத்து உண்டென அவர் தெரிவித்துள்ளார். இங்கு இரண்டு அணு உலைகள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் ஆயிரம் மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் இயலளவு உள்ளவை. இவ்வாறு மேலும் நான்கு அணு உலைகள் அமைக்கும் திட்டமும் உள்ளது. இலங்கையின் வருடாந்த மின்தேவை 2 ஆயிரம் மெகாவோட் மட்டுமே என அவர் கூறினார்.

உலகில் இப்போது 450 அணுமின் நிலையங்கள் உள்ளன. செர்னோபில் அணு மின் நிலையத்தால் 1986 இலும் ஜப்பானின் புகுஷிமா நிலையத்தில் கடந்த வருடமும் அனர்த்தங்கள் ஏற்பட்டன.

எனவே அணுஉலை விபத்துக்கள் சாத்தியம் குறைவாகவே உள்ளது. இன்னும் 30 வருடங்களில் அனல் மின்நிலையங்கள் செயற்படும் சாத்தியம் இல்லாது போகும். அப்போது நாமும் அணுசக்திக்கு மாற வேண்டியிருக்கும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# மின்உற்பத்தி நிலையம் 2 ஆம் திகதி இயங்கும்

செயலிழந்துள்ள நுரைச்சோலை லக்விஜய மின்உற்பத்தி நிலையத்தை எதிர்வரும் 2 ஆம் திகதி இயங்கச் செய்வதற்கு திட்டமிட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

மின்உற்பத்தி நிலையத்தை நிர்மாணித்த சீன நிறுவனத்தின் ஒன்பது உத்தியோகத்தர்கள் திருத்த வேலைகளை முன்னெடுத்து வருவதாக மின்சாரசபையின் தலைவர் அனுர விஜேபால தெரிவித்துள்ளார்.

இதற்குமுன்னர்ஏற்பட்டிருந்தகோளாறை சீரமைக்கும் போது மின்மாற்றியில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக அதனை மீண்டும் புனரமைக்க நேரிட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நுரைச்சோலை லக்விஜய மின் உற்பத்தி நிலையத்தை சீரமைத்த பின்னர் மின்சார துண்டிப்பை நிறுத்த முடியுமென மின்சார சபையின் தலைவர் அனுர விஜேபால மேலும் தெரிவித்தார். (அ-2)

# தேர்தல் பிரசாரங்களில் அமைதியை பேணுங்கள்

## தேர்தல் ஆணையாளர் அறிவுரை

கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாண சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் மிகவும் அமைதியான முறையில் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுக்குமாறு தேர்தலில் போட்டியிடுகின்ற அனைத்துக் கட்சிகள் மற்றும் சுயேட்சைகளின் வேட்பாளர்களை தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை எதிர்வரும் 5 ஆம் திகதி புதன்கிழமை நள்ளிரவுடன் தேர்தல் பிரசுரங்கள் அனைத்தும் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டுமென்பதையும் அவர் நினைவுறுத்தியுள்ளார்.

அமைதியற்ற எதிர்ப்புகள், ஆர்ப்பாட்டங்கள், நடை பயணங்கள், மக்கள் ஊர்வலங்கள், வாகன ஊர்வலங்கள், இசைக்கச்சேரிகளின் பெயரில் அனுமதியற்ற பிரசார கூட்டங்களை நடத்துதல் என்பன சட்டத்தை மீறும் செயலாகும். இவ்வாறான செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (அ-2)

# மிருகவதையை தடைசெய்ய சட்டம் இயற்றப்பட வேண்டும்

## ஹெல உறுமய வலியுறுத்து

மிருகவதையை தடைசெய்யும் சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. ஓராண்டு காலத்திற்குள் மிருகவதையை தடுப்பது தொடர்பிலான சட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முன்னேஸ்வரம் ஸ்ரீபத்ரகாளியம்மன் ஆலய மிருகபலி பூஜையை இரத்து செய்தமை வரவேற்கப்பட வேண்டியது என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

மிருகபலி பூஜைகளை தடுத்து நிறுத்த வேண்டுமென பௌத்த அமைப்புக்களும் மிருகநல ஆர்வலர்களும் விரும்புவதாக குறிப்பிட்டுள்ளனர். பலியிடப்படும் மிருகங்களின் 90 வீதமான இறைச்சி விற்பனை செய்யப்படுவதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

முன்னேஸ்வரம் ஸ்ரீபத்ரகாளி அம்மன் ஆலயத்தில் நடைபெறும் பலி பூஜையை தற்காலிகமாக நிறுத்த முடிந்தாலும் விலங்கு வதையை முற்றாக தடை செய்யும் வகையில் நாடாளுமன்றத்தில் சட்டமூலம் ஒன்று கொண்டு வரப்படும் என ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்னதேரர் தெரிவித்துள்ளார்.

ஒரு மதத்தின் பெயரில் விலங்குகளை சித்திரவதை செய்து அவற்றை கொண்டு அந்த இரத்தத்தில் தெய்வங்களை அபிஷேகம் செய்யும் நடவடிக்கைகளை கலாசார விழுமியங்களை கொண்ட எந்த நாடும் ஏற்றுக் கொள்ளாது என்றார். (அ-2)

# கஞ்சாவுடன் பிக்கு கைது

(கொழும்பு)

மோட்டார் சைக்கிளில் கஞ்சா கொண்டு சென்ற பிக்கு உள்ளிட்ட இருவர் ராஜாங்கனை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். பிக்குவிடம் இருந்து ஒரு கிலோ கிராமுமிற்கும் அதிகமான கஞ்சாவும் மற்றைய சந்தேக நபரிடம் இருந்து 500 கிராம் கஞ்சாவும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.


பிக்கு ராஜாங்கனை யாய 18 ஆம் பிரதேச விகாரையைச் சேர்ந்தவர் என கூறப்பட்டுள்ளது. சந்தேக நபர்கள் தம்புத்தேகம நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். (அ-9)

# படகு கவிழ்ந்ததில் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

களுவாஞ்சிக்குடியில் மீன்பிடியில் ஈடுபடுவதற்காக கடலுக்குச் சென்றபோது படகு கவிழ்ந்து கடலில் மூழ்கிய இரண்டு மீனவர்களில் ஒருவர் உயிர் தப்பியுள்ளார். இச் சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தெரியவருவதாவது, கடலில் மூழ்கிய இருவரில் ஒருவர் நீந்திக் கரையை வந்தடைந்ததாகவும் காணாமற்போன மற்றைய மீனவரை கடற்படையின் உதவியுடன் தொடர்ந்து தேடி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-9)



மண்டைதீவு திருவெண்காட்டு சித்தி விநாயகர் தேவஸ்தானத்தின் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இத்திருவிழாவின் போது சுவாமி உள்வீதியுலா வருவதையும் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பதையும் பச்சை சாத்தி சுவாமி இருப்பிடத்திற்கு செல்வதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு தேர்தலில் கூட்டமைப்பை ஆதரிக்குமாறு புலம்பெயர் தமிழர்களிடம் வேண்டுகோள்

(மட்டக்களப்பு)

இலங்கையில் இருந்து வெளி நாடுகளுக்கு புலம்பெயர்ந்து சென்ற தமிழர்களுக்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காக சென்ற தமிழர்களுக்கும் தமிழ் தேசி யக் கூட்டமைப்பு அவசர வேண்டு கோள் ஒன்றை விடுத்துள்ளது.

எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு கிழக்கு மாகாண த்தில் உள்ள தங்களது உறவுகளை வாக்களிக்க சொல்லுமாறு கேட்டே அந்த அவசர வேண்டுகோளை தமிழ் தேசியக் கூட்டமைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விட யங்கள் வருமாறு,

இலங்கை அரசாங்கம் மீண்டு மொரு அரசியல் போரை கிழக்கு மாகாண மக்கள் மீது திணித்துள் ளது. அந்தப் போர்தான் எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவிருக்கும் கிழக்கு மாகாண சபைத்தேர்தலாகும்.

இந்தப் போரில் தமிழர்களின் வெற்றி தமிழ் தேசியக் கூட்டமைப் பின் கைகளில் ஒப்படைக்கப்பட்டு ள்ளது. உண்மையில் தமிழர்களும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் இணை ந்து கடந்த காலங்களில் பல ஜன நாயக போர்க்களங்களை சந்தித்து ள்ளோம். அதில் வெற்றியும் பெற்று ள்ளோம்.

இந்தத் தேர்தலை ஏன் நான் ஜனநாயகப் போர் என்கின்றேன் என்றால் இது இரண்டு இனங்க ளுக்கு இடையிலான 60 ஆவது ஆண்டுகால உரிமைப் போராட்டம். அதில் ஆயுதங்களுடனும் போரிட்டு ள்ளோம். ஜனநாயக தேர்தல் களங் களின் ஊடாகவும் போரிட்டுள்ளோம்.

இதில் எந்தப் போராக இருந்தா லும் சரி அதில் வடகிழக்கு தமிழர்கள் தான் தொடர்ச்சியாக வெற்றி பெற்றுீ வருகின்றார்கள்.

இன்று எங்களுக்கான உரிமை களை தாருங்கள் என்று கேட்டோம். இல்லை தர முடியாது. நீங்கள் தமி ழர்களின் ஏக பிரதிநிதிகள் அல்ல என்று சொல்லி அதை கிழக்கு மாகாண தேர்தல் களத்தில் நாங்கள் நிரூபித்துக் காட்டுகின்றோம் என்று மீண்டும் ஒருமுறை சிங்கள அரசும் அவர்களது கைக்கூலிகளும் நெஞ்சை நிமிர்த்தி மார்புதட்டி நிற் கின்றனர்.

தேர்தலில் தமிழ் தேசியக் கூட் டமைப்பு வாக்களிக்குமாறு தெரிவி த்து தமிழர்களின் உரிமைகளை வென்றெடுக்க துணை நிற்குமாறு அனைத்து புலம்பெயர் தமிழர்க ளும் உரிமையுடன் இந்தச் சந்தர்ப் பத்தில் அவசர வேண்டுகோளை விடுகின்றோம் என்றுள்ளது.(அ-2)

# நீலப்படையணிக்குழுவினர் மு.சோ.கட்சி மீது தாக்குதல்

(அம்பாந்தோட்டை)

நீலப்படை அணியின் 10 முதல் 15 பேர் கொண்ட குழு முன்னிலை சோசலிசக் கட்சியின் உறுப்பினர் கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் காலை அம்பாந்தோட்டை சூரியவெளி பிரதேசத்தில் இடம்பெற் றுள்ளது.

கடந்த சில தினங்களாக முன் னிலை சோசலிச கட்சியினர் சூரிய வெளி பிரதேசத்தில் மக்களை தெளி வுபடுத்தும் பணிகளில் ஈடுபட்டிருந் தனர். இந்த நிலையில் அரசாங்கத் திற்கு மாத்திரமே அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அரசியல் செய்ய முடி யும் எனக் கூறியுள்ள நீலப்படையி னர் தொடர்ந்தும் அச்சுறுத்தல் விடு த்து வந்தனர் என முன்னிலை சோச லிசக் கட்சியினர் தெரிவித்துள்ள னர்.

இந்த சூழ்நிலையில் தமது கட்சி யின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து சோசலிச கட்சியின் உறுப்பி னரான ரொஹான் பொலிஸாரின் அவசர அழைப்பு இலக்கமான 119 என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு முறைப்பாடு செய்துள்ளார். (அ-2)

# அகதிகள் தொடர்பான புதிய சட்டத்திற்கு காலம் தேவை

## அவுஸ்.வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

அகதிகள் தொடர்பான புதிய சட்டத்தை அமுல்படுத்த கால அவ காசம் தேவைப்படும் என அவுஸ்தி ரேலிய வெளிவிவகார அமைச்சர் கிறிஸ்போவன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை போன்ற நாடுகளி லிருந்து படகுமூலம் அவுஸ்திரேலி யாவுக்குள் பிரவேசிக்கும் அகதி களை பசுபிக் தீவுகளில் முகாம் களை அமைத்து தங்க வைப்பது தொடர்பான சட்டத்தை அமுல்ப டுத்த சில காலம் செல்லும்.

இந்தச் சட்டம் நிறைவேற்றப் பட்டதன் பின்னர் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அகதிகள் தஞ்சம் கோரி யுள்ளனர். பப்புவா நியூகினி மற்றும் நௌரு தீவுகளில் அகதிகளைத் தங்க வைப்பது தொடர்பான சட்டம் அண்மையில் அவுஸ்திரேலிய பாரா ளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்டத்தை உடனடியாக அமுல்படுத்த முடியாது என குடி வரவு அமைச்சர் தெரிவித்துள்ளார். இந்நிலையில் புதிய சட்டம் அமுல் படுத்தப்படமாட்டாது என வெளி யான தகவல்களில் உண்மையி ல்லை எனவும் இந்த சட்டத்தை அமு ல்படுத்துவதில் காலதாமதம் ஏற் படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியு ள்ளார். (அ-2)

# மூழ்கிய கப்பலில் மீட்கப்பட்டவர்கள் இந்தோனேசியாவுக்கு அனுப்பட்டனர்

(கொழும்பு)

அவுஸ்திரேலியா நோக்கி பாது காப்பற்ற படகில் சென்ற சட்ட விரோத குடியேறிகள் 54 பேர் மீண்டும் இந்தோனேசியாவுக்கு திரு ப்பியனுப்பப்பட்டுள்ளனர்.

அவர்கள் பயணித்த படகு இந் தோனேசியாவின் ஜாவா தீவிற்கு அருகில் விபத்துக்குள்ளானது.

அதனையடுத்து சட்டவிரோத குடியேறிகளை மீட்ட அவுஸ்திரே லிய கரையோர பொலிஸாரும் கடற் படையினரும் அவர்களை கரை யேற்றியுள்ளனர்.

குறித்த படகில் 150 பேர் பய ணித்ததாகவும் 54 பேரையே மீட்க முடிந்ததாகவும் அவுஸ்திரேலிய பாது காப்பு தரப்பினர் தெரிவித்தனர்.

அதில் பெரும்பாலானவர்கள் ஆப்கானிஸ்தான் இனத்தவர்கள் எனதெரிவிக்கப்பட்டபோதும் ஏனைய காணாமல்போனவர்களில் இலங் கையர்களும் இருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியா நோக்கி செல்ல முனைந்த 24 பேர் மட்டக் களப்பு கடற்பிராந்தியத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சட்டவிரோத குடியேறி கள் மேலதிக விசாரணைகளுக்காக திருகோணமலை குற்ற விசாரணை திணைக்களத்திடம் ஒப்படைக்கப்ப ட்டுள்ளனர். (அ-2)

# 2012.09 01 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★1715-பிரான்சின் அரசன் பதினான்காம் லூயி 72 ஆண்டுகள் ஆட்சியின் பின்னர் இறந்தான். இவனே நீண்ட காலம் ஆட்சி புரிந்த ஐரோப்பிய அரசன்.

★1752-விடுதலை மணி பிலடெல்பி யாவை வந்தடைந்தது.

★1862-அமெரிக்க உள்நாட்டுப்போர்: கூட்டமைப்புப் படைகள் பின் வாங்கிச் சென்ற அமெரிக்கப் படைகளை வேர்ஜீனியாவின் சாண் டிலி என்ற இடத்தில் தாக்கினர்.

★1894-அமெரிக்காவில் மினசோட் டாவில் இடம்பெற்ற காட்டுத் தீயில் 400 பேர் உயிரிழந்தனர்.

★1897-வட அமெரிக்காவின் முதலாவது சுரங்கத் தொடரூந்து சேவை பொஸ்டனில் ஆரம்பிக்கப்பட்டது.

★1902-முதலாவது அறிவியல் புனை திரைப்படம் (A Trip to the Moon) பிரான்சில் திரையிடப்பட்டது.

★1914-ரஷ்யாவின் சென் பீட்டர்ஸ் பேர்க் நகரம் பெட்ரோகிராட் எனப் பெயர் மாற்றப்பட்டது.

★1914-கடைசி பயணிக்கும் புறா சின்சி னாட்டி மிருகக்காட்சிச்சாலையில் இறந்தது.

★1923-டோக்கியோ மற்றும் யொகோ ஹாமாவில் இடம்பெற்ற நில நடுக்கத்தில் சுமார் ஒரு இல ட்சத்து 5 ஆயிரம் பேர் உயிரி ழந்தனர்.

★1928-அகமெட் சோகு அல்பேனியா நாட்டை முடியாட்சியாக அறி வித்துத் தன்னை அதன் மன்னராக அறிவித்தார்.

★1939-இரண்டாம் உலகப்போர்: நாசி ஜேர்மனி போலந்தைத் தாக்கி போரை ஆரம்பித்து வைத்தது.

★1951-ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்தி ரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகியன தமக்கிடையே பாதுகாப்பு ஒப்பந் தத்தை (ஆன்சஸ் ஒப்பந்தம்) செய்து கொண்டன.

★1961-எரித்திரிய விடுதலைப்போர் ஆரம்ப மானது. ஹமீட் இட்ரிஸ் அவாட்டெ என்பவர் எதியோப்பிய பொலிஸார் மீது துப்பாக்சிச் சூடு நடத்தினார்.

★1969-அல் கடாபி புரட்சியின் மூலம் லிபியாவின் ஆட்சியைக் கைப் பற்றினார்.

★1970-ஜோர்தான் மன்னர் உசேன் கொலை முயற்சி ஒன்றில் இருந்து தப்பினார்.

★1972-ஐஸ்லாந்தில் இடம்பெற்ற உலகச் சதுரங்கப் போட்டியில் அமெரிக் காரரான பொபி ஃபிஷர் ரஷ்யரான பொரிஸ் ஸ்பாஸ்கியை வென்று உலகக் கிண்ணத்தை வென்றார்.

★1979-நாசாவின் பயனியர் 11 ஆளில்லா விண்கலம் சனி கோளை 21 ஆயிரம் கி.மீ. தூரத்தில் அடைந் தது. இதுவே முதன் முதலில் சனியை அடைந்த விண்கலம் ஆகும்.

★1981-மத்திய ஆபிரிக்கக் குடியரசில் இடம்பெற்ற இராணுவப் புரட் சியில் ஜனாதிபதி டேவிட் டாக்கோ பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.

★1983-பனிப்போர்: சோவியத் ஒன்றி யத்தினுள் அத்துமீறி நுழைந்த கொரிய பயணிகள் விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டதில் அதில் பயணஞ் செய்த 269 பேரும் உயிரிழந்தனர். இறந்தவர் களில் அமெரிக்கக்காங் கிரஸ் உறுப்பினர் லோரன்ஸ் மாக்டொ னால்ட்டும் ஒருவர்.

★1985-அமெரிக்க பிரெஞ்சு கூட்டு முயற்சியில் டைட்டானிக் கப்ப லின் எச்சங்கள் கண்டு பிடிக்க ப்பட்டன.

★1991-உஸ்பெகிஸ்தான், சோவியத் ஒன்றியத்தில் இருந்து வெளியேறி விடுதலையை அறிவித்தது.

★2004-ரஷ்யாவில் பெஸ்லான் நகரப் பாடசாலை ஒன்றில் தீவிர வாதிகள் நூற்றுக்கணக்கான பள்ளி மாணவர்களைப் பணயக் கைதிகளாக்கிய நிகழ்வு ஆரம்ப மாயிற்று.

★2007-மன்னாரில் இடம்பெற்ற தாக்கு தலில் 8 பொதுமக்கள் படு கொலை செய்யப்பட்டனர்.

### பிறப்புக்கள்

★1877-அ.வரதநஞ்ஞைய பிள்ளை, தமிழறிஞர் (இ.1956)

★1895-செம்பை வைத்தியநாத பாகவதர், கர்நாடக இசைக் கலைஞர் (இ.1974)

★1925-ராய் கிளாபர், அமெரிக்க இயற்பியலாளர்.

### இறப்புக்கள்

★1557-ஜாக் கார்ட்டியே, பிரான்சிய புதுப்புலம் ஏகுநர் (பி.1491)

★1961-ஈரோ சாரினென், கட்டடக் கலைஞர் (பி.1910)

★1980-தனிநாயகம் அடிகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தாபகர் (பி.1913)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்று கைதிகள் குறித்து பேசியவர் இன்று அது குறித்து பேச தயாரில்லை

## ஜனாதிபதியை சாடுகிறார் விக்ரமபாகு

### சிங்கள இணையத்தளத்திற்கு வழங்கிய செவ்வி

(கொழும்பு)

1971 ஆம் ஆண்டு அரசியல் கைதிகள் இருந்தனர் என ஏற்றுக்கொண்டனர். 1988-89 ஆம் ஆண்டுகளிலும் அதனை ஏற்றுக் கொண்டனர். அந்த காலத்தில் தற்போதுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த அரசியல் கைதிகள் குறித்து உரக்க குரல் எழுப்பினார்.

எனினும் தற்போதுள்ள தமிழ் அரசியல் கைதிகள் குறித்து அந்த விதத்தில் நடந்து கொள்ள ஜனாதிபதி தயாரில்லை என புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

சிங்கள இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இவ்வாறு கூறியுள்ளார். தமிழ் அரசியல் கைதிகளான நிமலரூபன், டெல்றொக்ஷன் ஆகியோர் கொலை செய்யப்பட்டமை தொடர்பான விவாதங்கள் வெளியில் வரவில்லை. இது மிகவும் சுவிஷேமான சம்பவம். இதனை எதிர்க்கட்சிகள் தமது ஆர்ப்பாட்டங்களின் போது வெளிப்படுத்தினர். இது நாட்டில் நடைபெற்ற பல சம்பவங்களின் ஒரு பகுதி. அரசியல் கைதிகள் நாட்டில் இருக்கின்றனர் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட வரலாறு.

தமிழ் அரசியல் கைதிகளை அரசியல் செயற்பாட்டாளர்கள் என கருத தயாரில்லை. இவர்களை குற்றவாளிகள், பயங்கரவாதிகள் என அடையாளப்படுத்துகின்றனர்.

இது தான் அடிப்படை விடயம். அந்த அரசியல் கைதிகள் மீது குத்தப்பட்டுள்ள பயங்கரவாத முத்திரை அவர்களுக்காக குரல் கொடுப்பவர்கள் மீது குத்தப்படுகிறது.

அந்தக்காலத்தில் மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சியில் இருந்து செய்த காரியங்களுக்கு ஈடான காரியங்களை எதிர்க்கட்சிகள் செய்ய போனால் அவர்களை சிறையில் அடைத்து விடுவார்களோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

தமிழ் அரசியல் கைதிகள் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் அல்ல. ஆனால் அவர்களை பயங்கரவாதிகள் என அடையாளப்படுத்துகின்றனர்.

அரசியல் கைதிகள் பல்வேறு வகையில் அர்த்தப்படுவதே இன்று நடைபெறுகிறது. இதற்கு பாரிய எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்காகவே நாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

கேள்வி: நீங்கள் கூறியபடி 1971 ஆம் ஆண்டை எடுத்துக் கொண்டால் அரசியல் கைதிகள் கருதி அது கலந்துரையாடல்களுக்கு உட்படுத்தப்படுகிறது. எனினும் போர் முடிந்து மூன்றுவருடங்கள் கழிந்துள்ள போதிலும் மனிதாபிமானமற்ற செயல்கள் குறித்து ஆழமான கலந்துரையாடல்கள் தென் சமூகத்திற்கு காணமுடியவில்லை அது ஏன்?

பதில்: உண்மையில் இப்படியான பல குற்றங்கள் உள்ளே இருக்கின்றன. அதில் ஒன்றுதான் காணிக்கொள்ளை. மக்களின் காணிகளை பறித்து அரசாங்கத்தின் பயன்பாட்டுக்காக எடுத்து கொண்டு அவை மக்களுக்கு சொந்தமானதல்ல என்று கூறும் இடத்திற்கு வந்துள்ளனர்.

அதுபோல் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மக்கள் காணாமல் போயுள்ளனர். அதே போல் சுமார் 80 ஆயிரம் விதவைகள் இருக்கின்றனர்.

பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுகின்றனர். இப்படியான பல விடயங்களுக்குள்தான் அரசியல் கைதிகளின் பிரச்சினை எழுந்துள்ளது.

இன்று பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனத்தை அழித்து விடும் நிலைமை ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி முதல் அனைவரும் இதனை மூடி மறைக்க முயற்சிக்கின்றனர். அரசியல்கைதிகள் இல்லை குற்றவாளிகள் இருந்தனர் என்று கூறியே அவர்களை அடக்கியதாக தெரிவிக்கின்றனர். அடக்கியுள்ளனர்.

கேள்வி: இந்த நிலைமைகளில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு வருவதாக கூறப்படுகிறது. இவற்றை எந்த விதத்தில் நாம் அரசியலில் கலந்துரையாட முடியும்?

பதில்:பிள்ளை மற்றும் அகாஷி ஆகியோர் வருகையானது நாங்கள் பல காலங்களாக மேற்கொண்டு வந்த ஆர்ப்பாட்டங்கள் அழுத்தங்களை கொடுத்துள்ளன. அது போல் ஒரு விதத்தில் டெசோ மாநாடு இதில் சம்பந்தப்படுகிறது. இவ்வாறு பல தெளிவுபடுத்தல்களுக்கு மத்தியில்தான் பிள்ளை வருகிறார்.

அப்போது கொலை செய்யப்பட்ட அரசியல் கைதிகள் தொடர்பான பிரச்சினையை வெளியில் எடுக்க வேண்டி வரும். அப்போது அரசாங்கம் பதிலளித்தாக வேண்டும். எப்படி இவற்றுக்கு பதிலளிக்க போகிறார்கள்? இந்த பிரச்சினை காரணமாக தற்போது அரச தரப்பினர் குழம்பிப்போயுள்ளனர் என்றார். (அ-2)

# ஆயுத சட்டங்களால் நாடுகளை ஒடுக்கக்கூடாது

## சவேந்திர சில்வா அறிவுரை



ஆயுதச் சட்டங்களினால் நாடுகளை ஒடுக்கக்கூடாது என ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கையின் பிரதி வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திரசில்வா தெரிவித்துள்ளார்.

சிறிய மற்றும் இலகு ரக ஆயுதப் பயன்பாட்டை தடுப்பது தொடர்பான ஐக்கியநாடுகள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறிய மற்றும் இலகு ரக ஆயுதப் பயன்பாட்டை கட்டுப்படுத்தும் சட்டமானது நாடுகள் ஆயுதங்களை வைத்திருக்கும் உரிமையை பாதிக்கக்கூடாது.

சிறிய மற்றும் இலகுரக ஆயுதங்கள் சட்டவிரோதமான முறையில் பயன்படுத்துவதனை இலங்கை வரவேற்கிறது. தற்பாதுகாப்பு நோக்கில் சட்டரீதியாக சிறிய மற்றும் இலகுரக ஆயுதங்களை பயன்படுத்தும் நாடுகளிடம் உரிமை ஒடுக்கப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

சிறிய மற்றும் இலகுரக ஆயுதங்களை உற்பத்தி செய்யும் நாடுகள் மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் சட்டவிரோத பயன்பாட்டை தடுக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். உலகின் பல பாகங்களில் இடம்பெற்று வரும் வன்முறைச்சம்பவங்களுக்கு சிறிய மற்றும் இலகுரக ஆயுதங்களே ஏதுவாக அமைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# இராணுவ சிப்பாயால் தயாரிக்கப்பட்ட ஆயுதம்

இராணுவத்திலிருந்து தப்பிச்சென்ற சிப்பாய் ஒருவரினால் தயாரிக்கப்பட்ட ஆயுதமொன்று மீட்கப்பட்டுள்ளது. ரி 56 ரக துப்பாக்கிக்குச் சமமான ஆயுதமொன்றே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

திஸ்ஸமஹாராம கங்கசிறிபுர பிரதேசத்தில் இந்த ஆயுதத்துடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சில பகுதிகளாக மடிக்கக்கூடிய வகையில் இந்த ஆயுதம் தயாரிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-2)

# கிழக்கு மாகாணம் முஸ்லிம்களின் தனி மாகாணமாக வேண்டும்

## இதுவே மு.காவின் விருப்பம் என்கிறார் பஷீர்

(மட்டக்களப்பு)

வட, கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு போதும் விரும்பவில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பசீர் சேகுதாவூத் தெரிவித்துள்ளார்.

காத்தான்குடியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

வட, கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு போதும் விரும்பியது இல்லை. வட, கிழக்கில் முஸ்லிம்களுக்கு தனி மாகாணம் வேண்டும் என்பதே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அடிப்படைக் கொள்கை ஆகும். தமிழர்களுக்கு ஒரு தனி மாகாணம் இருக்கக்கூடாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூறியதும் இல்லை. வடக்கு, கிழக்கை இணைக்க வேண்டும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸ் கூறியதும் இல்லை. வட, கிழக்கை பிரிக்க வேண்டும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூறியதும் இல்லை. தமிழர்களுக்கு கிடைப்பதை கிடைக்காமல் செய்வதும் முஸ்லிம்களுக்கு கிடைப்பதை கிடைக்காமல் செய்வதும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கொள்கை இல்லை.

முஸ்லிம் காங்கிரஸிலிருந்து விலகி சென்றவர்கள் எல்லாம் 'முஸ்லிம் சமுதாயத்திற்கு கிடைக்க வேண்டியதை கிடைக்காமல் செய்து கொண்டிருக்கின்ற பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றார். (அ-2)

# வேம்படி உயர்தர மாணவர்களுக்கு 10 ஆம் திகதி கற்றல் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் இடம்பெறும் நிலையமாக இம்முறை யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அமைவதாக பாடசாலை அதிபர் திருமதி ராகினி முத்துக்குமார் தெரிவித்துள்ளார்.

இதனால் ஒரு தொகுதி வகுப்பறைகளில் மேற்படி திருத்தும் பணிகள் இடம்பெறுவதால் க.பொ.த. (உ/த) வகுப்புக்கள் தவிர்ந்த ஏனைய வகுப்புக்கள் அனைத்தும் மூன்றாம் தவணைக்காக எதிர்வரும் 3 ஆம் திகதி திங்கட்கிழமை திறக்கப்படுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே உயர்தர வகுப்பு மாணவர்கள் தவிர்ந்த ஏனைய வகுப்பு மாணவர்கள் அனைவரும் அன்றையதினம் பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார். இதேவேளை எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை க.பொ.த. (உ/த) மாணவர்களுக்கான மூன்றாம் தவணை ஆரம்பமாகும் என அவர் அறிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு


27

## துட்டகாமினிக்குப் பின்னர்

**வடபகுதியில் வசபனின் ஆட்சி**

வசபனுடைய ஆட்சிக் காலத்தில் வடபகுதி முக்கியமாக நாகதீவு (யாழ்ப்பாணக் குடாநாடு) அவனது ஆதிக்கத்தின் கீழ் இருந்துள்ளது. வல்லிபுரத்திலிருந்து கி.பி. முதலாம் அல்லது இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு பொற்சாசனம் கிடைத்துள்ளது. இச்சாசனம் பல வகையாலும் முக்கியத்துவம் வாய்ந்தது. கி.பி. முதலாம் இரண்டாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணப்பகுதி நாகதீவு (நகதிவ) எனப்பெயர் பெற்றிருந்ததையும், அக்காலத்தில் அனுராதபுரத்திலிருந்த சிங்கள இராச்சியத்தை ஆண்ட வசப மன்னனுடைய ஆதிக்கத்திற்குட்பட்ட பிரதேசமாக, அம்மன்னனின் அமைச்சன் ஒருவனால் அது நிர்வகிக்கப்பட்ட தென்பதையும், வல்லிபுரப்பிரதேசத்திலேயே பௌத்தம் பரவியிருந்தது என்பதையும் இச்சாசனம் அறிவிக்கின்றது. சாசனத்தின் மொழி தென்பாகங்களில் அக்காலத்துச் சாசனங்களின் மொழியாக விளங்கிய ஆதிச்சிங்களமாகும். எழுத்தும் தென்பாகத்தில் பயன்படுத்தப்பட்ட எழுத்தாகும். வசபனுடைய ஆட்சிக் காலம் அமைதியானதாக விளங்கியதால் சமயப்பணிகளிலும் நீர்ப்பாசன அபிவிருத்திகளிலும் அவன் ஈடுபட்டான். அனுராதபுரத் தலைநகரைச் சுற்றியுள்ள மதிலைப் பலப்படுத்தினான். தென்னிந்தியாவிலிருந்து அந்நியப் படையெடுப்புக்கள் ஏற்படலாமென்ற பயம் வசபனுக்கு இருந்திருக்க வேண்டும் என்பர்.

வசபனின் பின்னர் அவனுடைய மகனான வங்கநாசிக தீசன் அரசனாக முடிசூடினான். அவனுடைய காலத்தில் அவனது தம்பிமார் இருவர் உருகுணையிலும் மாயரட்டையிலும் ஆட்சியாளர்களாக விளங்கினர். வங்கநாசிக தீசன் மன்னனாக விளங்கிய காலத்தில் கொணாநதிக் கரையில் மகாமான்கல எனும் விகாரையைக் கட்டினான். (கி.பி. 168- கி.பி 171) அவனுக்குப்பிறகு அவன் மகன் கஜபாகு காமினி முடிதரித்து 22 ஆண்டுகள் ஆண்டான். (கி.பி 171- கி.பி 193) கஜபாகு இலங்கை வரலாற்றில் ஒரு முக்கியமான மன்னனாக உள்ளான். தென்னிந்தியாவுக்கு ஒரு படையெடுப்பினை கஜபாகு நடத்தியதாக பாளி நூல்களிலிருந்து அறிய முடிகிறது. அவன் தந்தையின் காலத்தில் இங்கிருந்து கொண்டுசெல்லப்பட்ட சிங்களக் கைதிகளை அங்கிருந்து மீட்டு வந்ததோடு பல தமிழ்க் கைதிகளையும் சிறைப்பிடித்து வந்தானென அறியக் கிடைக்கிறது. கண்ணகிக்கு சேரன்- செங்குட்டுவன் கோயில் எழுப்பி விழாவெடுத்தபோது, அவ்விழாவுக்குக் கஜபாகு சென்று கலந்து கொண்டான் எனச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. அத்துடன் பத்தினி வழிபாட்டை இலங்கையில் அறிமுகம் செய்து வைத்தான். தன் தாயார் மகாமாதாவின் பெயரால் மதுவிகாரையை அமைத்தான். அபயகிரி விகாரைக்கு உதவும் பொருட்டு காமினி திஸ்ஸ குளத்தைக் கட்டுவித்தான். அபயகிரி விகாரைக்கு அதிக வசதிகளைச் செய்து கொடுத்தமையால் மகாவிகாரைக்குச் சாதகமான மஹாவம்சம் இம்மன்னன் சிறப்பை அதிகம் போற்றவில்லை. கஜபாகுவுக்குப் பின்னர் அவனது மாமன் மாகல்லகநாகன் ஆறு ஆண்டுகள் ஆட்சி புரிந்தான் (கி.பி 193- கி.பி 199) மாகல்லகநாதன் காலத்திலும் உத்தரதேசம் இம்மன்னின் ஆட்சியின் கீழ் இருந்தது. இவன் ஏழு விகாரைகளை அமைப்பித்தான். அவற்றினுள் நாகதீபத்தில் கட்டப்பட்ட சாலி பர்வத விகாரையும் ஒன்றாகும்.



கஜபாகு காலத்து தூபராம விகாரை

**பதின்மூன்று மன்னர்கள்**

மாகல்லகநாதனுக்குப் பின்னர் அவனுடைய மகனான பாதிக்க தீசன் அரசனானான். இவன் ஆட்சி இருபத்தினான்கு வருடங்கள் நீடித்தது. (கி.பி 199- கி.பி 223) மகாவிகாரையைச் சுற்றி மதில் அமைப்பித்தான், தூபராம விகாரைக்கு உபோதச மண்டபம் கட்டி வழங்கினான். பாதிக்கதீசனின் பின் அவனுடைய இளைய சகோதரன் கனிஷ்ட்தீசன் முடிபுனைந்தான். பதினெட்டாண்டுகள் ஆண்டான். (கி.பி 223- கி.பி 241) அவனின் பின்னர் அவனின் மாமன் குலநாகன், (கி.பி 241- கி.பி 243) பின்னர் குலநாகனின் தம்பி குடநாகன் (கி.பி. 243- கி.பி 244 ஆகியோர் ஆட்சி ஏற்றனர். குடநாகனின் பட்டத்து மகஷியின் சகோதரனான சேனாதிபதி ஸ்ரீநாகன், மன்னனுக்கு எதிராக புரட்சி செய்து குடநாகனைத் துரத்திவிட்டு அரசனாகினான் (கி.பி 244- கி.பி. 263). அதன் பின்னர் வெகாரிகத்தீசன் அரசாண்டான். அவன் ஆட்சி இலங்கை எங்கும் நடந்தது. நாகதீபத்தில் திஸ்ஸ விகாரையை அவனே கட்டுவித்தான். இவன் மிகுந்த தர்மசிந்தையும் நீதிநெறியும் உள்ளவன். கடும் தண்டனைகளைக் குற்றம் இழைத்தவர்களுக்கு வழங்கவிரும்பாது அவர்களைத் திருத்தும்நோக்கோடு செயற்பட்டதால் அவனை வொகாரிஸ்- நீதியான தீசன் என்றழைத்தனர்.




பொலநறுவை ஆட்சிக் காலத்துக்குரிய அரண்மனைச் சிதைவுகள்

மன்னனின் இளைய சகோதரனான அபயநாகன் மகாராணியின் கள்ளக் காதலனாவான். இது வெளியில் தெரியவந்ததும் தப்பிஓடி, நம்பிக்கையான வீரர்களையும் தமிழ்ப்போர் வீரர்களையும் சேர்த்துக் கொண்டு அனுராதபுரத்துக்கு வந்து வெற்றி கொண்டு முடிதரித்துக் கொண்டான். மலைநாட்டுக்குத்தன் மனைவியோடு தப்பியோடிய தமையனைத் துரத்திச் சென்று கொன்றுவிட்டு, அவன் மனைவியோடு திரும்பி வந்தான்.

அபயநாகனின் மரணத்தின் பின்னர் தமையனின் மகனான இரண்டாவது ஸ்ரீநாகன் அரசனானான் (கி.பி 293- கி.பி 295). அதன் பின்னர் அவனின் மகனான விஜயகுமாரன் மன்னனாக முடிதரித்தான். அவனின் பின்னர் மகியங்கனையில் வாழ்ந்திருந்த சங்ஹதீசன், ஸ்ரீசங்கபோதி, கொடாபயன் ஆகிய மூன்று இலம்பக்கர்ணர்கள் ஆண்டனர். முதலில் சங்ஹபோதி அரசனாக முடிசூடிக்கொண்டான். ஸ்ரீசங்கபோதி யுவராஜனாகவும், கொடாபயன் மன்னனது திறைச்சேரிக்குப் பொறுப்பாளனாகவும் நியமிக்கப்பட்டான்.

சங்ஹதீசனுக்குப்பின்னர் ஆட்சியை ஏற்ற ஸ்ரீசங்கபோதி இலங்கை வரலாற்றில் குறிப்பிடத்தக்கவன். நீதிநெறி தவறாதவன். பௌத்த நெறிகளில் ஒழுகுபவன். கொல்லாமையைத் கடைப்பிடிப்பதற்காக புலாலுண்ணழலைத் தவிர்த்தவன். ஆட்சியை அபகரிக்கக் கருதிய கொடாபயன் கலகம் செய்தபோது, உயிர்ச் சேதத்தைத் தவிர்க்கும் பொருட்டு ஆட்சிப்பொறுப்பை ஒப்படைத்துவிட்டு துறவறம் பூண்டு காடேகினான். எனினும் சங்கபோதி மீண்டும் அரசுரிமைக்குப் போட்டியிடலாமெனக் கருதிய கொடாபயன், ஸ்ரீசங்கபோதியின் சிரசைக் கொய்து தருபவர்களுக்கு வெகுமதியளிப்பதாக அறிவித்தான். இதனை ஓர் உழவன் மூலம் கேள்விப்பட்ட ஸ்ரீசங்கபோதி, தானே தன் சிரசைக் கொய்து உழவனிடம் கொடுத்து வெகுமதி யைப் பெற்றுக் கொள்ளுமாறு கூறினான் என மரபு வழிக்கதை தெரிவிக்கின்றது (கி.பி 300- கி.பி 302). கொடாபயனை மேகவண்ண அபயன் எனவும் அழைப்பர் (கி.பி 303- கி.பி 315). இவன் ஆட்சிக்கு வந்தமுறை தவறானதாயினும், பௌத்தத்தின் வளர்ச்சிக்கு தொண்டாற்றியுள்ளான். கொடாபயனுக்குப் பின்னர் அவனின் மகன் ஜெட்டதீசன் அரசனானான் (கி.பி. 315- கி.பி 325). இவனை அரியணையில் அமர்த்துவதற்கு எதிர்ப்பு இருந்தது. அதனால் தன் முடிதரித்தலுக்கு எதிராகவிருந்த அமைச்சர்களைக் கொன்றழித்தான். கொடாபயன் காலத்தில் மகாஜான பௌத்தம் தலைதூக்க முயன்றது. ஆனால், ஜெட்டதீசன் காலத்தில் மன்னனின் ஆதரவு மகாவிகாரைக்கு அதாவது தேரவாத பௌத்தத்துக்குப் பெருமளவு கிடைத்தது. ஜெட்டதீசனின் மரணத்தின் பின்னர் ஆட்சியுரிமை அவனது தம்பியான மகாசேனன் என்பவனுக்குக் கிடைத்தது.

(தொடரும்)




வசபன் காலத்து இரட்டைக் குளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்டியில் பீடைகளும் முகாமைத்துவமும்

*வாருங்கள் எம்மினிய உறவுகளே!*

மரக்கறிப்பயிர்களுள் விளைச்சல் மூலம் வருவாயை தருகின்றவற்றுள் வெண்டி மிக முக்கியமானது. மரக்கறிச் செய்கையுடன் திருவிழாக்காலங்களில் இவ்வகையான மரக்கறிகளுக்கு கேள்வி அதிகமாக இருப்பி




னும் ஒரு சமமான விலை வருடம் முழுது மாக இல்லாதிருப்பது வெண்டிச் செய்கை யாளர்களுக்கு ஏமாற்றமாக இருப்பினும் குறிப்பிட்ட திருவிழாக்காலங்களில் இதற்கு ரிய கேள்வி அதிகமாக இருப்பது ஆதாய த்தை பெற வழிவகுக்கும். இன்னும் ஊடு பயிர்ச்செய்கை செய்வதற்கு உகந்த பயிராக இருப்பதுவும் இதற்குரிய சிறப்பியல்பாகும்.

வெண்டிக்காயை சந்தையில் வாங்கும் போது புழு துளைத்ததாக இருந்தாலும் முற்றியதாக இருந்தாலும் அதற்கான கேள்வி வெகுவாக குறைந்து விலை போகாமலேயே இருந்துவிடும். அதனால் வெண்டி முற்ற முன்பு விற்றுத்தீர்ந்தாகிவிடும். இதற்காக காயின் நுனியை கையினால் முறித்துப் பார்த்து அதனுடைய தரத்தை அறிந்து கொள்வர்.

வெண்டி விதையிட்டு வளர்ந்து பூக்கும் வரை பொதுவாகவே பிரச்சினை குறைவு. பூக்க ஆரம்பிக்கும் போது பீடைகளின் தாக்கம் ஏற்படத்தொடங்கும். பூக்களை சேதப் படுத்தும் பூச்சிப்பீடைகள் இனங்காணப் பட்டாலும் அவற்றை கட்டுப்படுத்துவதில் அதிகம் சிரத்தை கொள்வதில்லை. ஆனால் வெண்டியில் சேதத்தை ஏற்படுத்தும் பீடைகளாக காய் துளைப்பான், சிவப்பு சிலந்தி சிற்றுண்ணி, இலைத்தத்திகள் இன்னும் மாவுப் பூச்சி போன்றன இனங்காணப்பட்டுள்ளன. இவற்றில் காய்துளைப்பான் நேரடியாக பாதிப்பை காய்களிலேயே ஏற்படுத்துவதால் அதனது சேதத்தை தவிர்த்தாக வேண்டும்.

### வெண்டி காய்துளைப்பான்
### (Bhendi fruit borer)

வெண்டி காய்துளைப்பானினது சேதம் பிஞ்சு பிடித்து வளர்ந்து வரும் போது அந்துப் பூச்சி காயின் மேற்பரப்பில் முட்டையிட்டு செல்வதிலிருந்து ஏற்படுகின்றது. முட்டை பொரித்து வெளிவருகின்ற புழு பிஞ்சுக் காயை துளைத்து உட்சென்று காயின் உட்பகுதியை உணவாக உட்கொள்ளும்.

இந்த இடத்திலிருந்து சேதம் அதிகமாகும். புழு உட்புகுந்த பகுதியிலிருந்து அனைத்தையும் உணவாக்கிக் கொள்ளும். குறிப்பாக உள்ளுள்ள விதைகளை விட்டு வைப்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 22-I



பதில்லை. ஆரம்பத்தில் இப்புழுவின் சம யோசித புத்தியால் உணவு உண்டபின் வெளி யேற்றும் கழிவினால் காயின் வாசல் பகுதியிலுள்ள உட்புகுந்த துளையினை மூடி விடும்.

இதனால் புழு உட்புகுந்ததை எவருமே அவதானிப்பதில்லை.

இப்புழுவினால் காயினுள்ளே கடத்தல் செயற்பாடு நடைபெறும். கலன்கட்டு பகுதியை சேதமாக்கி விட அதன்மூலம் தாவரம் ஜீவனோபாயத்தை இழந்தது போலாகும். ஆனாலும் புழுவின் சேதம் மட்டுப்படுத்திய அளவில் ஆரம்பத்தில் இருப்பதால் காயினது குறிப்பிட்ட பகுதிகளில் புழுவினது சேதமிருக்கும். உள்ளூர் வகை வெண்டியினங்களில் சேதம் அதிகமாக இருப்பதும் பால்வெண்டி வகைகளுள் சேதம் மிகக் குறைவாகவுமிருக்கும். காய்துளைப்பான் அந்துப்பூச்சியை இயா ரியசு விற்றெல்லா (Earias ritella), இயா ரியசு இன்சுலானா (Earias insulana) ஆகிய இருவகை காய்துளைப்பானாக இனங்கண்டுள்ளனர். இரண்டினதும் புழுப் பருவங்களே சேதத்தை எற்படுத்துவதனால் அவற்றை அதிகளவில் பெருகவிடாது அவதானிப்பதும் கட்டுப்படுத்துவதும் அவசிய மானதாகும்.


வெண்டி காய்துளைப்பானின் அந்துப் பூச்சிகளை இலகுவில் இனங்கண்டு கொள்ளலாம். முன்னையதில் இறகுகள் மென் பச்சை நிறமாகவும் பின்னையதில் முன் இறகின் நடுப்பகுதியில் பச்சை நிறத்தில் அகன்ற பட்டைபோல இருக்கும்.

வெண்டி காய் துளைப்பானின் அந்துப் பூச்சியின் எண்ணிக்கையை வெளிச்சப் பொறியை ஏற்படுத்தி கவர்ந்திழுத்து அவதானிக்கலாம். வெளிச்சப்பொறியின் மூலம் அந்துப்பூச்சியின் எண்ணிக்கையை ஓரளவிற்கு கட்டுப்படுத்தவும் முடியும். இக்காய் துளைப்பான் மா போன்ற பழ மரங்களின் காய்துளைப்பானாகவும்இருப்பதனால் மா, மாதுளை போன்ற பழ மரங்களில் பழங்கள் இருக்கும் காலங்களில் இவை விரைந்து இனம்பெருகி பின் வெண்டி காய்க்கத் தொடங்கும் போது அதில் சேதத்தை ஏற்படுத்தும்.



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வெண்டி பயிர் செய்பவர்கள் அறுவடை முடிந்தபின் மீதி இளங்காய்களுடன் வெண்டியை நீண்ட காலத்திற்கு வயலில் விடுவதை தவிர்த்து அறுவடை செய்ய முடியா



தென வரும்போது வெண்டியை பிடுங்கி அழித்து விடுவதே சிறப்பு. அழிக்காது விடில் அதில் இலகுவாக இனம்பெருக்கி பின் வெண்டி பயிரிடும் போது அது தலையிடியாக மாறிவிடும்.

வெண்டி காய்துளைப்பானை கட்டுப் படுத்த தொடுகை பூச்சிநாசினிகள் பயன் தரா. எனவே ஊடுபுகுந்து தாக்கும் பூச்சிநாசினிகளின் தெரிவே இதற்கு பயன்தரும். இயன்றளவிற்கு பூச்சிநாசினிகளை விசுறுவதை தவிர்த்து இப்பூச்சி பீடையை ஏனைய முறைகளால் முகாமைத்துவப்படுத்த முயற்சிப்போமாக.

# அரசாங்கம் பெரிய வெங்காயத்தை எம்மிடம் கொள்வனவு செய்யவேண்டும்

## உற்பத்தியாளர்கள் போர்க்கொடி

நம்மிடம் வெங்காயத்தை கொள்வனவு செய்யாது அரசாங்கம் வர்த்தகர்களிடம் வெங்காயத்தை கொள்வனவு செய்வதிலேயே முனைப்பாக உள்ளதெனக்கூறி சீகிரிய பிரதேச பெரிய வெங்காய உற்பத்தியாளர்கள் நேற்று முன்தினம் வீதியை மறித்து ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வாகனங்கள் ஸ்தம்பித்ததன் காரணத்தால் சாதாரண மக்கள் மட்டுமன்றி உல்லாச பிரயாணிகளும் அசௌகரியங்களுக்கு உட்பட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் பல்வேறு கோசங்களை எழுப்பியதுடன் வீதியின் குறுக்கே வெங்காய மூடைகளை போட்டு தமது ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர்.

விவசாயிகளின் குற்றச்சாட்டு தொடர்பில் நேற்று முன்தினம் வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவிக்கையில்,

விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்வதில் அரசாங்கம் ஒரு போதும் பின்னிற்பதில்லை.

வெங்காய உற்பத்தி விவசாயிகளை பாது காக்கும் வகையிலேயே வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் வெங்காயத்துக்கு கிலோவொன்றிற்கு ஐம்பது ரூபாவை இறக்குமதி வரியாக அரசாங்கம் அதிகரித்துள்ளது. விவசாயிகளிடமிருந்து தற்போது 65 ரூபாவுக்கு வெங்காயம் கொள்வனவு செய்யப்பட்டு வருகிறது.

விவசாயிகளின் கோரிக்கைக்கு உரிய தீர்வு காணவும் இறக்குமதி வரியை மேலும் அதிகரிப்பதா என்பது தொடர்பிலும் சம்பந்தப்பட்டோரிடம் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# கிழக்கில் தனித்து ஆட்சியமைக்க முடியும்; நம்புகிறோம் என்றார் - பைசர் முஸ்தபா

கிழக்கு மாகாணத்தில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினால் தனித்து ஆட்சியமைக்க முடியும் என்று நம்புகின் றோம். கிழக்கில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஈழக்கனவுடனேயே பிரசாரம் செய்து வருகின்றது என்று பிரதியமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே பிரதியமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் கூறியதாவது,

கிழக்கில் சில கட்சிகள் இனவாத ரீதியில் பிரசாரங்களை மேற்கொண்டு வந்தாலும் கிழக்கு மாகாண சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் புத்திசாலிகள். அவர்கள் சகவாழ்வுடன் வாழ்ந்து வருகின்றனர். அந்த வகையில் கிழக்கு மக்கள் தீர்க்கமான முடிவை தேர்தலில் எடுப்பார்கள். கிழக்கில் சில கட்சிகள் இனவாதத்தை பரப்பும் வகையில் பிரசாரம் செய்து வருகின்றன. முஸ்லிம் கட்சிகளும் இவ்வாறே செயற்பட்டு வருகின்றன. ஆனால் இனவாதத்தை கிழக்கு மக்கள் நிராகரிக்கின்றனர். மேலும் தமிழ் மக்கள் ஆளும் கட்சிக்கு வாக்களிப்பதற்கு தயாராக இருக்கின்றனர்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் இன வாதமும் மக்களினால் நிராகரிக்கப்படும். இதே வேளை கிழக்கில் தேர்தலின் பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினால் தனித்து ஆட்சியமைக்க முடியும் என்று நாங்கள் நம்புகின்றோம். (அ-2)

# பூதத்தம்பி இசைநாடகம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி நாகவரதர் நாராயணன் கோவிலின் 4 ஆவது திருவிழாவினை முன்னிட்டு பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகமும் நாட்டார் வழக்கியற் கழகமும் இணைந்து நடத்தும் பூதத்தம்பி எனும் இசை நாடகம் இன்று சனிக்கிழமை மாலை 7 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறும். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் போனவர்களை கண்டறிய இலங்கையை ஐ.நா. அழுத்தவில்லை

## கூட்டமைப்பு பேச்சாளர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**இலங்கையில் காணாமல்போனவர்களை கண்டறிவதற்கு ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தங்கள் கொடுக்கவில்லை. இதனால் காணாமல்போனோர் தொடர்பான உண்மைகள் புதைந்து விட்டன என்று தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,காணாமல் போனவர்கள் தொடர்பில் கண்டறிவதற்காக ஐக்கிய நாடுகள் சபையினால் 3 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டு விசாரணைகள் நடத்துவதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் இதுவரையில் விசாரணைகள் நடத்தப்படவில்லை.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் வெளியிடப்பட்டவாறும் இலங்கை அரசாங்கம் எந்தவித விசாரணைகளையும் முன்னெடுக்கவில்லை.

விசாரணைகளை முன்னெடுப்பதற்கு 2 தொடக்கம் 5 வருடங்கள் தேவையெனத் தெரிவித்துள்ளது. அதற்கான நடவடிக்கைகளை இராணுவம் மற்றும் பொலிஸ் மேற்கொள்ளும் என்று அரசாங்கம் தெரிவிக்கின்றது. ஆனால் இலங்கை இராணுவம் மற்றும் பொலிஸ் செய்யும் செயல்களுக்கு யார் ஏ்பாறுப்புக்கூறுவது?

காணாமல் போனோர்கள் தொடர்பிலான மனித உரிமைகளை இன்னும் அரசாங்கம் சீர்திருத்தம் செய்யவேண்டியுள்ளது. 2006 தொடக்கம் 2007 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கடத்தப்பட்டுள்ளார்கள். கடத்தப்பட்டவர்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்களின் பெற்றோர்கள் நிர்க்கதியான நிலையில் பிள்ளைகளை தேடி திரிகின்றார்கள். பிள்ளைகளை தொலைத்த பெற்றோர்களுக்கு அரசாங்கம் சொல்லும் வழி என்ன?

சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் மற்றும் ஐ.நா. அமைப்புக்கள் காணாமல் போனோர் தொடர்பாக இலங்கை அரசாங்கத்திற்கு அறிவுறுத்தல்கள் கொடுக்கப்பட்டதற்கான காரணங்கள் என்ன? காணாமல் போனவர்களின் விபரங்கள் தொடர்பான உண்மைகளை கண்டறிய எந்தவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டவில்லை.

இவ்வாறான சூழ்நிலையில் காணாமல் போனோர் தினம் பிள்ளைகளை தொலைத்த பெற்றோர்களுக்கு வலிகளை அள்ளிக் கொடுக்கின்றதே தவிர பிள்ளைகளை பெற்றோர்களுக்கு மீட்டுக் கொடுக்கும் தினமாக இல்லை என்றார். (அ-2)

## தென்னாபிரிக்க வர்த்தகக் குழுவினர் 5ஆம் திகதி இலங்கை வருகை தருவர்

தென்னாபிரிக்க உயர்மட்ட வர்த்தக குழுவொன்று அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 30 பேர் கொண்ட இந்தக்குழு எதிர்வரும் 5 ஆம் திகதி இலங்கை வரவுள்ளது. நான்கு நாட்கள் விஜயமாக இலங்கை வரும் இக்குழு பல்வேறு வர்த்தக தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளது.

தென்னாபிரிக்க பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் இந்த குழுவிற்கு தலைமை வகிப்பதாக அமைச்சர் றிசாட் பதியுதீன் தெரிவித்தார்.

இந்தக்குழு எதிர்காலத்தில் இலங்கையில் தமது முதலீடுகள் குறித்து ஆராயும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ-2)

## வடமராட்சியிலிருந்து ஆஸி. சென்றவர்களில் சிங்களவர்களும் உள்ளடங்குகின்றனர்

வடமராட்சி கிழக்கினூடாக சட்டவிரோத முறையில் படகில் அவுஸ்திரேலியாவிற்கு தப்பிச் செல்ல முற்பட்டவர்களுள் சிங்களவர்களும் முஸ்லிம்களும் உள்ளடங்கியிருந்ததாக தெரியவருகின்றது.

அத்துடன் புலம்பெயர் நாடுகளில் உள்ளவர்களே ஆட்கடத்தலில் தொடர்புபட்டிருப்பதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்திருந்த போலியான தகவல்களும் வெளியாகியிருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கின் சுண்டிக்குளம் பகுதியில் மீட்கப்பட்டவர்களுள் கற்பிட்டியை சேர்ந்த முஸ்லிம் ஒருவரும் ஐந்து சிங்களவர்களும் இருந்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

படகொன்றின் மூலம் வடமராட்சி கிழக்கிலிருந்து அவுஸ்திரேலியாவிற்கு புறப்பட்டவர்களே கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் கற்பிட்டி பகுதிகளிலிருந்து அழைத்து வரப்பட்ட அவர்கள் நேற்று முன்தினம் படகு மூலம் தப்பி செல்ல முற்பட்டவேளை கடற்படைக்கப்பலான லங்கா மாதாவினால் சுற்றி வளைக்கப்பட்டனர்.

அவர்கள் அனைவரும் நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது 68 பேரில் கிளிநொச்சியை சேர்ந்த சிறுவன் ஒருவனை தவிர்த்து ஏனையோரை தடுத்து வைக்க நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

குறித்த சிறுவனது தந்தை யுத்தத்தில் மரணித்திருந்த நிலையில் தாயாருடன் வசித்து வந்துள்ளான் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. சிலாபம் பகுதியிலிருந்து 44 இலட்சம் ரூபாவிற்கு குறித்த படகு கொள்வனவு செய்யப்பட்டு குறித்த ஐந்து சிங்களவர்களால் எடுத்து வரப்பட்டிருந்ததாக தெரியவருகின்றது. (அ-2)


ENGLISH EXAMINATIONS

UNIVERSITY OF CAMBRIDGE

A/L முடிந்துவிட்டதா.....?

நீங்கள் பல்கலைக்கழகத்துக்குப் போவதற்கு முன் உங்களின் ஆங்கில அறிவை விருத்தி செய்து ஓர் சர்வதேச Engilsh Qualification னை அடையுங்கள். இன்றே Cambridge English Course இல் சேருங்கள்.



எல்லாப்பரீட்சைகளுக்கும் உரிய நூல்கள் கடந்தகால வினாத்தாள்கள் Test போன்றவை எமது கல்லூரியில் கிடைக்கும்.

விரிவுரையாளர்கள் பல்கலைக்கழகங்களில் பல வருடம் விரிவுரையாற்றிய அனுபவம் உடையவர்கள்.

Cambridge English Exams
5 மட்டங்களில் நடைபெறுகின்றது.

C2 Mastery CPE
C1 Proficiency CAE
B2 Vantage FCE
B1 Threshold PET
A2 Waystage KET

KEY English Test

A1 , A2 U.K Settlement visa வுக்கான பரீட்சைய்ய KET
KEY English Test நாளாந்த English பயன் பாட்டிற்கு உகந்த பரீட்சை. பாடங்கள் Reading and Writing Listening & Speaking. பரீட்சையில் 70% புள்ளிகள் பெற்று A2 Certificale 46 - 69 வரையிலா புள்ளிகள பெற்றால் A1 Certificat கிடைக்கும்

| | |
|---|---|
| Date of Exam | 17 th Nov 2012 |
| Application closing date | 20 th September |
| Exam Fees | Rs 6300/= |

Perliminary English Test

Leval B1
PET Perliminary English Test இது ஓர் Intermediate Level பரீட்சையாகும் For those who want to use English for work and study நீங்கள் B1 தகுதியைப் பெறத்தவறமிடத்து A2 Certificate கிடைக்கும் .

| | |
|---|---|
| Date of Exam | 17 th Nov 2012 |
| Application closing date | 20 th September |
| Exam Fees | Rs 7500/= |

First Certificate in English

Level B2 FCE

உலகத்தில் அதிகமானவர்கள் எடுக்கும் பரீட்சை இதுவாகும் At FCE Leval Candidates can deal confidently with a broad range of written and Spoken English. England இல் எல்லா University களும் IELTS ற்கும் பதிலாக இந்தப் பரீட்சையை ஏற்றுக் கொள்ளுகின்றன.

Subjects Reading , Writing , Use of English, Listening ,Speaking

ஏன் நீங்கள் Camrdge English பரீட்சைகளை எடுக்கவேண்டும்.
மிகவும் குறைவான பரீட்சைக் கட்டணங்கள்
Certificates are valid for life

| | |
|---|---|
| Date of Exam | 8 th Dec 2012 |
| Application closing | 5 th October |
| Exam Fees | Rs. 11200/= |

| | |
|---|---|
| Course Schedule | Mon, Tue, Wed, Thu |
| Duration | 12 weeks |
| Time | Batch 1 10.30 - 12.30 |
| | Batch 2 04.00 - 06.00 pm |

வகுப்புகள்
30.09.2012 ல்ஆரம்பம்

CITY COLLEGE OF ENGLISH
143, Adiyapatham Road, Thirunevely.

எமது புதிய கிளை
பலாலி வீதி, உரும்பிராய்.
(உரும்பிராய் பெற்றோல் நிலையத்திற்கு முன்பாக)

T.P :- 021 2220384 - 077 8803887,
021 3216027


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளைத் தேடி தொடரும் பயணம்

காணாமல்போதல், குறித்த நபரை விரும்பாத ஒரு அரசியல் தலைமை அல்லது ஒரு இராணுவத் தலைமை அவரை அவரது குடும்பத்திலிருந்து அல்லது வீட்டிலிருந்து தூக்கிச் சென்று விட்டாலோ, அல்லது கைது செய்து காணாமல் போகச் செய்வதாலோ அதன் பின்னர் அவருடன் தொடர்புகொள்வதற்கு அவர்களது குடும்பத்துக்கு எந்தவிதமான வழியும் இல்லாமல்போய்விடுகிறது. அவர் உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்பது கூட தெரியாமல் போய்விடும். இதையே காணமல் போதல் என்கின்ற சொல் பதத்தில் அழைக்கிறார்கள்.

சில நாடுகளில் ஜனநாயக முறைமையை அல்லது விடுதலை, சுதந்திரத்தை கோருபவர்களை அடக்கவோ, குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களை அடக்கவோ அல்லது பயங்கரவாதத்தை அடக்கவோ, காணாமல் போதலை ஒரு ஆயுதமாகவும் பயன்படுத்துகிறர்கள். ஆனால், இப்படியான அனைத்து சம்பவங்களிலும் கட்டாயமாக, காணாமல் செய்யப்படுதல் என்பது தடை செய்யப்பட வேண்டும் என்றே ஐ.நா. கூறுகிறது.

அதாவது தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் சட்ட நடவடிக்கைகளுக்கு உரித்துடையவர்கள் என்றும் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறியும் உரிமை அவர்களது குடும்பத்தினருக்கு உள்ளது என்றும் ஐ.நா. கூறுகிறது. எனினும் அப்படி காணாமல் போவோரை இரகசிய சிறைக் கூடங்களில் அடைத்தோ அல்லது இரகசியமாக படுகொலை செய்தோவிடும் நிலை இன்னமும் தொடர்கிறது. உலகெங்கும் பல இலட்சம் பேர் காணமல் போயுள்ளார்கள். எத்தனை பேர் என குறிப்பிட்டு நிச்சயமாக சொல்ல எந்த அமைப்பும் முயற்சிக் எடுக்கவில்லை.

கைதாகி காணாமல் போவோரின் உறவினர்களின் கூட்டமைப்பு எனும் அரச சார்பற்ற அமைப்பு 1981 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இது லத்தீன் அமெரிக்காவில் , சந்தேக நபர்கள் இரகசியமாக கைது செய்யப்படும் முறைமையை எதிர்த்து முதன் முதலாக கோரிக்கை வைத்தது. கொஸ்டாரிக்காவில் இந்நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது. பின்னர் சர்வதேச மன்னிப்பு சபை, ஐ.நா.வின் மனித உரிமைகள் கண்காணிப்பகம் என்பனவும், காணாமல்போகச் செய்வோருக்கு எதிராக போராட தொடங்கின. இதையடுத்து காணமல் போதல் சம்பவங்கள் தொடர்பில் மக்களிடையேயும் ஓரளவு விழிப்புணர்வு ஏற்பட்டது. உலகில் பல நாடுகளிலும் இச்சம்பவம் தொடர்ந்துகொண்டே இருக்கிறது.

**வவுனியாவில் ஆர்ப்பாட்டம்**

காணாமல் போனோர் தினமான நேற்றைய முன்தினம் காணாமல் போனோரது உறவினர்கள் வவுனியா பஸ் நிலையத்தின் முன்பாகக் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்வார்ப்பாட்டத்தில் அவர்கள் காணாமல் போனோர் தொடர்பான விபரங்களை இலங்கை அரசாங்கம் உடனடியாக வெளியிடவேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

மேலும், ஊர்வலமாகச் சென்று வழிபாட்டுத் தலங்களில் வழிபாடு நடத்திச்சென்றுள்ளனர். காணமல் போனோரது உறவினருக்கு மட்டுமல்ல நம் எல்லோருக்கும் இதுவிடயமாக உணர்வுகள் எழத்தானே வேண்டும்.

**ஈழத்தமிழர் அக உணர்வு**

இனிவரும் காலங்களில் கைதாகுதல், காணாமல் போதல் என்ற சூழல் அருகி வரும் விதமாய் நடவடிக்கை ஒன்றை அரசு ஏற்படுத்தவேண்டும்; காணாமல் போதல் என்பது ஒவ்வொரு உறவுகளுக்கும் உள்ளூர வலியை, உளவியல் தாக்கத்தை உண்டாக்கும்.

உண்மையைப் பேசினால், உரக்கக் குரல் கொடுத்தால் உடனே அந்த நபர் காணாமற் போவது இன்றைய நாளில் எம் தேசத்தில் சர்வசாதாரணம். எத்தனை ஆண்டுகள் தம் உறவுகளைத் தொலைத்துவிட்டு கண்ணீருடன் அலையும் மனிதர்கள் எத்தனை பேர். இழப்பில்லாதவர்களால் இழந்தவர்களின் வலியை உணர்ந்துகொள்ள முடியாது என்றாலும். அவர்களிடத்து நின்று அவ்வலியை நாமும் சிறிது உணர்ந்துகொள்ளலாமே!

கடத்தப்பட்டவர், சரணடைந்தவர் என்போரை என்ன செய்தார்கள் என்ற உண்மையை உறவுகளிற்கு சொல்ல அரசிற்கு தைரியம் வரவில்லையா? அல்லது உலக நாடுகளின் அழுத்தம் அவர்களை மிரளச் செய்யவில்லையா? அல்லது அழுத்தம் என்ற போர்வையில் அரசியல் நடத்துகிறார்களா?

என் அப்பா எங்கே , என் கணவர் எங்கே, என் பிள்ளை எங்கே, என் உடன் பிறந்தவர் எங்கே என்ற கேள்விகளுக்கு இதுவரை எந்தப்பதிலும் இல்லை.

எத்தனை மனித உயிர்களைக் குதறிக் கொன்றவருக்கு என்ன தயக்கம், எஞ்சியோரையும் புதைத்துவிட்டோம் என்று மார்தட்டிச் சொல்வதற்கு!

உண்மைகள் நீண்ட காலத்திற்கு உறங்க மாட்டாது என்பர். ஆனால், நீண்டகாலம் கடந்தும் கடத்தப்பட்டவர்கள், சரணடைந்தவர்கள் எங்கே என்ற கேள்விக்கு இதுவரை பதில்தர யாரும் முன்வரவில்லை என்பது மிக வருத்தத்திற்குரியது.

கைதானதை நேரடியாகப் பார்த்த பலர் சாட்சியாக உள்ளனர். ஆனால், அவர்களது கூற்றை அரசு மறுத்துவருவதோடு அவர்களை மிரட்டவும் செய்கிறது. அப்படி ஒரு நபர் சரணடையவில்லையென அழுத்தமாகப் பொய் உரைத்துவருகிறது. அவர்களின் மரணச் சான்றிதழை அவர்களின் உறவுகளுக்கு கட்டாயப்படுத்தி கையளிக்க எத்தனிக்கிறது. இதன் அர்த்தம் என்ன?

முள்ளிவாய்க்காலில் பிரான்சிஸ் யோசெப் என்ற பாதிரியாரின் முன்னிலையில் நூற்றுக்கணக்கான போராளிகள் பொதுமக்கள் குழந்தைகள் என சரணடைந்தார்கள்.

அவர்களின் இன்றைய நிலை என்ன என்பது இதுவரை அறியத் தரவில்லை, அந்தப் பாதிரியாரின் நிலை உட்பட. உலகமே மதிப்பளிக்கும் கிறிஸ்தவ சபையால் அவரின் நிலை அறிய முடியவில்லை என்பது, மிக வருத்தம் அளிக்கிறது.

மதிப்புமிகு ஆயர் மல்கம் ரஞ்சித் என்பவரால் பிரான்சிஸ் யோசெப் பாதிரியாருக்காக குரல் கொடுக்க முடியவில்லை என்பதும் ஆச்சரியம் தான்.

தனிமனிதனாய் தன் உறவுகளுக்கு குரல்கொடுத்தால் அவர்களும் இன்றைய நிலையில் காணமல் போய்விடுவார்கள். அந்த அளவில் உள்ளது, எம் ஜனநாயக ஆட்சி.

சிறைக்கம்பிகளுக்குள் நம் இனம் படும் துயர் இன்று அரசின் மூர்க்கத்தனமான செய்கைகளால், வெளிக் கொணரப்படுகின்றது. அப்படியென்றால் காணாமல் போனோரின் கதி என்ன ஆகியிருக்கும் என்ற கேள்விக்கு சிறிது விடை கிடைத்துள்ளது!

ஆனாலும் குற்றம் செய்தவர் ஒப்புக்கொள்ளும் வரை குரல்கள் உரத்து ஒலித்துக் கொண்டுதான் இருக்கும்.

வன்முறைகள்வரலாற்றை ஒருபோதும் வெல்ல முடியாது என்பது நிதர்சனம்.

போராட்டம் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது எனவும், நாட்டில் அமைதியையும் சுபீட்சத்தையும் ஏற்படுத்திவிட்டதாக பொய்பிரச்சாரங்களைப் பரப்பி இன்னொரு பக்கம் தமிழினத்தின் மீது வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது அரசு. போராட்டம் மௌனித்ததன் பின் எத்தனை விதமான சீரழிவுகளை எமது சமூகம் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது. கலாசாரச் சீரழிவு தொட்டு பல சீரழிவுக்குள் எமது சமூகம் சிக்கிக் கொண்டிருக்கிறது.

உறவுகளின் வருகைக்காய் காத்திருக்கும் நாம் எத்தனை அவலம் நிரம்பிய வாழ்வு வாழ்கின்றோம்.

நம்பிக்கை தான் வாழ்க்கை என்றாலும் காத்திருப்பு கொடுமையல்லவா? மனித நேய அமைப்புக்கள் , அரசியல் கட்சிகள் இணைந்து முன்னெடுக்கும் இந்த காணமல் போனவர்க்கான போராட்டத்தை முடித்துவிடாது கனமான அழுத்தத்தை அரசுக்குக் கொடுக்கவேண்டும். கதறும் மக்களுக்கு நியாயம் கிடைக்க ஆவன செய்ய வேண்டும்.

**தொகுப்பு- ஆசிரியர்**






## செஞ்சிலுவைச் சங்க அண்மைய அறிக்கைகள்

இலங்கையில் போர் முழ்ந்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாகியும் காணமல் போனவர் களின் நிலைமை குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

"விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் 2009 ஆம் ஆண்டு மே மாதம் முடிவடைந்ததாக இலங்கை அரசு தெரிவித்த பிறகும் கூட, இன்னும் 15000 க்கும் அதிகமானவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று தெரியவில்லை" என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் 2011 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.சி.ஆர்.சி. வெளியிட்ட அறிக்கையில் "இலங்கையில் போருக்கு பின்னரான கால கட்டத்தில் இன்னும் 15,780 பேரின் நிலை என்ன ஆனது என்பது இன்னும் தெளிவில்லாமல் உள்ளது என்று கூறப்பட்டுள்ளது. காணாமல் போனவர்களின் பட்டியலில் 751 பேர் மகளிர், 1494 பேர் சிறார்கள்" எனவும் அந்த அமைப்பின் அறிக்கை தெரிவிக்கிறது.

"போர் முடிந்த பிறகு சுமார் 2,80,000 பேர் அரச முகாம்களில் தங்க வைக்கப்பட்ட னர் எனவும், அதில் பெரும்பாலானவர்கள் தமது சொந்த இடங்களுக்கு திருப்பி அனுப் பப்பட்டுள்ளதாகவும் கூறும் ஐ.சி.ஆர்.சி.யின் அறிக்கை, இன்னும் ஆயிரக்கணக்கான வர்களின் நிலை கேள்விக் குறியாகவே உள்ளது என்றும் சுட்டிக் காட்டியுள்ளது.

இதன் காரணமாக இன்னும் கணக்கில் வராதவர்களின் விதி குறித்து ஒரு உறுதியாக தகவலை உறவினர்களால் பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது" எனவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கூறிகிறது.

மேலும்,போர் நடைபெற்ற பகுதிகளுக் கான பயணத் தடை கடந்த ஆண்டு ஜூலை மாதம் விலக்கிக் கொள்ளப்பட்டாலும், அப் பகுதிகளுக்கு சுயாதீனமாக மனிதநேயப் பணியாளர்கள் சென்று வருவது இன்னும் கடுமையான நிபந்தனைகளுக்கு உட்பட்டே இருக்கிறது எனவும் ஐ.சி.ஆர்.சி. யின் ஆண்டறிக்கை கோடிட்டுக் காட்டுகிறது.

இலங்கையில் அவசர காலநிலை விலக்கிக்கொள்ளப்பட்டாலும், விடுதலைதப்புலி கள் அமைப்புடன் தொடர்புடையவர்கள் என்று குற்றஞ்சாட்டப்படுபவர்கள், தீவிரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தொடர்ந்து சிறைகள் மற்றும் தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் செஞ்சிலுவைச் சங்கத்தின் அறிக்கை கூறுகிறது. மேலும், பலர் புனர்வாழ்வ நிலையங்கள் என்று அரசால் கூறப்படும் இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டனர் எனவும், அவர்களின் பெரும்பாலானவர்கள் கடந்த ஆண்டின் இறுதியில் விடுவிக்கப்பட்டனர் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. போர்நடைபெற்ற காலத்திலும் அது முடிவடைந்த உடனடி காலப்பகுதியிலும் தமது உறவுகளுடன் தொடர்புகளை இழந்த ஆயிரக்கணக்கானவர்கள் அது குறித்து செஞ்சிலுவைச் சங்கத்திடம் முறைப்பாடு செய்துள்ளனர் எனவும் அவை இன்னும் தீர்க்கப்படாமலேயே உள்ளன எனவும் ஐ.சி.ஆர்.சி. யின் ஆண்டறிக்கை கூறுகின்றது.

*பேச்சுவார்த்தைகள்*

**பிரிந்துபோயுள்ள குடும்பத்தினரின் கவலைகள்**

பிரிந்துபோயுள்ளகுடும்பங்களின்நிலை குறித்து பாதுகாப்பு அமைச்சகத்துடன் தமது அமைப்பு பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து நடத்திவருகிறது என்றும், தொடர்ந்து இது குறித்து தாங்கள் கண்காணித்து வருவதாகவும் செஞ்சிலுவைச்சங்கம் தெரிவித்துள்ளது. காணாமல்போனவர்கள் குறித்து உரிய தகவல்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் சட்டங்கள் நடை முறைப்படுத்தப்படுவதையும் தாங்கள் கூர்ந்து கவனித்து வருவதாகவும் ஐ.சி.ஆர்.சி கூறுகின்றது. இதே வேளை ஒரு நாள் இடம் பெயர்ந்து மீண்டும் தமது இடங்களுங்களுக்கு மீளக் குடியேறச் சென்றுள்ளவர்களும் அங்கு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் சீரழிந்தநிலையில் உள்ளதையே காண்கிறார்கள் என்றும், தமது வாழ்வாதார நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வ தில் சிரமங்களை எதிர்கொள்கிறார்கள் எனவும் ஐ.சி.ஆர்.சி. யின் ஆண்டறிக்கை தெரிவிக்கின்றது.

**அலுவலகங்கள் மூடல்**

இலங்கை அரசு 2010 ஆம் ஆண்டு பிறப்பித்த ஒரு உத்தரவை அடுத்து வடபகுதியில் ஐ.சி.ஆர்.சி.யின் அலுவலகங்கள் மூடப் பட்டன என்றும் மக்களுக்கு அளிக்கப்பட்டு வந்த உதவி நடவடிக்கைகள் நின்றுபோயின என்றும் அதன் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றன. "மீள்குடியேற்றப் பகுதிகளில் தாங்கள் திட்டமிட்டிருந்த குடிநீர் விநியோகத் திட்டங்களை செயற்படுத்தக்கூட அரசு தடை விதித்தது எனவும் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் தெரிவிக்கிறது. அதேபோல பொது மக்களின் நலன்களை தொடர்ச்சியாகக் கண் காணிப்பதையும் அரசு தடைசெய்துள்ளது என்றும் அதன் அறிக்கை கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்ந்து மறைந்தவர்களில் என்றும் நெஞ்சில் நிலைப்பவர் தனிநாயகம் அடிகள்


வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி நெஞ்சில் நிலைப்பவர் ஒரு சிலரே. ஈழ மணித்திருநாட்டிலே ஈழத் தமிழர் வரலாற்றில் 20 ஆம் நூற்றாண்டில் இருவர் புகழ்பூத்த நாயகர்களாக விளங்குகின்றனர். அரசியல் ரீதியாக ஈழத்தமிழரின் உரிமைக்காக இறுதி மூச்சு வரை வேண்டி நின்ற நாயகம் தந்தை செல்வநாயகம். தமிழினத்துக்கு தனித்துவம் உண்டு. தனித்து நிற்கச் சக்தி படைத்தவன் தமிழன் என்று உலக அரங்கில் வரலாற்றுக் கலாசார இடத்தைக் கொடுத்த நாயகம் தமிழ்த்தூது பேரறிஞர் தவத்திரு தனிநாயகம் அடிகள்.

தமிழ்த்தூது தவத்திரு தனிநாயகம் அடிகளின் திருப்பெயரை நினைக்கும் போது செந்தமிழின் பழைமையும் இனிமையும் பெருமையும் புதுமையும் பண்பாடும் பறை சாற்றும் சிகரமாகத் தரணியில் தனித்துவமிக்க தமிழாய்வின் தன்நிகரில்லா நிறுவனமாக அவர் திகழுகிறார். முற்றும் துறந்த முனிவனுக்குத் தமிழ் மேல் கொண்ட அதீத காதலை துறக்க முடியவில்லை. இதற்கு அடிகளின் அமுதவுரையே தக்க சான்றாகும். யாழ்.குடாநாட்டில் வேலணையில் நடைபெற்ற திருக்குறள் மகாநாட்டில் கண்கள் பஞ்சடைந்து போகிறது. கால்கள் மறுக்கின்றன. ஆனால் தமிழ்ப்பற்று இன்னும் என்னோடிருக்கிறது என்றார். தமிழ் கூறும் நல்லுலகில் வழக்கிலிருந்த இன்பத் தமிழ்மொழியை அகிலத்தில் அரியாசனம் ஏற்றிச் சக்தி வாய்ந்த உலகமொழிகளுடன் சரியாசனம் பெற வழிசமைத்த பெருமைக்குரியவர் தனிநாயகம் அடிகளே என்பது மிகையாகாது.

என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே என்பது திருமூலரின் திருவாக்கு. இதற்கு தனிநாயகம் அடிகள் இலக்கணமாக திகழ்ந்தார். இன்று இவர் இறைபதமடைந்து 32 ஆண்டுகள் உருண்டோடினாலும் மண்ணில் மலர்ந்து 99 ஆண்டுகள் கன்னித் தமிழுக்கும் கத்தோலிக்க திருமறைக்கும் தனிநாயகம் அடிகள் ஆற்றிய மாபெரும் பணியை காலமெல்லாம் நன்றிப் பெருக்குடன் இவ்வுலகில் கடைசித் தமிழன் வாழும் வரை நினைவுகூர கடமைப்பட்டுள்ளான்.

வெளிநாட்டவரும் தமிழ் அன்னையின் அமிழ்து சுவைத்துத் தலை வணங்க வேண்டுமென்ற பாரதியின் கனவை உலகத் தமிழாய்வின் தந்தை தனிநாயகம் நனவாக்கினார். இவரால் தமிழினம் பெருமையுற்றது. ஈழநாடு இணையற்ற புகழையீட்டியுள்ளது.

நேற்று என்பது உடைந்த பானை, நாளை என்பது மதில்மேல் பூனை, இன்று என்பது மீட்கும் வீணை என ஒரு அறிஞர் கூறியுள்ளார். சொல்லின் வேந்தன் தனிநாயகம் அடிகள் தர



ணியில் தமிழுக்கும் திருமறைக்கும் ஆற்றிய மாபெரும் பணியை நாம் மீட்டுப்பார்ப்பது சாலவும் சிறந்தது.

பசுந்தீவு எனப்படும் நெடுந்தீவில் ஆசிரியத் திலகம் இஸ்ரனிஸ்லாஸ் கணபதிப்பிள்ளைக்கும் வாழ்க்கைத் துணைவி சிசில் இராசம்மாவுக்கும் கருவிலே திருவுடையராக சேவியர் தனிநாயகம் 1913.08.02 இல் பிறந்தார்.

இவர் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் படிக்கும் காலத்தில் கல்வியிலும் தெய்வ ஞானத்திலும் ஒழுக்கத்திலும் விளையாட்டுத்துறையிலும் அதி உன்னத மாணவனாகத் திகழ்ந்தார்.

தனிநாயகம் அடிகள் உலகைத் துறந்து குருத்துவப் பயிற்சி பெற 1931 தொடக்கம் 1934 வரை கொழும்பு புனித பேணாட் குருமடத்திலும் தவத்திரு தாவீது அடிகளின் நெறிப்படுத்தலினாலும் இந்தியாவின் முதலாவது சுதேசி ஆயர் றோச் ஆண்டவரின் ஆதரவும் அரவணைப்பும் கிடைத்ததினாலும் குருத்துவ சிறப்புப்பயிற்சியை உரோமாபுரியில் ஊர்பான் பல்கலைக்கழகத்தில் குருத்துவக்கல்வி கற்று 1938-03-19 இல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் 25 ஆவது வயதில் திருமுறைக் கலாநிதி D.D. பட்டம் பெற்றார். தமிழ், ஆங்கில மொழிகளில் முதுகலை மாணி (M.A.) இலக்கிய முதுமாணி (M.Litt) லண்டனில் கல்வியில் கலாநிதி (Ph.D) ஆகிய பட்டங்களைப் பெற்றார். திருநகரில் 43 நாடுக்ளைச் சேர்ந்த குருத்துவ மாணவர்களுடன் படித்ததனால் இவருக்கு பன்னாட்டு சமூக உறவு வலுப்பெற்றது.

பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்ற வானிலும் நனி சிறந்தனவே என்ற பாரதியின் கூற்றை உய்த்துணர்ந்த தனிநாயகம் அடிகள் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கல்வித் தத்துவ விரிவுரையாளராகவும் 1951 தொடக்கம் 1961 வரை கற்பித்தலில் ஈடுபட்டார்.

## இன்று தனிநாயகம் அடிகளாரின் 32 ஆவது நினைவு தினம்

இவர் மேற்குலக நாடுகளில் மலாயப் பல்கலைக்கழகத்தில் 1961 தொடக்கம் 1969 ஆம் ஆண்டு வரை பேராசிரியராக இந்தியக் கலைகள்- கலைத் துறைப்பீடாதிபதியாக பணிபுரிந்தார். 1970 தொடக்கம் 1971 ஆம் ஆண்டு வரை நேப்பிள்ஸ் பல்கலைக்கழகத்திலும் சேவையாற்றினார்.

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் 15 மொழிகளில் வல்லுநராகவும் 30 மொழிகளில் பரீட்சயமுடையவராகவும் மொழிப்புலமையினால் சொல்வேந்தராகவும் திகழ்ந்தார். செம்மொழிகளில் தமிழ் ஒன்று மட்டுமே என்ற உண்மையை இன்றைய நவீன மொழியியலாளர்கள் வகுத்துள்ள 11 கோட்பாடுகளுக்கும் தகுதியுடையது என்பதை முன்னோடியாக அகிலம் முழுவதும் தரிசித்து தமிழின் மகிமையையும் பெருமையையும் செயல் உருவப்படுத்திய கர்மவீரர் தனிநாயகம் அடிகள் என்றால் அது வெள்ளிடை மலையாகும்.

இவர் எழுதிய தமிழ் நூல்கள்:-

ஒன்றே உலகம் (பிரயாணக் கட்டுரைகள்), தமிழ்த்தாது (கட்டுரைத் தொகுப்பு), வேறு பல நூல்களில் ஆராய்ச்சிக் கட்டுரைகள்.

மற்றும் ஆங்கில நூல்கள்:-

தமிழ்ப்பண்பும் நாகரீகமும் (லண்டன்), வெளிநாடுகளில் தமிழ் மொழி (மலாயா), தமிழ் கற்பதற்கான கைந்நூல் (மலாயா), இயற்கையும் புலமையும்- தமிழ் இலக்கியங்களில் (பம்பாய்), கார்தூசின் குருகுலம் (அமெரிக்கா) வேறு பல நூல்களில் ஆராய்ச்சிக் கட்டுரைகள்.

தந்தை செல்வாவின் நினைவுப் பேருரையை தனிநாயகம் அடிகள் மறைவதற்கு நான்கு மதங்களுக்கு முன் 28.04.1980 இல் எழில் நகராகிய யாழ்.நகரில் வீரசிங்கம் மண்டபத்தில் அழகு தமிழில் அன்பர்களின் உள்ளங்கள் எல்லாம் கொள்ளை கொண்டதாக ஆற்றிய இனிய உரையின் சிறுதுளியை சுவைத்தால் உண்மை விளங்கும்.

தனிநாயகம் எனும் தமிழின் மாபெரும் இமயமலை சரிந்ததையிட்டு கண்ணீர் சொரியும் வேளை அடிகள் தமிழுக்கும் திருமறைக்கும் ஆற்றிய பெருந்தொண்டு நினைவு கூரும்பொழுது தனிநாயகத்தின் பசுமையான தோற்றம் ஒளியுமிழும் கண்கள், புன்னகை தவழும் மலர்ந்த முகம், எடுப்பான உயர்ந்த தோற்றம், தூய வெண்ணிற ஆடை,குரு என்ற முழுமை, தமிழே உயிர் என இறுதி மூச்சுவரை உழைத்த பேரறிஞரின் பூதவுடல் அழிந்தாலும் புகழ் உடம்பு என்றும் மடிவதில்லை என உய்த்துணர்ந்தேன்.

கன்னித் தமிழுக்கும் களங்கம் ஏற்படாத முறையில் காவலராகவும் தொண்டராகவும் பணிபுரிவது தமிழர் ஒவ்வொருவரின் கடமை என சிந்தித்து செயலாற்ற மனமகிழ்வுடன் முன் வாரீர். தனிநாயகத்தின் ஆன்மா சமாதான ஒளியில் ஒளிர்வதாக.

துரை.ஆரோக்கியதாசன்
முன்னாள் பிரதி அதிபர்,
பலாலி ஆசிரியர்
கலாசாலை

# இலங்கைப் படையினருக்கு பயிற்சியளிப்பு; அனைத்துக்கட்சிகளும் எதிர்க்கவேண்டும்

## புழ.நெடுமாறன் கோரிக்கை

(தமிழகம்)

தமிழகத்தை அலட்சியப்படுத்தும் மத்திய அரசுக்கு எதிராக அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து போராட வேண்டும் என தமிழர் தேசிய இயக்கத்தலைவர் பழ.நெடுமாறன் வலியுறுத்தினார்.

இது தொடர்பாக செய்தியாளர்களுக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை அவர் அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு, இலங்கை இராணுவவீரர்களுக்கு இந்தியாவில் தொடர்ந்து இராணுவப் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. இதற்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தைச்சேர்ந்த அனைத்து அரசியல் கட்சிகளும் இதற்கு கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளன. ஆனால் மத்திய அரசு தமிழகத்தின் எதிர்ப்பைக் கண்டுகொள்ளாமல் இருந்து வருகிறது.

தமிழகத்தில் குறிப்பாக நீலகிரி இராணுவப் பயிற்சி முகாமில் இத்தகைய பயிற்சியளிப்பது வெந்தபுண்ணில் வேலைப் பாய்ச்சுவதாக உள்ளது. இந்திய எல்லைக்குள் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை இலங்கை கடற்படை தாக்கியதில் இதுவரை 500 பேர் உயிரிழந்துள்ளனர்.

இது குறித்து தமிழக முதல்வர் எதிர்ப்புத் தெரிவித்தும் மத்திய அரசு மௌனமாக இருந்து வருகிறது. இவ்வாறு தொடர்ந்து தமிழகத்தை புறக்கணித்துவரும் மத்திய அரசுக்கு எதிராக தமிழகத்தைச் சேர்ந்த அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றுசேர்ந்து போராட வேண்டும் என்றார். (அ-2)

# இந்தியாவுடன் இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்த முனைப்பு

## வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

இலங்கை அரசாங்கம் இந்தியாவுடனான இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் முனைப்புகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தியாவில் இலங்கை இராஜதந்திர பிரசன்னம் மேலும் விஸ்தரிக்கும் வகையில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அமைச்சரவையில் முன் வைத்த யோசனைக்கு அங்கீகாரம் வழங்கப் பட்டுள்ளது.

இதன்படி இந்தியாவில் இலங்கையின் இராஜதந்திர பிரசன்னம் மேலும் விஸ்தரிக்கப் படவுள்ளது. இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயத்திற்கு மேலதிகமாக [illegible] காரியாலயங்களை விஸ்தரிக்கத்திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை பிரதி உயர்ஸ்தானிகராலயத்தில் இரண்டு தமிழ் பேசும் உயர் அதிகாரிகளை நியமிக்கவும் யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது.

டில்லி உயர்ஸ்தானிகராலய அலுவலகத்தில் பொருளாதார, முதலீடு, வர்த்தம் மற்றும் இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதற்கு அதிகாரியொருவரை நியமிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக இலங்கை இந்தியாவை விடவும் சீனாவுடன் நெருங்கிய உறவுகளைப் பேணி வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

206

## கோழை மிருகங்கள்

ஒருநாய் ஒரு வீட்டில் வாழ்ந்து வந்தது. ஒருநாள் அது வீட்டுக்கு வெளியே இரைதேடப்போனது. அது இரை தேடித் திரிந்த ஓர் ஓநாயைச் சந்தித்தது. நாயும் ஓநாயும் பகைப்பிராணிகள். அவை ஒன்றையொன்று சந்தித்தபோது, நாய் ஓநாய் மீது குற்றம் சாட்டியது. ஏ ஓநாயாரே, நீ ஏன் இந்த ஊருக்கு வந்தாய்? உன்னைப் போன்ற கெட்டவர்கள் ஏதாவது திருடத்தான் இங்கு வருவார்கள். அது சரியா? என்றது.

நாயின் பேச்சைக் கேட்ட ஓநாய்க்கு கடுங்கோபம் வந்தது. அது நாயைப் பார்த்து, நாயாரே, கேவலம் என்னை அவமரியாதைப்படுத்துகிறாயே. என்னைக் கள்வன் என்று ஏன் கூற வேண்டும். நான் ஒரு சுதந்திரமான ஓநாய். எனது வாழ்க்கைக்காக உணவைச் சுதந்திரமாக உழைத்துச் சாப்பிடுகிறேன். ஆனால் நீயோ ஒரு சோம்பேறி நாய். உனது வாழ்க்கைக்குப் பாடுபட்டு உழைத்துச் சாப்பிடாதவன் கொடிய மனிதர் போடும் எச்சில் இலைக்காக ஏங்கிக் கிடப்பவன். என்னைப்போல நீ ஒருநாளும் நல்ல உணவைத் தின்றது இல்லையே! உனக்கு அந்த சுயநல மனிதரை மகிழ்விக்கத்தான் தெரியும். நீ ஒருநாளும் என்னைப் போல சுதந்திரமானவன் இல்லையே என்றது.

நாய்க்குக் கடும்கோபம் வந்தது. எனினும், அக்கோபத்தை அடக்கிக் கொண்டு, ஓநாயாரே, உமக்கு மனிதரின் உணவைத் திருடத்தான் தெரியும். உம்மால் மனிதர்களுக்கு உண்டாகும் கரைச்சலோ அதிகம். என்னைப் பொறுத்தமட்டில் அவர்களிடமிருந்து நல்ல உணவை மட்டும் பெறுகிறேன். ஆகையால், நான் அவர்களுக்கு விசுவாசம் உள்ளவனாக இருக்கின்றேன். அவர்களுக்காகக் காவல் செய்வது எனது கடமை. நான் அவர்களைச் சும்மா மகிழ்விப்பதற்காக இதனைச் செய்வது இல்லை. கள்ளப்பயலே, நீ மற்றவர்களைத் துன்புறுத்துவதில் தான் கெட்டிக்காரன்.


இதைக்கேட்ட ஓநாய்க்குக் கடும் கோபம் வந்தது. அது கடூரமாக உரத்துப்பேசியது. ஓ நாயே, நீ என்னை இழிந்தவன் என்று நினைத்துக் கொண்டாய். நீயோ, நானோ சிறந்தவன்?

நாய் அதனது பேச்சில் குறுக்கிட்டு, நீ என்னைப் பரீட்சிக்கப் பார்க்கிறாய். உனது பேச்சு அதனைக் காட்டுகிறது. அப்படியல்லவா? சரி,சரி, வா சண்டை போட்டுப்பார்ப்போம். அப்போது யார் வெல்லுவார் என்பது தெரிந்துவிடும் என்று கூறியது.

ஓநாய், நாயின் சவாலை ஏற்றது. அதற்குத் தனது பலத்தில் அபார நம்பிக்கை இருந்தது. எனினும், ஓநாய், நாயைப்பார்த்து, எனக்கு உன்னோடு சண்டை பிடிக்க விருப்பமில்லை. ஏனென்றால், நீயோ மெலியவன், நானோ வலியவன். மற்றவர்கள் நான் மெலியாரை வருத்துபவன் என்று குறை சொல்வார்கள். நாங்கள் சண்டை பிடிப்பதனால் அதற்குச் சாட்சிகள் வேண்டும். ஆகவே, நீ போய் உன் நண்பர்களைச் சாட்சிக்குக் கூட்டிக்கொண்டு வா. நாங்கள் இன்று பின்னேரம், இந்த முச்சந்தியில் சந்திப்போம். அந்த யோசனை எப்படி? என்றது.

அதுதான் முறையான செயல் என்று நாய் பதிலளித்தது. அவை இரண்டும் சந்திக்கும் இடம், நேரம் என்பன பற்றி முடிவு செய்தன. அதன்பின்னர் இரண்டு மிருகங்களும் பிரிந்து சென்றன.

நாய் ஊருக்குத் திரும்பிச் சென்று ஓநாயைப் பற்றியும் போட்டிப் பந்தயம் பற்றியும் தனது நண்பர்களுக்குக் கூறியது. நாய் நண்பர்களிடம், எனது அருமை நண்பர்களே, இன்று நான் அந்தக் கொடுமைக்கார ஓநாயைச் சந்தித்தேன். அது அங்கே இரை தேடிக் கொண்டிருந்தது. நான் அதைச் சந்தித்த இடம் இங்கிருந்து அதிக தூரத்தில் இல்லை. அந்த ஓநாய் இந்த ஊருக்கு வடக்கேயுள்ள முச்சந்தியில் என்னோடு சண்டை செய்யப் பந்தயம் பிடித்திருக்கிறது. அச்சண்டை ஒரு மரணப் போராட்டம் என்று ஓநாய் சொல்லியிருக்கிறது. ஓநாயை எதிர்த்துப் போராட முடியாது என்று எனக்குத் தெரியும். எனினும், அதனோடு நான் போரிட வேண்டும். ஏனென்றால், அந்த ஓநாய் என்னை மிக இழிவாக நினைத்துக் கொண்டது. எனது நண்பர்களையும் கூட்டிவந்தால் மட்டுமே என்



னோடு போட்டியிட ஆயத்தம் என்று ஓநாய் சொல்லியிருக் கிறது. ஆகவே, யாராவது என்னுடன் கூட வருவீர்களா? என்று நாய் கேட்டது.

அந்த ஓநாய் அவ்வளவுதூரம் உன்னை இழிவாக ஏசினதா? என்று ஒருநாய் கோபத்தோடு வினவியது. சரிசரி. அந்தச் சண்டைக்கு நாங்கள் சாட்சிகளாகப் போவோம் என்றது அந்த நாய்.

மேலும் அந்த நாய், நீ தோல்வியடைந்தால் உனக்கு நான் உதவி செய்வேன். அந்த ஓநாயும் சும்மா தனியே வராது. தனது நண்பர்களையும் கூட்டிக் கொண்டு வரும். நாங்கள் எல்லோரும் சேர்ந்து போவோம் என்றது. பின்பு நாய், பூனை, சேவல், தாரா என்பனவற்றை உதவிக்கு வருமாறு அழைத்தது. எல்லாப் பிராணிகளும் நாயுடன் ஒன்று சேர்ந்து போகச் சம்மதித்தன.

ஓநாய் தனது நண்பர்களாகிய புலி, கரடி என்பவற்றைச் சந்தித்தது. அவற்றிடம் நடந்த சம்பவத்தைச் சொல்லி, உதவிக்கு அழைத்தது. என் சகோதரர்களே, இன்று நான் ஒரு நாயைச் சந்தித்தேன். அந்த நாய் என்னுடன் சண்டை போடப் பந்தயம் பிடித்திருக்கிறது. அப்பந்தயத்தில் எனக்கே வெற்றி கிடைக்கும் என்று நினைக்கிறேன். நான் அந்த நாயைக்கொன்றால் அதைச் சாப்பிடுவேன். ஆனால், அது மாத்திரம் எனது உணவுக்குப் போதாமல் இருக்கலாம். ஆகவே, அந்த நாயுடைய நண்பர்களையும் கூட்டிக் கொண்டு போருக்கு வரச் சொல்லியிருக்கிறேன். நாங்கள் அந்த முச்சந்தியில் போராடச் சம்மதித்துள்ளோம். நீங்கள் இருவரும் என்னோடு கூட வருவீர்களா? என்று ஓநாய் கேட்டது.

என்னை நீ அழைக்கவும் வேண்டுமா? நிச்சயம் நான் உன்னோடு வருவேன். எமது சாப்பாட்டுக்கு ஏதாவது வலியத்தேடி வருவது அதிர்ஷ்டமே. அதைப் பெறுவதற்கு உன்னோடு வராமல் இருக்க நான் ஒரு மடையனா? அப்படியானால் நாங்கள் எப்போது புறப்படுகிறோம் என்று புலி கேட்டது.

இன்றைக்கே போவோம், உங்கள் எண்ணம் என்னவோ? என்றது ஓநாய். கரடி ஒன்றும் பேசவில்லை. ஆனால் அது தலையை அசைத்துத்தன் சம்மதத்தைத் தெரிவித்தது. பின்னர், ஓநாயுடன் புலி, கரடி என்ற மிருகங்களும் சேர்ந்து புறப்பட்டன. அவை மூன்றும் நாயும் நண்பர்களும் வந்து சேருமுன்னே அந்த முச்சந்தியைச் சென்றடைந்துள்ளன.

ஓநாய் நீண்டநேரம் காத்துக் கொண்டிருந்தது. அது நாயின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. அது கரடியைப் பார்த்து நாய் இன்னும் வந்து சேரவில்லையே. ஆச்சரியமாயிருக்கின்றது. நாயும் நண்பர்களும் எங்களுக்குப் பயந்து போய் இருக்கலாம். கரடியாரே எனக்காக இந்த மரத்தில் ஏறி நாயும் நண்பர்களும் வருகிறார்களா என்று பாருங்கள் என்று ஓநாய் கூறியது. கரடி ஒரு பதிலும் கூறாமல் உடனே மரத்தில் ஏறியது. சிறிது நேரத்தின் பின் நாயும் நண்பர்களும் முச்சந்தியை நோக்கி நடந்து வருவதைக் கரடி கவனித்தது. முதலில் சேவல் நடந்து வருவதைக் கரடி கண்டது. அது சேவலை முன்னொரு நாளும் கண்டதில்லை. சேவலின் பொன்மயமான வால் சூரிய வெளிச்சத்தில் தகதகவென்று மின்னியது. அதைக்கண்ட கரடி திகைத்தது.

தனது எதிரிப்படை ஏதோ மாயமான ஆயுதங்களுடன் வருகின்றது என்று கரடி நினைத்தது. கரடி உரத்துக்கத்தியது. ஐயோ, கடவுளே, நாய்களிடம் மாயவித்தை யுத்த ஆயுதங்கள் இருக்கின்றன. நாய்களுடன் நாங்கள் போராடி வெல்வது சந்தேகம். கரடியின் பெருஞ் சத்தத் தைக் கேட்ட ஏனைய இரு மிருகங்களும் திடுக்கிட்டன. அவை கரடி சொன்னவற்றைக் கேட்டு நடுக்கமடைந்தன. அவை சிந்தித்துப் பார்க்கவும் இல்லை. கோழைகளாகிய அந்த ஓநாயும் புலியும் ஓட்டம் பிடித்தன. அவை அங்கிருந்து வேகமாகக் காட்டுக்குள் ஓடிவிட்டன.

ஓநாய் ஒரு மரப்பொந்துக்குள் ஒளிந்து கொண்டது. புலி பற்றைச் செடிகளுள் ஓடி மறைந்தது. புலியின் உடம்பு முழுவதும் இலைகள், சருகுகள் என்பன ஒட்டிக் கிடந்தன. அப்போது புலி, புலியாகத் தோற்றம் அளிக்கவில்லை. அது வேறு ஏதோ மிருகம் போலக் காட்சியளித்தது.

இப்படியான கோலத்தில் புலி, ஓநாய் ஒளிந்திருந்த மரப்பொந்தை நோக்கி ஓடியது. அதைக்கண்ட ஓநாய் அதனை ஓர் ஓநாய் என்று நினைத்தது. ஓநாய் முன்னதாகவே பயந்து நடுங்கிக்கொண்டிருந்தது. ஆகவே அதனை உற்றுப்பார்த்து நிச்சயம் செய்யவும் அதற்குத் துணிவு வரவில்லை. அது மரப்பொந்திலிருந்து திடீரெனப் பாய்ந்தது. அவ்வாறு பாய்ந்தபோது அது புலியின் மேல் விழுந்து மோதியது. புலி மேலே நிமிர்ந்து பார்த்தது.


ஓநாய் தன்னைக் கடிக்கவந்தமையை உணர்ந்தது. இரண்டும் சண்டை போட்டுக் கடிபட்டு ஒரு பள்ளத்தில் விழுந்தன. மரத்தின்மேல் இருந்த கரடி தனது இரண்டு நண்பர்களும் ஓடுவதைக் கண்டபோது மிகவும் பயந்து நடுங்கிக்கொண்டிருந்தது. அப்போது நாயின் நண்பர்கள் மரத்தடிக்குக் கிட்ட வந்து கொண்டிருந்தார்கள். கரடி திடுதிப்பென மரத்திலிருந்து இறங்கியது. இறங்கும் போது அது கவலையீனமாக பட்ட மரக்கிளை ஒன்றைப் பிடித்தது. அந்த மரக்கிளை படாரென முறிந்தது. அதனுடைய கழுத்தும் அடி பட்டு முறிந்தது. கரடி அக்கணமே இறந்தது.

நாயும் நண்பர்களும் கரடி விழுந்து கிடந்த இடத்திற்கு வந்தன. அங்கே கரடி விழுந்து இறந்து கிடந்ததைக் கண்டு ஆச்சரியம் அடைந்தது. நாய் தனது நண்பர்களைப் பார்த்து மற்றைய இரண்டு மிருகங்களின் நடமாட்டம் ஏதும் உண்டா? சுற்றும் முற்றும் தேடிப் பாருங்கள் என்றது.

எல்லா நண்பர்களும் அங்கே யிருந்த பள்ளத்தை அடையும் வரை ஓநாயையும் புலியையும் தேடித்தேடி நடந்தன. ஓர் இடத்தில் அவர்கள் கீழே நோக்கிப் பார்த்தன. அங்கே அப்பள்ளத்தின் அடியில்புலியும் ஓநாயும் இறந்து கிடப்பதைக் கண்டன. இது நண்பர்களுக்குப் பெரிய ஆச்சரியமாக இருந்தது. அவற்றில் சேவல் மாத்திரம் ஓநாய், புலி, கரடி மூன்றும் இறந்த காரணத்தை ஊகித்துக்கூறியது. சேவல் நண்பர்களைப் பார்த்து, இந்த மூன்று பிராணிகளும் எங்களைக் கண்டு மிகவும் பயந் து விட்டன என்று நினைக்கிறேன். எனவே, தங்கள் உயி ரைக்காப்பாற்ற இவை ஓடியிருக்க வேண்டும். அப்படி ஓடும் போது புலியும் ஓநாயுமம் இந்தப் பள்ளத்தில் விழுந்து இறந்திருக்க வேண்டும். கரடி மரத்திலிருந்து விழுந்து இறந்திருக்க வேண்டும். இதுதான் எனது ஊகம் என்று கூறியது.

## நாட்டார் கதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கரவெட்டி தபால் அஞ்சல் அலுவலகத்திற்கு அண்மையில் அஞ்சல்மா அதிபதி நாயகம் டி.எல்.பி.ஆர் அபேரத்ன தலைமையிலான குழுவினர் விஜயம் மேற்கொண்டனர். இந்நிகழ்வில் கரவெட்டி அஞ்சல் அதிபர் ஏ.அருளானந்தசோதி அஞ்சல்மா அதிபதி நாயகத்திற்கு நினைவுப் பரிசு வழங்குவதையும் பொதுமகன் ஒருவனுக்கு தபாலை விநியோகிப்பதையும் அதிபதி குழுவினர் வீடு வீடாக சென்று அஞ்சல் இலக்கத்தை இடுவதனையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ். செல்வதீபன்)

# யாழ்ப்பாண நகரின் அபிவிருத்திக்கு ஏற்ப தொழிலாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

## சுத்திகரிப்புப் பிரிவு தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் பொறியியல் பிரிவு மாநகர சபைக்கு மாதாந்தம் 10 தொடக்கம் 13 இலட்சம்ரூபா வருமானம் ஈட்டித் தருவதாக யாழ். மாநகரசபையின் சுத்திகரிப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வருமானம் யாழ்.மாநகர சபைக்குட்பட்ட இடங்களில் உள்ள வீடுகள், சந்தைகள், கடைகள் போன்றவற்றின் கழிவுகளை அள்ளுவதனாலேயே கிடைக்கின்றது.

இவ்வருமானத்தின் மூலம் யாழ். மாநகர சபை சுத்திகரிப்பு பணி படிப்படியாக நவீனமயப்படுத்தப்பட்டு வருகின்றது.

மேலும் நாம் யாழ்.மாநகரசபையின் இப்பிரிவைபொறுப்பேற்க முன்னர் 4 குப்பை அகற்றும் டிரக்டர்கள் இருந்தன. தற்போது அவ் எண்ணிக்கை 30 ஆக உயர்வடைந்துள்ளது.கொழும்பு மாநகர சபையில் குப்பை அகற்றும் பக்கோ இயந்திரங்கள் போன்று யாழ். மாநகரசபைக்கும் பெற்றுத்தருமாறு வெளிநாட்டு நிறுவனங்களிடமும் ஜனாதிபதியிடமும் கேட்டிருந்தோம்.

அதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளதோடு யாழ். மாநகரசபையினையும் நவீனமயப்படுத்த உதவிகள் வழங்குவதாகவும் உறுதியளித்துள்ளார்.

மாநகரசபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் சுத்திகரிப்பு பணிக்கென 254 நிரந்தர தொழிலாளர்கள் உள்ளதோடு நாளொன்றுக்கு பதிலீட்டு தொழிலாளர்களாக 100 தொழிலாளர்கள் உள்ளனர்.

நகரின் அபிவிருத்திக்கேற்ப மேலும் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என அப்பிரிவு தெரிவித்துள்ளது.(அ-4)

# அமைச்சரவை அனுமதி வழங்கிய யோசனை ஏமாற்று நடவடிக்கை

## சிரேஷ்ட விரிவுரையாளர் அமிலதேரர் குற்றச்சாட்டு

அமைச்சரவை வழங்கிய யோசனையானது ஏமாற்றும் நடவடிக்கை என்பதால் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொடர்ந்தும் தமது கோரிக்கையை முன்வைத்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவார்கள் என சிரேஷ்ட விரிவுரையாளர் தம்பர அமிலதேரர் தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் கடந்த 29 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் எட்டு யோசனைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட ஆவணம் ஒன்று நேற்று முன்தினம் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

அந்த யோசனைகள் 5 சதம் கூட மதிப்பிட முடியாத யோசனை எனவும் தமது கோரிக்கைகளை மூடி மறைத்து வேறு காரணங்களை அடிப்படையாக கொண்ட யோசனைகளுக்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

மொத்த தேசிய வருமானத்தில் 5 வீதத்தை கல்விக்காக ஒதுக்க வேண்டும் என்பதே விரிவுரையாளர்களின் பிரதான கோரிக்கையாகும்.

ஆனால் இந்த கோரிக்கைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கவில்லை எனவும் தம்பர அமிலதேரர் கூறியுள்ளார். (அ-2)

# பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கம் (வ.து)

## நிழற்பட பிரதி இயந்திரம் விற்பனை செய்தல்

சங்கத்தின் பாவனையிலுள்ள N.P.1215 இலக்கம் கொண்ட கனன் நிழற்பட பிரதி இயந்திரம் விற்பனை செய்யப்படவுள்ளது. விற்பனை செய்யப்படவுள்ள நிழற்படபிரதி இயந்திரத்தினை கொள்வனவு செய்ய விரும்புவோர் தமது கேள்வித் தொகையினை குறிப்பிட்டு பெயர், முகவரியுடன் தபால் மூலம் விண்ணப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

கேள்விக் கோரிக்கை சமர்ப்பிப்போர் பொது முகாமையாளர் பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கிராமக்கோட்டடி, புலோலி, பருத்தித் துறை எனும் முகவரிக்கு 15.09.2012 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் விண்ணப்பிக்கவும். மேலும் விண்ணப்பக் கடிதத்தின் இடதுபுறமேல் மூலையில் நிழற்படபிரதி இயந்திரம் கொள்வனவு செய்தல் எனக் குறிப்பிடவும்.

இயந்திரத்தினைப் பார்வையிட விரும்புவோர் அலுவலக வேலை நேரத்தில் பார்வையிட முடியும்.

தலைவர் பொதுமுகாமையாளர்

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

(சி-887)

# பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கம் (வ.து)

## அங்கத்தவர்களுக்கான விசேட அறிவித்தல்

## சேம மீதிகளை உறுதிப்படுத்துதல்

கடந்த 1987 ஆம் ஆண்டு மே மாதம் எமது பகுதியில் இடம்பெற்ற பாரிய படை நடவடிக்கையின் (லிபரேஷன் ஒப்பரேசன்) போது மந்திகையில் அமைந்திருந்த எமது சங்கத்தின் தலைமை அலுவலகம் உட்பட அதனுள் இருந்த சொத்துக்கள், ஆவணங்கள் என்பனவும் முற்றாக அழிக்கப்பட்டமை யாவரும் அறிந்ததே.

இந்நிலையில் 31.10.1986 இல் இருந்து 25.05.1987 வரையான காலப்பகுதி வரை சங்கத்துடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டவர்கள் தமக்குரிய வருமதி சென்மதிகளை 22.04.1988 இற்கு முன்னதாக 'உரிய ஆதாரங்களைச் சமர்ப்பித்து சீராக்கம் செய்து கொள்ளுமாறு பத்திரிகை மூலமாகவும் துண்டுப்பிரசுரத்தின் மூலமாகவும் சங்கத்தால் அங்கத்தவர்களுக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்தன.இந்நிலையிலும் வருமதி செல்மதிகள் சீராக்கம் செய்யப்படாமலுள்ளமை தொடர்பாக ஆராய்ந்த சங்கத்தின் பணிப்பாளர் சபையினரும் பொதுச்சபையினரும் மேற்குறித்த காலப்பகுதிக்கான வருமதி சென்மதிகளை சீராக்கம் செய்து கொள்வதற்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தினை வழங்க வேண்டுமென முடிவு செய்துள்ளனர்.

எனவே சங்கத்தின் பொதுச்சபையினரதும் பணிப்பாளர் சபையினரதும் தீர்மானத் திற்கிணங்க 31.10.1986 இல் இருந்து 25.05.1987 வரையான காலப்பகுதி வரை சங்கத்துடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்ட அங்கத்தவர்கள் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக தகுந்த ஆதாரங்கள் இருப்பின் அவற்றை எதிர்வரும் 15.09.2012இற்கு முன்னதாக சங்கத்தின் தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பித்து வருமதி சென்மதிகளை சீராக்கம் செய்து உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதுடன் மேற்குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப் படமாட்டாது என்பதனையும் அறியத்தருகின்றோம்.

தலைவர் பொதுமுகாமையாளர்

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

(சி-887)

# பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கம் (வ.து)

## இரும்புப் பொருட்களை விற்பனை செய்தல்

எமது சங்கத்திடம் இரும்புப் பொருட்கள் விற்பனை செய்யப் படவுள்ளன.

எதிர்வரும் 15.09.2012 அன்று மு.ப 10.00 மணிக்கு சங்கத்தின் தலைமை அலுவலக வளவில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப் படவுள்ளது. கூடுதலான கேள்வி கோருவோருக்கு பொருட்கள் வழங்கப்படும். கேள்வியில் வெற்றி பெறுவோர் பொருட்களுக்குரிய பெறுமதியினைச் செலுத்தி அன்றைய தினமே பொருட்களை அப்புறப்படுத்துதல் வேண்டும்.

மேற்குறித்த பொருட்களைப் பார்வையிட விரும்புவோர் சங்கத்தின் அலுவலக நேரத்தில் பார்வையிட முடியும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

தலைவர் பொதுமுகாமையாளர்

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

(சி-887)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண அபிவிருத்திக்கு பல்வேறு நிதி ஒதுக்கீடுகள்

வடமாகாண, மாகாண திட்டமிடல் கூட்டம் வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதில் மாகாணத்துக்கென ஒதுக்கப்பட்ட பிரமாண அடிப்படையிலான நன்கொடைகள் குறித்தொதுக்கப்பட்ட மாகாண விசேட அபிவிருத்தி நன்கொடை, பிராந்திய அபிவிருத்தித் திட்ட நிதியம், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள நிதி வழங்கும் நிறுவனங்களின் நிதி ஒதுக்கீடு ஆகியவை தொடர்பான மீளாய்வுகள் இடம்பெற்றன.

இதன்படி வடமாகாணத்துக்கென பிரமாண அடிப்படையிலான நன்கொடையாக 267.54 மில்லியன் ரூபாவும் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடையின் கீழ் ஆயிரத்து 184.82 மில்லியன் ரூபாவும் நிதி வழங்கும் நிறுவனங்களின் உதவியுடனான நிதியிலிருந்து மாகாணத்துக்கென இரண்டாயிரத்து 62.06 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இம்மீளாய்வின் அடிப்படையில் இவ்வருடம் பிராந்திய அபிவிருத்தி சமநிலையினை உருவாக்கும் நோக்குடன் குறித்தொதுக்கப்பட்ட மாகாண விசேட அபிவிருத்தி நன்கொடையின் கீழ் விவசாயத்துறைக்கு 60.06 மில்லியன் ரூபாவும் கால்நடை அபிவிருத்திக்கு 30.94 மில்லியன் ரூபாவும் நன்னீர் மீன்பிடிக்கு 15.47 மில்லியன் ரூபாவும் நீர்ப்பாசனத்துறைக்கு 30.03 மில்லியன் ரூபாவும் கல்வித்துறைக்கு 227.5 மில்லியன் ரூபாவும் விளையாட்டுத்துறைக்கு 15.47 மில்லியன் ரூபாவும் கலாசாரத்துறைக்கு 4.55 மில்லியன் ரூபாவும் சுகாதாரத்துறைக்கு 227.5 மில்லியன் ரூபாவும் சுதேச வைத்தியத்துறைக்கு 30.03 மில்லியன் ரூபாவும் மாகாண வீதிகளுக்கு 118.03 மில்லியன் ரூபாவும் கிராமிய வீதிகளுக்கு 50.05 மில்லியன் ரூபாவும் போக்குவரத்துத் துறைக்கு 15.47 மில்லியன் ரூபாவும் சுற்றுலாத்துறைக்கு 30.03 மில்லியன் ரூபாவும் கிராமிய உட்கட்டுமான அபிவிருத்திக்கு 30.94 மில்லியன் ரூபாவும் திண்மக்கழிவு முகாமைத்துவத்துக்கு 40.95 மில்லியன் ரூபாவும் கிராமிய மின்சாரத்துக்கு 5.46 மில்லியன் ரூபாவும் சிறுகைத்தொழில்துறை அபிவிருத்திக்கு 10.92 மில்லியன் ரூபாவும் சமூகசேவைகள் அபிவிருத்திக்கு 18.2 மில்லியன் ரூபாவும் சிறுவர் நன்நடத்தைக்கு 18.2 மில்லியன் ரூபாவும் பிராந்திய நெகிழ்வான அபிவிருத்தி முன்னெடுப்புக்களுக்கு 204. 75 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர். விஜயலக்சுமி தெரிவித்துள்ளார்.

இதில் சகல மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதி பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்ட மட்ட உத்தியோகத்தர்கள், கருத்திட்டப் பணிப்பாளர்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-9)

## தேயிலை தூளுடன் இருவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் தேயிலை தூள் ஏற்றிச் சென்ற இருவர் பேராதனை முருதலாவ சந்தியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. கண்டி மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

6 ஆயிரம் கிலோ கிராம் தேயிலை மற்றும் அதனை ஏற்றிச் செல்ல பயன்படுத்தப்பட்ட லொறி என்பவற்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் கண்டி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2-9)

## கடன் பெறும் பயனாளிகளுக்கான பயிற்சி வகுப்பு நிறைவு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஓர் அங்கமான தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவுச் சங்கம் யாழ்ப்பாண மாவட்டத்தில் வகிக்கின்ற இளைஞர், யுவதிகளுக்கு அரச வங்கிகளூடாக சுய தொழில் கடன் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது.

இக்கடன் பெறும் பயனாளிகளுக்கான பயிற்சி வகுப்புக்கள் கடந்த ஓகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகிறது.

இப்பயிற்சி வகுப்பின் நிறைவு நாள் நிகழ்வுகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோண்டாவில் வேதபாராயண சனசமூகநிலையத்தில் நிஸ்கோ பொது முகாமையாளர் ப.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடமாகாணப் பணிப்பாளர் திருமதி விமலேஸ்வரி ஸ்ரீஸ்கந்தன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா, வேதபாராயண சனசமூக நிலைய பொருளாளர் இ.சச்சிதானந்தம், கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுனில் பிறேமச்சந்திர, வவுனியா தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிக் கணக்காளர் எஸ். இரத்தின குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திருமதி வினோதினி ஸ்ரீமேனன் கலந்து கொள்வார்.

தொடர்ந்து இந்நிகழ்வில் வங்கி முகாமையாளர்களினால் பயனாளிகளுக்கான கடன் சம்பந்தமான விரிவுரைகள் நடைபெறும். (அ-9)

## பேருந்து பள்ளத்தில் வீழ்ந்ததில் 31 பேர் பரிதாபமாக உயிரிழப்பு

(பீஜிங்)

சீனாவின் மத்திய பகுதியில் பயணிகளுடன் வந்துகொண்டிருந்த பேருந்து ஒன்று சான்மெக்சியா நகரின் தேசிய நெடுஞ்சாலையில் வந்தபோது அதிக வேகத்தால் நிலை தடுமாறி கட்டுப்பாட்டை இழந்த பேருந்து அங்கிருந்த பள்ளத்தில் கவிழ்ந்துள்ளது.

இந்த விபத்தில் பேருந்தில் பயணம் செய்த 31 பேர் பலியாகியுள்ளனர். விபத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் நடைபெறுகின்றன. இதில் பலியானோரின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகின்றது.

சீனாவில் இந்த வாரத்தில் நிகழ்ந்துள்ள இரண்டாவது பெரிய விபத்து இதுவாகும். (அ-2)

## வளர்ந்து வரும் நாடுகளின் குரல் ஓங்கி ஒலிக்க வேண்டும்- மன்மோகன்

வளர்ந்து வரும் நாடுகளின் குரல் உலகளவில் ஓங்கி ஒலிக்க வேண்டும் என்று அணிசேரா நாடுகளின் மாநாட்டில் உரையாடிய இந்திய பிரதமர் மன்மோகன்சிங் வலியுறுத்தியுள்ளார். ஈரான் தலைநகர் டெஹ்ரானில் நேற்று முன்தினம் ஆரம்பமான அணிசேரா நாடுகளின் 16 ஆவது உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மன்மோகன்சிங் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றியதாவது,

அணிசேரா நாடுகளின் தலைமைப் பொறுப்பை ஏற்க இருக்கும் ஈரானுக்கு இந்தியா முழு ஒத்துழைப்பு வழங்கும்.

மாறிவரும் உலகச் சூழலில் அணிசேரா நாடுகள் அமைப்பின் தேவை அவசியமானதாக இருக்கிறது. மேற்கு ஆசியா மற்றும் வடக்கு ஆபிரிக்க நாடுகளில் வரவேற்கத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இதனை உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியா ஆதரிக்கிறது. இப்படியான மாற்றங்களில் அந்நிய சக்திகளின் தலையீடு இருக்கக் கூடாது.

சர்வதேச பயங்கரவாதம், பொருளாதாரத்தில் நிலையற்ற வளர்ச்சி, வளர்ந்து வரும் இணையத்தள அச்சுறுத்தல், எரிசக்தி, தண்ணீர் மற்றும் உணவுப் பற்றாக்குறை போன்றவற்றை அணிசேரா நாடுகளின் கூட்டமைப்பு ஒன்றிணைந்து முறியடிக்க வேண்டும்.

வளர்ந்து வரும் நாடுகளுக்கு உள்ள நிதி மற்றும் முதலீட்டு பிரச்சினைகள் குறித்து வளர்ந்து வரும் நாடுகளின் குரல் உலக அளவில் நமது குரல் ஓங்கி ஒலித்தால் தான் சுமுகமான தீர்வு காணப்படும் என்றார். (அ-2)

## இரு உலங்கு வானூர்திகள் நேருக்குநேர் மோதின

### 9 விமானப்படை வீரர்கள் பலி

குஜராத்தில் 2 விமானப்படை உலங்கு வானூர்திகள் நடுவானில் மோதிக் கொண்டன. அதில் தமிழக வீரர் உட்பட 9 விமானப் படை வீரர்கள் பலியானார்கள்.

விமான தளத்தில் இந்திய விமானப்படைக்கு சொந்தமான மி-17 ரகத்தைச் சேர்ந்த 2 உலங்கு வானூர்திகள் நேற்று முன்தினம் பகல் 12 மணிக்கு வழக்கமான பயிற்சிக்கு புறப்பட்டன. அவை ரஷ்யாவில் வடிவமைக்கப்பட்டவை. அவற்றில் 9 விமானப்படை அதிகாரிகளும் வீரர்களும் பயணம் செய்தனர். 33 விங்கொமாண்டர்கள் ஒரு ஸ்குவாட்ரன் லீடர் ஒரு விமான லெப்டினன்ட் என 5 பேர் அதிகாரி அந்தஸ்தில் உள்ளவர்கள்.

அவர்கள் பயணம் செய்த இரு உலங்குவானூர்திகள் மேலே எழும்பி நடுவானில் ஒன்றையொன்று உரசுவது போல பறந்து சென்றன.

எதிர்பாராதவிதமாக உலங்குவானூர்திகளின் மேலே உள்ள காற்றாடிகள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டது. இதையடுத்து ஒரு ஹெலிகொப்டர் கீழே விழுந்து நொறுங்கியது. (அ-2)


உயர்தர பரீட்சைகளின் பின்
"நல்லதோர் ஆரம்பம்"
உங்கள் கல்விக்கான சேமிப்பு
சிஎஸ்சி-ஏசியனுடன் தொடங்கட்டும்




You can Win Upto 75%
Quality & Affordability
M•E•G•A

கொம்ப்யூட்டர் புலமைப்பரிசில்
- பரீட்சை அனுமதி முற்றிலும் இலவசம்.
- பரீட்சையை தமிழ், or ஆங்கிலத்தில் எழுதலாம்.
- 14 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் பங்குபற்றலாம்.
- 25 பொது அறிவு வினாக்கள் ,சரியான விடையை தேர்ந்தெடுக்கும் முறையில்(MCQ) கேட்கப்படும்.
- பரீட்சை 30 நிமிடங்கள் மட்டுமே.
- இலவச பாடநூல்கள் (இந்தியா & இலங்கை).
- தவணைமுறை கட்டண வசதி.
- சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள்.

(சி/895)

Computer Education
Multimedia Training
English Language Training
Degree Access Programme
Vocational Soft Skills Training

ஸ்கொலர்ஷிப் மூலம் சேர்ந்து படிப்பது, படிப்பிற்கான உங்கள் செலவைக் குறைப்பதாகும்.
இலவச பரீட்சை அனுமதிகளை எமது பயிற்சி மையங்களில் பெற்றுக்கொள்ளலாம்

ASIAN COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
| --- | --- | --- | --- |
| 2G ஸ்ரான்லி வீதி, | கொடிகாமம் வீதி, | கட்டுக்காணி வீதி, | A9 வீதி, ஆனந்தபுரம், |
| 021-2225677 | 021-2262399 | 021-2270267 | 021-2283925 |

உங்கள் கடமையை எப்போதும் செய்யத் துணிந்திடுங்கள். இதுவே உண்மையான வீரத்தின் உச்ச நிலை. - சிம்மன்ஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# நான் சொன்னதை பிரபா கேட்டிருந்தால் இன்று முதலமைச்சராக இருந்திருப்பார்

## கருணா கூறுகிறார்

(மட்டக்களப்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின ரால் ஒருபோதும் கிழக்கு மாகாண சபையினை கைப்பற்றி ஆட்சியமைக்க முடியாது என மீள்குடியேற்ற பிரதி மைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பிள்ளையாரடி பிரதேசத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிடும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அமைச்சர்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பிச்சைக்காரனின் உடம்பில் உள்ள புண்போன்றவர்கள். அதனை பெருப்பித்து பெருப்பித்து பிச்சைக்காரன் பிச்சையெடுப்பது போல தமிழ் தேசிய கூட்டமைப்பினரும் இங்கு அரசியல் செய்து கொண்டுள்ளனர்.

நாங்கள் காட்டில் ஆயுதம் தூக்கிப் போராடியபோது இவர்கள் எங்கிருந்தார்கள். பல்வேறு நாடுகளில் சுக போகங்களை அனுபவித்து விட்டு இங்கு வந்து மக்களை குழப்பிக் கொண்டிருக்கின்றனர்.

நான் தமிழ் மக்களுக்காக போராடச் சென்றவன். எனக்கு அவர்களுக்கு இருக்கும் உணர்வைவிட அதிகமாக இருக்கும். நான் இந்த நாட்டைவிட்டுச் சென்று சொகுசாக வாழ்ந்திருக்க முடியும். ஆனால் நான் அவ்வாறு வாழ விரும்பவில்லை.

எமது இனம் தொடர்ந்து அழிவுகளை சந்தித்துக் கொண்டிருக்க முடியாது என்பதற்காகவே நான் போராட்ட முறையில் இருந்து அரசியல் முறைக்குள் பிரவேசித்தேன்.

அன்று விடுதலைப் புலிகளின் தலைவரிடமும் இந்தப் போராட்டத்தை வெல்ல முடியாது. இருந்து நடைபெறும் பேச்சுவார்த்தையினைக் கொண்டு பெறக்கூடிய அதிகாரத்தைப் பெற்று நாங்கள் அரசியல் ரீதியாக உரிமையை பெற முயற்சிப்போம் என்று கூறினேன்.

ஆனால் அவர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. இன்று என்ன நடந்துள்ளது. அவர் அன்று அதனை ஏற்றுக் கொண்டிருந்தால் இன்று முதலமைச்சர் நிலையில் அவர் இருந்திருப்பார் என்றார். (அ-2)

# யாழ்.அரச அதிபரை நோக்கிய 'அரோகரா' கோசம்

உரு ஏறி ஆறுதல் என்பது எல்லா சமயங்களிலும் இருக்கக் கூடிய பக்திப்பரவச நிலை. இறை உணர்வின் உச்சமாக மெய்மறத்தலின் விளைவு தான் இது எனலாம்.

ஆடுதல், பாடுதல் என்ற பக்திப்பரவச நிலையில்தான் தெய்வீகத்தின் உணர்வு வெளிப்படுகின்றது.

இந்து சமயத்தில் தவில், நாதஸ்வர இசை முதல் மந்திர உச்சாடனங்கள், திருமுறை பாராயணங்கள், தீபாராதனைகள் என அத்தனையும் மனத்தை ஒரு வழிப்படுத்தி இறைவன்பால் ஒன்றிணைத்தலின் பொருட்டான ஏற்பாடுகளாகும்.

இதில் உரு ஏறி ஆடுதலில் 'அரோகரா' என்ற கோசத்தின் வகிபங்கு காத்திரமானது.

'அரோகரா' என்ற 'ஒலி' அண்டசராசரம் அனைத்திலும் ஒலிப்பது என்பது இந்துக்களின் நம்பிக்கை. அதனால்தான் ஆலயங்களில் அரோகரா ஒலி அனைவராலும் ஒரே நேரத்தில் எழுப்பப்படுகின்றது.

இந்துக்கள் 'அரோகரா' என்று ஒலிப்பது போல பிற சமயங்களிலும் ஒலி எழுப்பி இறை வழிபாடு செய்கின்ற நடைமுறைகள் உண்டு. எதுவாயினும் அரோகரா என்ற ஓங்கார வரி வடிவை அனைவரும் எழுப்பும் போதுதான் உரு உச்ச மடைகின்றது. .

இவ்வாறு அனைவரும் சேர்ந்து 'அரோகரா' என்று ஒலி எழுப்பி பக்தி பரவசத்திற்கான சூழமைவை ஏற்படுத்துவது போல அரசியலிலும், பொது நிர்வாகக் கருமங்களிலும் பொதுமக்கள் அனைவரும் சேர்ந்து ஒலி எழுப்புவதன் மூலம் அடங்கிக் கிடக்கின்ற நிர்வாகங்களை தட்டி யெழுப்ப முடியும்.

இதனை செய்யாத போது எல்லாமுமே மந்தமாகி போவது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது. அந்த வகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் பல அரச நிர்வாகங்கள் அடங்கிப் போய் செயல்திறன் அற்றவையாக இருப்பதை காண முடிகின்றது.

இவை ஏன்தான். இயங்குகின்றன என்று தெரியாத அளவில் அந்த நிறுவனங்கள் இருப்பதைப் பார்க்கும் போது வேதனை தாளமுடியவில்லை.

இது தவிர வீதி புனரமைப்பு, மின்சார இணைப்பு வழங்குதல் என்பன தொடர்பில் காட்டப்படும் மந்த நிலை யாழ்ப்பாணத்தில் அரச அதிகாரிகள் இல்லையோ என்று நினைக்கும் அளவிற்கு நிலைமையை ஏற்படுத்துகின்றது.

குறிப்பாக மண்டைதீவு வீதி புனரமைப்பின் நிலையை நினைத்தால், எங்கள் அதிகாரிகளின் செயத்திறன் தெரியவரும்.

எது எப்படியோ, எங்கள் யாழ்ப்பாண அரச அதிபர் மண்டைதீவுக்கு ஒரு தடவை சென்று அந்த ஊரின் வீதி புனரமைப்பு எப்படி இருக்கிறது என்பதை பார்க்க வேண்டும். அதுமட்டுமன்றி சில அரச நிறுவனங்களுக்கும் விஜயம் செய்ய வேண்டும்.

அப்போது தான் யாழ்ப்பாணத்தில் என்ன நடக்கிறது என்பதை புரிய முடியும். இந்த கோரிக்கைக்கான 'அரோகரா' கோசம் யாழ்.அரச அதிபரை நோக்கி ஒலிக்கிறது.

## பாடசாலைகள் ஆரம்பமாகும்

(கொழும்பு)

புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் இடம்பெறும் பாடசாலைகள் எதிர்வரும் 10ஆம் திகதி பாடசாலை நடவடிக்கைகளுக்காக திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகளுக்காக நாடளாவிய ரீதியில் 22 பாடசாலைகள் இயங்க வுள்ளன.

இவை தவிர்ந்த ஏனைய அனைத்து அரச பாடசாலைகளும் 3ஆம் தவணைக்காக 3ஆம் திகதி திறக் கப்படவுள்ளன. (அ-9)

# நிலக்கரிச் சுரங்கத்தில் விபத்து; 19 தொழிலாளர்கள் உயிரிழப்பு

சீனாவில் அமைந்துள்ள சுரங்கங்களில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்நிலையில் சிஷுயன் மாகாணத்திலுள்ள நிலக்கரிச் சுரங்கத்தில் நேற்றுமுன்தினம் திடீரென்று வெடிவிபத்து ஏற்பட்டது. தகவல் கிடைத்ததும் நிவாரணக்குழுவினர் விரைந்து சென்று 107 தொழிலாளர்களை உயிருடன் மீட்டார்கள்.

இருப்பினும் இந்த வெடிவிபத்தில் 19 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். சுரங்கத்தில் சிக்கிய மேலும் 28பேரின் கதி என்ன? என்று தெரியவில்லை.

அங்கு மீட்புப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சீனாவில் சுரங்கங்களில் நிகழும் விபத்துக்களில் ஆண்டு தோறும்சுமார்2ஆயிரம்பேர்வரைஉயிரிழக்கின்றனர். கடந்த ஆண்டில் ஆயிரத்து 973 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## கப்பல் சேவை மீண்டும் ஆரம்பம்!

இந்திய-இலங்கை கப்பல் சேவை விரைவில் மீண்டும் ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தகவலை ஓமான் ரிபியூன் என்ற இணையத்தளம் வெளியிட்டுள்ளது. தூத்துக்குடி - கொழும்புக்கிடையிலான இந்தக் கப்பல் சேவை கடந்த வருடம் ஆரம் பிக்கப்பட்டு பின்னர் இடைநிறுத்தப்பட்டது.

இந்த நிலையில் மீண்டும் அந்த சேவையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக இந்தியகப்பல் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இதேவேளை தூத்துக்குடி - கொழும்பு கப்பல் சேவையைத் தவிர, ராமேஸ்வரம் -தலைமன்னார் கப்பல் சேவை குறித்த உடன்படிக்கையை இந்திய இலங்கை நாடுகளுக்கிடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-8)

# அரசியல் கைதிகள் மரணம் குறித்து கண்டன தீர்மானம் நிறைவேற்றம்

## கரைச்சி பிரதேசசபை அறிவிப்பு

அரசியல் கைதிகளான நிமலரூபன், மரியதாஸ் டெல்றொக்சன் ஆகியோரின் கொலை தொடர்பான கண்டனத் தீர்மானம் கிளி.கரைச்சிப் பிரதேச சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த 17 ஆம் திகதி நடைபெற்ற சபை அமர்விலேயே மேற்படி கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இச்சபையமர்வில் உறுப்பினர் மாரியப்பன் சுகந்தன், அரசியல் கைதிகளான நிமலரூபன், மரியதாஸ் டெல்றொக்சன் ஆகியோரின் கொலை தொடர்பாக கண்டனத்தினை தெரிவித்ததோடு இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெற்றால் கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர்கள் வீதியில் இறங்கி அகிம்சை வழிப்போராட்டத்தை தொடர்வார்கள் எனவும் தெரிவித்தார்.

இதனை சபையின் அனைத்து உறுப்பினர்களும் ஏற்றுக்கொண்டு கண்டனத்தினை வெளியிட்டதோடு 7ஆவது தீர்மானமும் தீர்மானிக்கப்பட்டது.

இத்தீர்மானத்தினை பிரதேச சபை உறுப்பினர் மா.சுகந்தன் முன்மொழிய, துணைத்தவிசாளர் வ.நகுலேஸ்வரன் வழிமொழிந்ததோடு சபை கலைந்ததாக கரைச்சிப்பிரதேசசபைத் தவிசாளர் வைத்திலிங்கம் குகராசா அறிவித்துள்ளார். (அ-9)

## ஜப்பான் குழு இலங்கை வருகை

இலங்கையில் ஏற்படுகின்ற சிறியளவிலான நில அதிர்வுகள் குறித்து ஆராய்வதற்காக ஜப்பானிலிருந்து விசேட குழு ஒன்று இலங்கை வரவுள்ளது.

எதிர்வரும் வாரமளவில் இந்தக்குழு இலங்கை வரும் என்று தெரிவிக்கப்பட்டு கிறது.

இந்தக்குழு இலங்கையில்நில அதிர்வுகள் பதிவான பகுதிகளுக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்படுகிறது.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## உலகத்தை காலடியில் வைக்க



பிறருடைய தவறைக்காண முயற்சிக்காமல் உங்களுடைய தவறை திருத்திக்கொள்ளுங்கள்.

பொறாமை, ஆணவம் ஆகியவற்றைத் தூக்கி எறிந்துவிட்டு உன் முழுவலிமையுடனும் அளவற்ற ஆர்வத்துடனும் தொழிற்களத்தில் இறங்கினால் இறைவன் நல்வழி காட்டுவான்.

தெளிந்த உண்மையும் கருத்துத்தூய்மையும் மனிதனுக்கு உறுதியான வெற்றியைத் தரும்.

ஒவ்வொரு உயிரிலும் தெய்வத்தன்மை இருக்கிறது. உள்ளேயும் வெளியேயும் இருக்கும் உணர்வுகளைக் கட்டுப்படுத்தி உள்ளத்தில் குடிகொண்டுள்ள தெய்வத்தன்மையை மலரச் செய்வதுதான் ஒருவருக்கு இலட்சியமாக இருக்கவேண்டும்.


அனைத்தையும் பொறுப்பவளாக இருக்கும் பூமிதேவியைப் போன்று நீங்களும் பொறுமையுடன் இருந்தால் உலகமே உங்கள் காலடியில் அமரும்.

நம்பிக்கை உன்னிடம் நம்பிக்கை. கடவுளிடத்தில் நம்பிக்கை. இதுவே வெற்றிபெறுவதன் இரகசியம்.

துன்பப்படுபவர்களுக்கு உதவி செய்வதன்மூலம் தெய்வீக இயல்பு நம்மிடம் வெளிப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






வடமாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட க.பொ.த (உ/த) மாணவர்களுக்கான தலைமைத்துவப்பயிற்சி கடந்த புதன்கிழமை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆரம்பமாகியது. இப் பயிற்சியின் ஒரு கட்டமாக உடற்பயிற்சிகள் கல்வியற்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

இதில் வளவாளர்கள் பயிற்சிகளை வழங்குவதையும் பயிற்சியில் ஈடுபட்டுள்ள மாணவர்களையும் படங்களில் காணலாம்.

## இலங்கை பொது நிர்வாக அமைச்சின் வெற்றிக் கிண்ண கிரிக்கெட் போட்டி



(வேலணை)

இலங்கை பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சின் செயலாளிளரின் வெற்றிக் கிண்ணத்திற்கான கிரிக்கெட் போட்டி கடந்தவெள்ளிக்கிழமை நுவரெலியாவில் ஆரம்பமாகியது.

மாவட்ட மட்டத்தில் உள்ள பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், கணக்காளர்கள், உதவி திட்டமிடல் அலுவலர்களைக்கொண்ட அணிகள் இப்போட்டியில் கலந்துகொண்டுள்ளன.

கலப்பு அணிகளின் ஆட்டமாக நடைபெறவுள்ள இப்போட்டியில் குறைந்தது 4 பெண்களாவது இடம்பெறவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் யாழ். மாவட்ட அணியும் கலந்துகொண்டுள்ளது. இவ்வணியில், காரைநகர் பிரதேச செயலாளர், ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் சாவகச்சேரி பிரதேச செயலாளர், கோப்பாய் கணக்காளர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

## விண்ணப்பம் கோரல்

(வேலணை)

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியில் மாபெரும் கிரிக்கெட் தொடர் நடாத்தவுள்ளது. இதற்காக அனைத்து கழகங்களையும் அடுத்த மாதம் 5ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் தமது பதிவுகளை மேற் கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது. பதிவுகளை மேற்கொள்வதற்கு 0772846736, 0773450657 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## காலிறுதியாட்டங்கள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆதரவில் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பருத்தித்துறை லீக்கிற்கு உட்பட்ட கழகங்கள் மோதவுள்ளன.

இதில் கற்கோவளம் உதயதாரகை விளை யாட்டுக்கழக மைதானத்தில் இன்றை யதினம் நடைபெறும் ஆட்டத்தில் டயமன்ஸ் அணியை எதிர்த்து நியூட்டன் அணி மோத வுள்ளது. இதில் வெற்றிபெறும் அணி காலி றுதிப் போட் டிக்கு தெரிவாகவுள்ளமை குறிப் பிடத்தக்கது.

இதேவேளை அன்றையதினம் நடைபெறும் காலிறுதிப்போட்டியில் சிவானந்தா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து றேஞ்சர்ஸ் அணி மோதவுள்ளது. (3)

## விளையாட்டுச் செய்திகள்....

## யாழ் மாவட்ட கிரிக்கெட் அணி தெரிவு

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கம் 2012 ஆம் ஆண்டுக்கான மாவட்ட கிரிக்கெட் அணியை தெரிவு செய்யவுள்ளது.

மேற்படி தெரிவுக்கான பயிற்சிகள் செப்டெம்பர் மாத நடுப்பகுதியில் இடம்பெறவுள்ளன.

மேற்படி பயிற்சிகளில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக்கழகங்கள் தங்களது கழகங்களில் இருந்தும் 5 சிறந்த வீரர்களை அனுப்பி வைக்குமாறு யாழ்.மாவட்ட கிரிக் கெட் சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## றேஞ்சர்ஸ், பொம்மேர்ஸ் அணிகள் வெற்றி

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ்தொழிற்சாலை ஆதரவில் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டியில் பருத்தித்துறை லீக்கிற்கு உட்பட்ட கழகங்கள் மோதின.

இப்போட்டிகள் யாவும் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற போட்டியில் அல்வாய் நண்பர்கள் அணியை எதிர்த்து றேஞ்சர்ஸ் அணி மோதியது. இதில் 4:2 என்ற கோல்கணக்கில் றேஞ்சர்ஸ் அணி வெற்றிபெற்றது.

அடுத்தபோட்டியில் வல்வை அணியை எதிர்த்து பொமேர்ஸ் அணி மோதியது. இதில் 2:1 என்ற கோல்கணக்கில் பொமேர்ஸ் அணி வெற்றி பெற்றது. (3)

## வதிரி டயமன்ஸ் அணி வெற்றி

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 85 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் 11பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற காலிறுதியாட்டம் ஒன்றில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றி அரையிறுதி ஆட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளது.

காலிறுதியாட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கு எதிரான அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.




## போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் சேவாலங்கா மன்றத்தின் அனுசரணையுடன் மன்னார் பெரிய பண்டி விரிச்சான் *முத்துக்கள் 3* புகழ் வள்ளுவர் விளையாட்டுக்கழகம், மன்னார் மாவட்ட லீக்கின் நெறிப்படுத்தலுடன் நடத்தும் வட மாகாண ரீதியிலான உதை பந்தாட்ட, வலைப் பந் தாட்டச் சுற்றுப்போட்டி எதிர் வரும் செப்டெம்பர் மாதம் 14ஆம், 15 ஆம், 16ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இதில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முன் னர் தங்களது அணி தொடர்பான விபரங் களை மன்னார் பெரிய பண்டிவிரிச்சான் [illegible] வள்ளுவர் வி[illegible] ஒப்படைக்குமாறு வேண்டப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா - நியூசிலாந்து இரண்டாவது டெஸ்ட்

# நியூசிலாந்து முதல் இன்னிங்ஸ் சிறந்த ஆரம்பம்



இந்தியாவிற்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணிக்கும், நியூசிலாந்து அணிக்கும் இடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்ட நேர முடிவில் நியூசிலாந்து அணி சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியுள்ளது.

பெங்களூர் எம்.சின்னச்சுவாமி மைதானத்தில் இடம்பெற்றுவரும் இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

முதற்போட்டியில் பங்குபற்றிய அதே இந்திய அணியே இந்தப்போட்டி யிலும் பங்குபற்ற, நியூசிலாந்து அணியில் கிறிஸ் மார்ட்டினுக்கு பதிலாக ரிம் சௌதி சேர்க்கப்பட்டார்.

இதன்படி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய நியூசிலாந்து அணி போதிய வெளிச்சமின்மை காரணமாக முதல்நாள் ஆட்டம் இடைநிறுத்தப்படும் வரை 6 விக்கெட்டுக்களை இழந்து 328 ஓட்டங்களைப் பெற்றது.

தனது முதலாவது விக்கெட்டாக் அனுபவ வீரர் பிரெண்டன் மக்கலத்தை இழந்த அவ்வணி, அதன் பின்னர் 2-வது விக்கெட்டுக்காக 63 ஓட்டங்களைப் பகிர்ந்தது.

கேன் வில்லியம்ஸனின் ஆட்டமிழப்பின் பின்னர் மார்ட்டின் கப்ரிலும் ஆட்டமிழக்க அவ்வணி 3 விக்கெட்டுக்களை இழந்து 89 ஓட்டங்களைப் பெற்று தடுமாறிய போதிலும், அணித்தலைவர் ரோஸ் ரெய்லரின் அதிரடிச் சதம் காரணமாக நியூசிலாந்து அணி போராட்டத்தை வெளிப்படுத்தியது.

துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து அணி சார்பாக ரோஸ் ரெய்லர் 127 பந்துகளில் 113 ஓட்டங்களையும், விக்கெட் காப்பாளர் வான் வீக் ஆட்டமிழக்காமல் 63 ஓட்டங்களையும், மார்ட்டின் கப்ரில் 53 ஓட்டங்களையும், டக் பிரஸ்வெல் ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக பிரக்ஜான் ஓஜா 4 விக்கெட்டுக்களையும், சகீர்கான், ரவிச்சந்திரன் அஸ்வின் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.



முதலாவது போட்டியில் வெற்றி பெற்று இந்திய அணி 1:0 என்ற கணக்கில் தொடரில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# டென்னிஸ் வீரர் ஆண்டி ரோடிக் ஓய்வு

அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியில் விளையாடி வரும் பிரபல டென்னிஸ் வீரரான அன்டி ரோடிக் திடீரென்று தனது ஓய்வை அறிவித்துள்ளார்.

விளையாட்டு பிரபல்யங்கள், நான் அடுத்த மாதம் ஓய்வு பெறப் போகின்றேன் என்று பேட்டியளிப்பது உண்டு.


ஆனால் அதற்கு எல்லாம் முற்றிலும் மாறுபட்ட விதமாக டென்னிஸ் வீரர் அன்டி ரோடிக், அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியின் போது தடாலடியாக ஊடகத்தினர் சந்திப்பு ஏற்பாடு செய்தார்.

ஓய்வு குறித்து அவர் கூறுகையில், எனது அழைப்பை ஏற்று வந்ததற்கு நன்றி, எனது அறிவிப்பை சுருக்கமாக இனிமையாகவும் வெளியிட விரும்புகிறேன். இந்த அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியே நான் விளையாடும் இறுதி ஆட்டமாக இருக்கும் என நான் முடிபெடுத்துள்ளேன் என்றும் இந்த அறிவிப்புக்கு இதுவே உகந்த நேரம் என்று கருதுகிறேன் எனவும் கூறியுள்ளார்.

அன்டிரோடிக்கின் இந்த அறிவிப்பு டென்னிஸ் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஓய்வு முடிவுக்கான காரணத்தை அவர் அறிவிக்கவில்லை.

அமெரிக்க வீரரான இவர் 2003ல் அமெரிக்க ஓபன் டென்னிஸ் சம்பியன் பட்டம் பெற்றவர். 2004 (விம்பிள்டன்), 2005, 2006, 2009 (அமெரிக்க ஓபன்) ஆகிய ஆண்டுகளில் கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் இறுதிப் போட்டி வரை வந்துள்ளார்.

மேலும், பிரபல ஹாலிவுட் நடிகையும், மாடல் அழகியுமான புரூக்ளின் டெக்கரை திருமணம் செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



## சர்வதேசத்...

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி,

உலகில் முன்னெடுக்கப்படும் அனைத்து விதமான பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளுக்கும் இலங்கை அரசாங்கம் தனது ஆதரவை எப்போதும் வழங்கும்.

உலகில் அனைத்து நாடுகளும் பயங்கரவாத அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளன. அந்த அச்சுறுத்தலை முறியடிக்க ஏனைய சர்வதேச நாடுகள் முன்வர வேண்டும்.

ஆனால் அவர்களின் இறைமையைப் பாதிக்கும் வகையில் உள்நாடு விவகாரங்களில் தலையிடக்கூடாது என்றார்.

அத்துடன் ஐ.நா சபையின் கொள்கை, அணி சேரா நாடுகளின் கொள்கை ஆகியவற்றில் கூறப்பட்டுள்ளவாறு ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் ஏனைய நாடுகளின் தலையீடு தவிர்க்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், இலங்கை மூன்று ஆண்டுகளுக்கு முன்பு மிகப் பெரிய பயங்கரவாத சவாலை எதிர்கொண்டது.

ஆனாலும் அந்த சவாலை இலங்கை அரசு முறியடித்து பயங்கரவாதமற்ற அதிர்ஷ்டசாலி நாடாக பிரகடனப்படுத்தப்பட்டு விட்டது என தமது மகிழ்ச்சியையும் அவர் வெளியிட்டார். (ந-8)

## பாதுகாப்பு வலயங்கள் மீது...

தொலைத்தொடர்பு ஆவணம் ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தப் பிரதேசங்களில் இருந்த மக்களுக்காக அமெரிக்கத் தூதரகம் ஒருதொகுதி மருந்துப் பொருட்களை வழங்கியிருந்தது.

இவை அனைத்தும் வன்னி மக்களை சென்றடைந்ததாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அந்த நாட்களில் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவிற்கான உதவிச் செயலாளராக இருந்த பௌச்சரிடம் தெரிவித்திருந்தார்.

எனினும் இந்தக் காலப் பகுதியில் யுத்தம் இடம்பெற்ற பகுதிக்கான கப்பல்கள் எவையும் பயணிக்கவில்லை.

இதனால் மருந்துப் பொருட்கள் காயமடைந்த மக்களை சென்றடையவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் கிலாரி கிளின்டனினால் கையொப்மிடப்பட்ட மிகவும் இரகசியமான ஆவண மாக குறிப்பிடப்பட்ட கடிதம் ஒன்றையும் விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ளது.

இந்தக் கடிதத்தில் 2009ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18ஆம் திகதி இலங்கை வந்திருந்த பௌச்சர், வன்னியில் பொதுமக்களுக்காக அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு வலயத்தின் மீது இராணுவத்தினர் எறிகணைகளை வீசுவது குறித்து ஆராய்ந்த தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் காலப் பகுதியில் அவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்த போது பாதுகாப்பு வலயங்களின் மீது செல்வீச்சுக்கள் நடத்தப்படவில்லை என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

எனினும் அவரது சகோதரான பசில் ராஜபக்ஷ, பாதுகாப்பு வலயங்கள் மீது சில வேளைகளில் ஷெல் வீச்சு நடத்தப்பட்டிருக்கலாம் என்று குறிப்பிட்டதாக அமெரிக்கத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

பொதுமக்களின் பாதுகாப்பு வலயங்களின் மீது தாக்குதல் நடத்தக்கூடாது என்று இராணுவத்தினருக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் அந்த உத்தரவு மீறப்படவில்லையென்றும் ஜனாதிபதி உறுதியளித்ததாக அமெரிக்கத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-2)

## படகு கடலில் மூழ்கியது...

மைல்கள் தொலைவிலும் அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவில் இருந்து 220 கடல் மைல் தொலைவிலும் இருந்தாக தெரிவிக்கப்படுகின்றது.

அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டதை அடுத்து முதலாவது தேடுதல் குழு நடவடிக்கையில் ஈடுபட்டபோது 7 மணித்தியாலங்கள் கடந்திருந்தது.

வர்த்தக கப்பல் ஒன்றினால் முதலாவது நபர் மீட்கப்பட்டபோது புகலிடக் கோரிக்கையாளர்கள் ஜாவா கரையில் இருந்து 40 கடல் மைல் தூரத்திற்கு அடித்துச் செல்லப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிர் தப்பியவர்களில் ஒருவரான முகமட் அலி(வயது 53) கூறுகையில்; படகு உடைந்த பின்னரும் நாம் அனைவரும் உயிருடன் இருந்தோம். இந்தோனேசியப் படகுகள் 4,5 மணித்தியாலங்கள் அப்பகுதியில் சுற்றிக் கொண்டு இருந்தன.

நாம் உதவி உதவி என்று கத்தினோம். அவர்கள் எம்மைப் பார்க்கவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பல மணித்தியாலங்கள் தனது கைகளைப் பற்றியவாறு நீரில் தத்தளித்துக் கொண்டிருந்த தனச சகோத ரிகளைப்பினால் நீரில் மூழ்கி விட்டதாக 25 வயதான முகமட் சாகீர் என்பவர் கூறியுள்ளார்.

நாம் கடுமையாகக் களைத்திருந்தோம். மிகவும் களைப்புற்றவர்கள் அலையினால் அடித்துச் செல்லப்பட்டனர். அவர்களில் பெண்கள் சிறுமிகள்சிறார்களும் அடங்குவர் எனஅவர் கூறினார்.

அவுஸ்திரேலிய கடற்படை மற்றும் வர்த்தக கப்பல்களால் காப்பாற்றப்பட்டவர்களும் இந்தோனேசிய கப்பல் ஒன்றிற்கு மாற்றப்பட்டு இந்தோனேசியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் இருந்து இலங்கை அகதிகளை அழைத்துவர ஏற்பாடு

(கொழும்பு)

இந்தியாவில் வசித்துவரும் இலங்கை அகதிகளை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவது குறித்து அடுத்த வருடம் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என மீள்குடியேற்ற அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் உள்ள அகதிகளை மீள் குடியேற்றும் நடவடிக்கை நிறைவுக் கட்டத்தை எட்டியுள்ள நிலையில் இந்தியாவில் உள்ள அகதிகளை நாட்டுக்கு அழைத்து வருவது குறித்து கவனம் செலுத்தியுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 112 முகாம்களிலும் ஏனைய பகுதி முகாம்களிலும் ஒரு இலட்சம் வரை இலங்கை அகதிகள் தங்கியுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் அகதிகள் அமையத்தின் ஒத்துழைப்புடன் கடந்த காலங்களில் 5 ஆயிரம் அகதிகள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இதேவேளை, புனர்வாழ்வு பெற்ற மேலும் ஒரு தொகுதி முன்னாள் போராளிகள் இன்று சமூக மயப்படுத்தப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (ந-11)

## சூடானுடனான ...

நிலையங்களுக்கும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கும் சென்றதுடன் பாதுகாப்பு அமைச்சர் அப்துல் ரஹீம் மொகமட் ஹுசேன், பாதுகாப்புச் செயலர் ஜெனரல் அப்துல் ரஹ்மான் மொகமட் சய்ன் உள்ளிட்ட பல பலருடன் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

கார்டும் பாதுகாப்புக் கல்லூரியில் தீவிரவாதத்தைத் தோற்கடித்த மற்றும் புனர்வாழ்வு, புனரமைப்பு, நல்லிணக்கம் ஆகியவற்றில் இலங்கையின் அனுபவங்கள் என்ற தலைப்பில் கோத்தபாய ராஜபக்ஷ உரையாற்றியுள்ளார்.

இந்தப் பயணத்தின் முடிவில் இரு நாட்டு இராணுவங்களுக்கும் இடையில் பயிற்சித் துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்திக் கொள்வது குறித்த புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றும் கையெழுத்திடப்பட்டுள்ளது. (ந-11)

# மிளகாய்த்தூள் தூவி திருட்டு முயற்சி

பாதுகாப்பு உத்தியோகத்தரை தாக்கி அவர் மீது மிளகாய்த் தூளை வீசி திருட்டு முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது பாதுகாப்பு உத்தியோகத்தர் கூக்குரலிட அத்திருட்டுச் சம்பவம் முறியடிக்கப்பட்டுள்ளது.

மிருவில் ஆசைப்பிள்ளை ஏற்றப் பகுதியில் நேற்றிரவு 10.45 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மிருசுவில் ஆசைப்பிள்ளை ஏற்றப் பகுதியில் அமைந்துள்ள சீமெந்துக் கலவை கட்டிடத் தொழில் செய்யும் இடத்தில் நேற்றிரவு முகமூடி அணிந்த 3 திருடர்கள் பாதுகாப்பு உத்தியோகத்தரைத் தாக்கிவிட்டு அவர் மீது மிளகாய்த் தூளை வீசிவிட்டு திருட்டு முயற்சியில் ஈடுபட எத்தனித்துள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளான பாதுகாப்பு உத்தியோகத்தர் திருடன் என கூக்குரல் எழுப்பிய நிலையில்;, அத்திருடர்கள் பாதுகாப்பு உத்தியோகத்திரிடம் இருந்த கைத்தொலைபேசியை அபகரித்துக் கொண்டு சென்றுள்ளனர்.

மிருசுவில் கரம்பொன் பகுதியினைச் சேர்ந்த உதயகுமார் பகீரதன் (வயது 22) என்ற பாதுகாப்பு உத்தியோகத்தரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ந-85)

## இந்தியாவிற்கு ஏற்ற ...

குறுகிய கால அரசியல் தீர்வுத்திட்ட அமுலாக்கம் போன்றன தொடர்பில் தற்போதைக்கு எதனையும் குறிப்பிட முடியாது என அவர் குறிப்பிட்டிருந்தார்.

2009ஆம் ஆண்டு யூன் மாதம் 2ஆம் திகதி இந்தக் குறிப்பு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

தமிழ் இடம்பெயர் மக்கள் நிலைமை மற்றும் அரசியல் தீர்வுத் திட்டம் குறித்த இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ள இந்தியா ஆர்வம் காட்டி வருவதாக குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ந-11)

## அடுத்த பிரதமர் ...

எனவும் அநுரகுமார தெரிவித்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேனவுக்கோ அல்லது நிமல் சிறிபால டி சில்வாவுக்கோ பிரதமர் பதவியை வழங்கினால் அதனை தமது குடும்பத்தினரால் (ராஜபக்ஷ குடும்பம்) மீளப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுவிடும் என்ற காரணத்தினாலே ஜீ.எல்.பீரிசுக்கு இந்தப் பதவியை வழங்க மகிந்த ராஜபக்ஷ விரும்புகின்றார்.

ஜீ.எல்.பீரிஸைப் பொறுத்த வரையில் அவரின் பின்னர் பிரதமர் பதவியை வகிக்க அவரது குடும்பத்தில் அரசியல் வாரிசுகள் எவரும் (பரம்பரை அரசியல்) இல்லை என்பதனையும் மனதில் கொண்டே ஜனாதிபதி இந்த முடிபுக்கு வந்துள்ளார் எனவும் அவர் கூறியுள்ளார். (ந-11)

## ரணில் இருக்கும் ...

தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்க இருப்பதையே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விரும்புகின்றார்.

தினமும் ரணிலுடன் தொலைபேசியில் கதைத்து சுகநலம் விசாரித்துக் கொள்வார். எனவே ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் ஆட்சிக்கு வராது. குறைந்தது இன்னும் 20 வருடங்களுக்கு வேறு எந்த அரசும் இந்நாட்டில் ஆட்சிக்கு வரப் போவதில்லை.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு ஆசனம் குறைவென்றே அரசிலிருந்து பிரிந்து தனியாகப் போட்டியிடுகின்றது. தேர்தல் வேளையில் அரசுடனிருப்பவர்களுக்கே நாம் கூடிய அபிவிருத்தியைக் கொடுப்போம்.

வெற்றிலைச் சின்னமே கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெறும்.

மட்டக்களப்பில் தமிழ் பகுதிகளில் அனேகமான மக்கள் இத்தேர்தலில் தமிழ்க் கூட்டமைப்புக்கு வாக்களிக்கப் போவதில்லை. தமிழ்க் கூட்டமைப்பு தமிழ் மக்களை ஏமாற்றுகின்றது.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் பிள்ளைகள் யுத்தத்திற்குப் போகவில்லை. இந்த பகுதி அப்பாவி இளைஞர்களே யுத்தத்திற்குப் போய் மடிந்தனர்.

முஸ்லிம் காங்கிரஸ் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு ஆசனத்தையும் கைப்பற்றாது.

எனவே அரசாங்க கட்சிக்கு அனைவரும் வாக்களிக்க முன்வர வேண்டும் என அவர் குறிப்பிட்டார். (ந-11)

## ஈரான்-இலங் ...

கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஈரானின் உயர் தலைவர் அயத்துல்லா கொமேனியை சந்தித்துள்ளார்.

இதன்போது கருத்துரைத்த ஈரானின் உயர் தலைவர் அயத்துல்லா கொமேனி, அதிகாரம் கொண்ட சில நாடுகள் ஊடகங்களையும் அரசியல் பலத்தையும் பயன்படுத்தி தம்மைப் பலம்மிக்க நாடுகளாகக் காட்ட முயற்சிக்கின்றன.

எனினும் ஈரான் மற்றும் இலங்கை போன்ற நாடுகள் இந்த முயற்சிகளை முறியடித்து வருவதாகக் குறிப்பிட்டார்.

இந்நிலையில் ஈரான் இலங்கைக்கு வழங்கிவரும் உதவிகளுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதன்போது தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். (ந-11)

## பிலிப்பைன்ஸ் ...

இப்பூகம்பத்தை அடுத்து பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, தாய்வான், ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இப் பூகம்பத்தினால் இலங்கைக்கு ஆபத்து இல்லையென இலங்கையின் அனர்த்தன முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ந-11)

## இலங்கையர்கள் ...

இயந்திரம் பழுதடைந்துள்ளது. இதனையடுத்து 9 நாட்களாக அவர்கள் உணவு மற்றும் நீரின்றி இருந்துள்ளனர்.

இந்தப் படகில் 4 பெண்களும், 3 சி[illegible]களும் இருந்ததாக இந்தோனேசிய [illegible]ஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் வன்முறைகள் கா[illegible] மாகவே தாம் அவுஸ்திரேலியாவுக்கு தப்பிச் சென்றதாக இந்த அகதிகள் தெரிவித்துள்ளனர். (ந-11)


# உளமார்ந்த நன்றிகள்

எனது தாயார் **திருமதி இராசையா சரஸ்வதி** அவர்கள்



கடந்த 25.08.2012 சனிக்கிழமை சிவபதமடைந்த செய்தியறிந்து பத்திரிகை வாயிலாக அஞ்சலி செலுத்தி எம் துயரில் பங்கு கொண்ட பெஷன் ஹவுஸ் உரிமையாளரும் எனது ஆருயிர் நண்பருமான திரு.த.கந்தசாமி அவர்கட்கும், திருநெல்வேலி ஐங்கரன் களஞ்சியம், கந்தவேள் களஞ்சியம் உரிமையாளர், ஊழியர்களுக்கும், கவிதாஞ்சலி மற்றும் மலர் வளையம் மூலம் அஞ்சலி செலுத்திய அஸ்வினி மல்ரி பிளாசா- யாழ்ப்பாணம்,கிளிநொச்சி முகாமையாளர் மற்றும் பணியாளர்களுக்கும், விஸ்நா விஷன் கலர்லாப்- உரிமையாளர், ஊழியர்களுக்கும் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் மூலம் துயரில் பங்குகொண்ட நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.சி.மாணிக்கராசா குடும்பத்தினருக்கும், சன் சுப்பர் மார்க்கற் நிறுவனத்தினருக்கும் மற்றும் தொலைபேசி, தந்தி மூலம் எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் இறுதி நிகழ்வில் நேரடியாகப் பங்குகொண்டு எம்முடன் தோளோடுதோள் நின்று எமக்கு அனைத்து வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றியறிதலைச் சமர்ப்பிக்கின்றோம்.

கோண்டாவில் கிழக்கு
கோண்டாவில்.

இ.குவேந்திரநாதன் (ராசா) குடும்பத்தினர்
ராஜா பிளாசா

(322)



# நியூசிலாந்து Student Visa
# IELTS தேவையில்லை

A/L மட்டும் போதுமானது.

25 வயதுக்கு உட்பட்ட இளைஞர், யுவதிகள் 30 பேருக்கு மட்டுமே எம் மூலம் அனுமதி கிடைக்கும்.

வேறு ஒருவரின் கணக்கில் உள்ள பணத்தை வங்கி அனுசரணையாகக் காட்டக்கூடிய அரியவாய்ப்பு.

2வருடங்களில்நிரந்தரகுடியுரிமைபெறஅருகதையு[illegible] பகுதிநேர தொழில்வாய்ப்பும்.

முந்துபவர்களுக்கே முன்னுரிமை.

கல்லூரிக் கட்டணம் வங்கி ஆணை Bank Draf[illegible] மூலம் பாதுகாப்பாக செலுத்தப்படும்.

புதன்கிழமைகளில் விடுமுறை

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்** (PV82703)

'முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்



37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
0212219016

(C-898)



# PATRICIAN INSTITUTES
# பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

புதிய பயிற்சிகள் ஆரம்பம்

ஆரம்பம்: 03.09.2012

**Computer courses**
Advanced in computer programming, Diploma in Microsoft Office, Diploma in Desk Top Publishing,Diploma in Video Editing,Diploma in Type Setting,Diploma in Computerized Accounting, Diploma in Software Engineering, Diploma in Micro media,Diploma in Web Multimedia, Professional Diploma in Graphic Design, Computer HardwareTechnology, Internet & E-mail,General Information Technology(GIT), Information& Communication Technology(ICT),Children's Kids

**Typing courses**
Short Hand Typing(English),Short Hand Typing(Tamil),

**Engineering courses**
General Motor Mechanism, Motorcycle Mechanism,General Electrician(Wiring& Re-winding),Radio & T.V Repairing,Lathe Machine Operation ,Arc Welding ,Carpentry(with use of machinery),Refrigeration and Air Conditioning.

மேலதிக விபரங்களுக்கு:
Registrar, Patrician Institute, 61, St.Patricks Road, Jaffna. T.P.No:021 222 6148

(C-897)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.